# குற்றவாளி யார்?

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

ஆசிரியர்

**சம்பூ ரத்ன தூபே**

தமிழாக்கியவர்

**அலமேலு தேவி**

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

**அன்னை நிலையம்**

ராயவரம் :: புதுக்கோட்டை ஸ்டேட்

*Univ. Grants Commission.*

முதற் பதிப்பு: ஏப்ரல் 1946

பிரசுர உரிமை
அன்னை நிலையம்

விலை ரூ. மூன்று.
தபால் செலவு தனி

அச்சிட்டோர்:
பாப்பா பிரஸ்
ராயவரம்: புதுக்கோட்டை ஸ்டேட்

# பதிப்புரை

இச் சிறு நூல் சம்பூ ரத்ன தூபே அவர்கள் ஹிந்தியில் எழுதிய நாவலின் மொழி பெயர்ப்பாகும். இதில் தற்காலத்தில் பெண்களுக்கு அளிக்கப்படும் கல்வியினால் ஏற்படும் விபரீதங்களை வெகு ரஸமான முறையில் ஆசிரியர் விளக்கியிருக்கிறார். இதை ஸ்ரீமதி அலமேலு தேவி அவர்கள் மூல ஆசிரியரின் கருத்துக்கிணங்க தெளிவான முறையில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

எங்கள் நிலைய வெளியீட்டின் முதலாவது புத்தகம் இதுவே. இதைத் தொடர்ந்து பல அரிய நூல்கள் வெளிவரும். இவைகளைத் தமிழன்பர்கள் நன்கு ஏற்று ஆதரிப்பார்களென நம்புகிறோம்.

சமர்ப்பணம்

தலைவர் ஸ்ரீ [redacted]

அவர்களுக்கு

# அறிமுகம்

நான் தமிழ் அறியாதவனுகையால் என் கதையான 'குற்றவாளி யார்?' என்னும் நூல் எவ்வாறு அமைந்திருக்கிறது என்று அறியக் கூடவில்லை. ஸ்ரீமதி அலமேலுதேவி அவர்கள் சிலாக்கியமான முறையில் தமிழில் மொழி பெயர்த்திருப்பார்களென்று நம்புகிறேன்.

என் நூலின் லட்சியத்தை என் ஹிந்தி முகவுரையில் விஸ்தாரமாக எழுதியுள்ளேன்.

இந் நூலை தமிழ்நாட்டு அன்பர்களுக்கு மொழிபெயர்த்து உதவியுள்ள ஸ்ரீமதி தேவியவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிப்பதோடு, தமிழர்கள் அவரிடம் நன்றியறித லுள்ளவர்களாக இருப்பார்களென்று நம்புகிறேன்.

6—3—'46. (Sd) S. R. தாபே.

# ஆசிரியர் முன்னுரை

ஸர். S. ராதாகிருஷ்ணன் 'ஹிந்து வாழ்க்கையின் லட்சியம்' என்னும் நூலில் பின்வருமாறு எழுதி யிருக்கிருர்:—"வெகுகால உறக்கத்திற்குப் பிறகு ஹிந்து மத தர்மத்தில் விழிப்புக்குறிகள் காணப்படுகின்றன. அர்த்தமற்ற பழய ஆசார அனுஷ்டானங்களை அகற்றி வருகிருேம். கால தேச வர்த்தமானத்திற் கேற்ப நவீன முறைகளை பின்பற்றுகிருேம். ஆனல், நம் ஜனசமூகத் தில் வேரூன்றியிருக்கும் ஹிந்துமத தர்மம் என்றும் நிலைத்திருக்கும்.

ஆகையால், நம் மத தர்மத்தை வளர்க்கக் கூடிய எந்த முயற்சியும் போற்றத்தக்கது."

மேலும், ஹிந்தி பிரபல கவியான ஸ்ரீமான் சுதர்சன் அவர்கள் ஓரிடத்தில், "நாம் நீதிகள் நிறைந்த சுவாரஸ்ய மான கதைகளையே விரும்புகிருேம். ஐரோப்பியர்கள் இயற்கைக்கு அடிமைப்பட்டவர்கள். பாரத நாட்டினர் தர்மத்திற்குத் தலைவணங்குபவர்கள். நம் நிலைமை எவ் வளவு கஷ்டமாயிருந்த போதிலும், நம் வாழ்க்கை உயர்ந்த லக்ஷியங்களை கொண்டதாயிருக்கிறது," என்று எழுதியிருக்கிருர்.

மேற்கூறிய அறிவாளர்களின் கொள்கையை அனு சரித்து, இந்நாவல் ரஸமாகவும், நீதி நிறைந்ததாகவும் இருக்கும்படி எழுத எண்ணங் கொண்டேன். சாரமில் லாது, நீதி புகட்டாத கதைகள் எழுத எனக்குப் பிடிக்க வில்லை.

என் கதையின் மூக்ய பிரச்னை பெண் கல்வி.

பெண்களுக்கு கல்வி அவசியமில்லையென்று நாம் ஒருசமயம் சொல்லிக் கொண்டிருந்தோம். பிறகு, விழிப் படைந்தோம். பெண்களுக்கு, கல்வி அவசியம் என்பதை உணர்ந்து அவர்களை பள்ளிக்கும், கலாசாலைக்கும் அனுப்ப ஆரம்பித்தோம். அதன் பலனாக அவர்கள் பட்டம் பெற்றுக்கொண்டு வெளிக்கிளம்பினர். உயர்ந்த படிப்பின்மூலம் விவேகத்தை யடைந்து, லட்சிய–மனைவி யாகவும், லட்சிய–தாயாராகவும் ஆகவேண்டுமென்று எதிர்பார்த்தோம்.

ஆனால், ஆங்கிலப் படிப்பின் பயன் அவர்களுடைய பெண் தன்மையை அகற்றிவிட்டது. இதனால் சமூகத்தில் ஒரு பரபரப்பேற்பட்டிருக்கிறது. அர்த்தமற்ற பழய கொள்கைகளை விலக்கி புதுமையை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், விபரீதமான வழியில் செல்லுதல் கூடாது. இதையொட்டியே இந்நாவல் எழுதி யுள்ளேன்.

சம்பூ ரத்ன தூபே.

# மொழி பெயர்ப்பாளரின்

# முகவுரை

**வ**ட இந்திய ஆங்கிலப் பத்திரிகையான 'மாடர்ன் ரிவ்யூ'வில் 'குற்றவாளி யார்?' என்னும் இந்த ஹிந்தி நூல் வெகு சிலாக்கியமாக விமரிசனம் செய்யப்பட்டிருந்தது. நூலைத் தருவித்துப் படித்துப் பார்த்தேன். குடும்பப் பாதுகாப்பிற்கு அவசியமில்லாத படிப்பை, பெண்கள் பெறுவதும், அதன் பயனாய் அவர்களிடம் ஏற்படும் விபரீத குணத்தையும் ஹிந்தி நூலாசிரியர் வெகு ரஸமான முறையில் எழுதியிருக்கிறார். தேசத் தலைவர்களும் தேசப் பிரமுகர்களும், பெண்களுக்கு அளிக்கப்பட வேண்டிய கல்வி முறையைப்பற்றி ஆங்காங்கு நடத்தும் சொற்பொழிவுகளின் எதிரொலியே போல் இந்நாவல் அமைந்திருக்கிறது. ஹிந்தி நூலை தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்ற ஆவல் தோன்றி அவ்விதமே செய்துமுடித்தேன்.

இந்நூலை மொழிபெயர்க்க அனுமதியளித்த ஸ்ரீமான் சம்பூ ரத்ன தூபே அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

இந்நூலை பிரசுரத்திற்கு ஏற்றுக்கொண்ட அன்னை நிலையத்தாருக்கு என் மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். வாசகர்கள் இந்நூலை ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அலமேலு தேவி.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# 1

டாக்டர் அசோக் குமார் தன் இருபத்தைந்தாவது வயது வரை புத்தக உலகை விட்டு வெளி விவகாரங்களில் ஈடுபடவில்லை. கலாசாலையே அவர் உலகம்; ஆசிரியர்களே அவருடைய தெய்வங்கள்; புத்தகமே அவருக்கு உற்ற துணைவன்; ஆராய்ச்சியே அவர் வாழ்க்கையின் லட்சியம். எம். எஸ். ஸி. பரீட்சையில் முதன்மையாகத் தேரியதனால் அவருக்கு உபகாரச் சம்பளம் கிடைத்தது.

ஐந்து வருஷம் ஐரோப்பாவில் படித்த பிறகு டி. எஸ். ஸி. பட்டத்துடன், விஞ்ஞான ஆராய்ச்சியில் அநேக விஷயங்களை புதிதாய்க் கண்டு பிடித்த புகழோடு தன் தாய் நாடான இந்தியாவிற்குத் திரும்பி வந்தார்.

இச் சிறு வயதில் அசோக் குமாரின் பாண்டித்யத்தைக் கண்டு, ஐரோப்பாவிலுள்ள பெரிய மேதாவிகளும் அதிசயித்தனர்.

அவருடைய புகழைக் கேட்டு பம்பாய் விச்வ வித்யாலயத்தார் ஆயிரத்து இருநூறு ரூபாய் மாதச் சம்பளத்தில் தங்கள் கலாசாலையில் ப்ரொபஸராக அவரை நியமித்தனர். பம்பாய் துறைமுகத்தில் அசோக் குமாரை வரவேற்க, கலாசாலை ஆசிரியர்களும், நகரப்பிரமுகர்களும், பத்திரிகை நிருபர்களும் கப்பலின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆனால், கீர்த்தியுடன் திரும்பும் தன் மகனைக் கண்டுகளிக்க அசோக் குமாரின் தந்தை அக் கூட்டத்தில்

இல்லை. மகனின் நன்மையைக் கருதி மறு விவாகம் செய்து கொள்ளாமல் அசோக் குமாரை அருமையாய் வளர்த்து வந்தார். ஜாதியைவிட்டு விலக்கி விடுவார்களோ யென்று பயப்படாமல் அசோக் குமாருக்குப் படிப்பிலுள்ள ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கண்டு அயல் நாட்டுக்குச் செல்ல பூரண சந்தோஷத்துடன் அநுமதி கொடுத்தார். அசோக் குமார் ஐரோப்பாவில் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே அவர் உயிர் துறந்தார்.

கப்பல் வந்து நின்றது. யாத்ரீகர்கள் ஒவ்வொருவராக இறங்கினர். அசோக்குமார் புன்னகைதவழும் முகத்துடன் அங்கு கூடியிருந்த அனைவருக்கும் வணக்கம் செலுத்தினர். கலாசாலை பிரின்ஸிபால் அவரை எல்லோருக்கும் அறிமுகப் படுத்தினர். பத்திரிகை நிருபர்கள் தங்களுக்கு ஏதேனும் செய்தி தருமாறு அவரை வேண்டிக்கொண்டனர். அவர் எல்லோருக்கும் இந்த பதிலைத்தான் அளித்தார்:

"நான் என் தாய்நாட்டிற்கு வந்து சேர்ந்ததை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். நான் விஞ்ஞான மாணவன்; ஆராய்ச்சியின் மூலமாக உலகத்திற்கு என்னால் முடிந்த சேவையை செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்!"

## 2

"பாபு! எஜமான் மரணத்தருவாயிலிருக்கும்பொழுது என்னைத் தவிர வேறு ஒருவரும் அவர் அருகில் இல்லை. அவர் கடைசிவரையில் "கோபிநாத்! அசோக் சிறு குழந்தை. அவனுக்கு உலக விவகாரம் ஒன்றும் தெரி

யாது. படிப்பிலேயே மூழ்கிய அவனுக்கு ஜனங்களின் போக்கு ஒன்றும் தெரியாது. நீதான் அவனைப் பார்த்துக்கொள்ள வேண்டும்'' என்று என்னிடம் புலம்பிக் கொண்டே உயிர் நீத்தார்! கோபிநாத் கண்ணீர் விட்ட வண்ணம் அசோக்குமாரிடம் இவ்வாறு சொல்லிக்கொண்டிருந்தான். இதைக் கேட்டதும், தன் தந்தையின் உருவமும், தன்னிடம் அவர் வைத்திருந்த அன்பும், தான் சிறு வயதில் அவரிடம் விளையாடியதும் அசோக் குமாரின் மனக்கண் முன் சினிமாப் படம் போல் தோன்றியது.

"யஜமான், தாங்கள் வந்தவுடன் இந்தக் கடிதத்தை தங்களிடம் கொடுத்து விடும்படி சொல்லி யிருந்தார். ஸ்ரீராமசந்திரரிடம் ராஜ்யத்தை ஒப்படைத்தபிறகு பரதனின் மனம் சாந்தியடைந்ததுபோல் தங்களிடம் இவைகளையெல்லாம் ஒப்புவித்த பிறகுதான் என் மனம் சாந்தியடைகிறது!'' என்று பெருமூச் செறிந்தவாறே கோபிநாத் அந்தக் கடிதத்தையும் சில சாமான்களையும் அசோக் குமாரின் முன் வைத்தான். அசோக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தார். தந்தையின் கையெழுத்தைப் பார்த்ததும் அவர் கண்கள் கலங்கின. கோபிநாத் மீண்டும், "எஜமான் எப்பொழுதும் தங்கள் கலியாணத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்........'' என்று மேலும் ஏதோ சொல்ல விருந்தகோபியை அசோக் குமார் நடுவில்நிறுத்திவிட்டார். "கோபி! அதற்குள் எனக்கு விவாகம் எதற்கு? கலியாணமென்றால் என்னைப் பொறுத்த வரையில் அதை ஒரு கால் கட்டாய் நினைக்கிறேன்! அந்த உபத்திரவத்திற்கு இப்பொழுது நான் தயாராயில்லை'' என்று அசோக் தீர்மானமாய் பதில் அளித்தார்.

"ஆனல், கலியாணம் என்பது வாழ்க்கையில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியல்லவா?'' என்றான் கோபி.

"இருக்கலாம்! ஆனல், கலியாணத்தினல் என் முயற்சிகளெல்லாம் தடைப்பட்டுவிடும். எனக்கு இப்பொழுது

அவசரமில்லை!" என்ருர் அசோக்குமார். சின்ன எஜமானின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்ட பிறகு கோபிநாத் பேசாமலிருந்து விட்டான்.

கேவலம் பணத்தையே பிரதானமாகக் கருதும் நன்றியில்லாத வேலைக்காரர்களின் வர்க்கத்தைச் சேர்ந்தவனல்ல கோபிநாத். தன் எஜமானரிடம் தேவதா விசுவாசம் கொண்டவன். அந்தக் குடும்பத்தில் அவனும் ஒருவனுகவே இருந்தான். துக்ககரமான வாழ்க்கையில் அந்தரங்கமாய் அன்புடன் சேவை செய்வதே அவன் தன் கடமையென்று எண்ணி மனதிற்கு சாந்தியைத் தேடிக் கொண்டிருந்தான். இல்லாவிடில், இந்த சாதாரண சம்பளத்திற்கு ஓர் இடத்தில் வேலைக்காரனுய் ஏன் அமர்கிருன்?

## 3

தாரக்நாத் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் மனைவி மாயா அவருக்குப் பரிமாறிக் கொண்டிருந்தாள். சற்று முன் நடந்த தர்க்கத்திற்குப் பிறகு அவ்விருவரும் மௌனமாய் தத்தம் காரியத்தில் ஈடுபட்டிருந்தனர். தாரக்நாத்தின் முகபாவத்திலிருந்தே அவர் ஆழ்ந்த யோசனையிலிருப்பதாகத் தோன்றியது. 'கடவுளின் இஷ்டப்படி நடக்கட்டும்' என்பது போலிருந்தது மாயாவின் முகத் தோற்றம்.

ஆனல், அதிகநேரம் மாயாவினல் மௌனமாயிருக்க முடியவில்லை. "கலியாணம் வேண்டுமானுல் எப்பொழுது உங்களுக்கு இஷ்டமோ, அப்பொழுது செய்துகொள்

ளுங்கள்! இத்தனை வயதான பெண்ணை இன்னும் படிக்க அனுப்புவது கொஞ்சங்கூட நன்றாயில்லை. அவள் உத்யோகம் பண்ணப் போகிறாளா என்ன?'' என்று மறுபடியும் கேட்டாள்.

“நமக்கு இருப்பதெல்லாம் சாலினி ஒருவள்தான். ஆண் குழந்தையும் அவள்தான்; பெண் குழந்தையும் அவள்தான். நமக்கு ஒரு பிள்ளையிருந்தால் அவனைப் படிக்க வைக்க மாட்டோமா? அந்த ஆசையை இவள் மூலமாக பூர்த்தி செய்து கொள்கிறேன்'' என்றார் தாரக் நாத்.

“உங்கள் ஆசை இதனால் நிறைவேறலாம். ஆனால், இந்தப்படிப்பினால் அவளுக்கு நன்மையொன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பெண்களுக்குரிய அடக்கம், ஒடுக்கம், குணம் ஏதாவது அவளிடம் இருக்கிறதா? ‘தாம், தூம்’ என்று நாளுக்கு நாள் அவள் அட்டகாசமும், ஆர்ப்பாட்டமும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. பெண்ணாய்ப் பிறந்தது இப்படியா யிருக்கும்!'' என்று மாயா தன் மனதிலிருந்ததைக் கொட்டினாள்.

தாரக் நாத்திற்கு என்ன பதில் சொல்லுவதென்று புரியவில்லை. “சரிதான்! ஆனால்...'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தார் தாரக் நாத். அதற்குள் மாயா குறுக்கிட்டு, “ஆனால் என்ன? இந்தப் பெண்ணை இப்படி தான்தோன்றியாய் விட்டிருப்பது நல்லதிற்கில்லை! இப்படியே அவளை விட்டுக்கொண்டிருந்தால் ஒருநாள் நமக்கு அவமானத்தைக் கொணர்ந்து வைப்பாள்!'' என்று மாயா பொரிந்தாள். “வரன் சீக்கிரம் கிடைத்துவிடும். உன் இஷ்டப்படி கூடிய சீக்கிரம் கலியாணத்தை நடத்தி விடுகிறேன். பேசாமலிரு!'' என்று கூறிக்கொண்டே சாப்பிட்டுவிட்டு கையை அலம்பினார் தாரக் நாத்.

“வரன் சீக்கிரம் கிடைத்துவிடும், கலியாணம் சீக்கிரம் நடத்தி விடுகிறேன் என்றெல்லாம் எனக்கு சமாதானம்

சொல்லுவீர்கள். கிட்டி முட்டிப்போனால் இன்னும் வரன் தேடவே ஆரம்பிக்கவில்லை என்பீர்கள்!'' என்றாள் மாயா. அவள் கண்களில் நீர் ததும்பியது.

இந்த சமயத்தில் தாரக் நாத்தை யாரோ கூப்பிடவே அவர் மேல் துண்டை உதறிப் போட்டுக்கொண்டு வெளியே சென்றார்.

# 4

சமூக விஷயங்களைப் பற்றியோ, நம் வாழ்க்கையைப் பற்றியோ, இன்னும் தேசத்தின் வித விதமான பழக்க வழக்கங்களையோ, நாம் பிரபலமடைந்த மனிதர்களிட மிருந்து, அவர்களுடைய அபிப்பிராயங்களை அறிய விரும்பு கிறோம். நாம் மாத்திரம் என்பதில்லை. அன்னிய தேசத்து ஜனங்களுக்கும் இந்த வழக்கம் படிந்திருக்கிறது.

நம் மதிப்புக்குப் பாத்திரமான ஒருவரை மற்றவர் களும் கொண்டாட வேண்டுமென்பதற்காக நாம் அவரை வேறு வழியில் இழுக்கிறோம். இந்த நிலைமைதான் அசோக் குமாருக்கு ஏற்பட்டது.

விஞ்ஞானத்தைத் தவிர வேறு விஷயம் ஒன்றையும் அவர் கவனிப்பதில்லை. சமூக விவகாரங்களைப் பற்றியோ, ராஜீய விஷயங்களைப்பற்றியோ சிந்தனை செய்யக்கூட அவ ருக்கு அவகாசம் கிடைக்காது. ஜனங்களின் இடைவிடாத தூண்டுதலின்பேரில் 'இந்திய ஸ்திரீகளும், ஐரோப்பிய ஸ்திரீகளும்' என்னும் விஷயத்தைப் பற்றி பிரசங்கம் செய்வதாக அவர் ஒப்புக்கொண்டுவிட்டார்.

பிரசங்கம் செய்வதாகவோ ஒப்புக்கொண்டு விட்டார். ஆனல், விஷயம் என்ன? என்ன பேசுவது? இந்தப் பிரச்னையின் சிக்கலான விஷயத்தை அவரால் ஆராய்ந்து பார்க்க முடியவில்லை. விஞ்ஞான ஆராய்ச்சியில் நிபுணரான அசோக் குமார், இன்றைய சமூகத்திலிருக்கும் ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்வதற்கு, தான் அசமர்த்தனய் இருப்பதை எண்ணி தன்னையே நொந்துகொண்டார். சாரமற்ற ஓர் உபந்யாசம் எழுதி அதை மனப்பாடம் செய்துகொண்டார்.

விச்வ வித்யாலய பிரசங்க மண்டபத்தில் ஜனங்கள் ஒரே கூட்டமாய் கூடியிருந்தனர். இன்று பிரசங்கம் எப்படி அமையுமோ என்ற கவலையுடன் அசோக் குமார் உட்கார்ந்திருந்தார். மணி எட்டு அடித்ததும் கலாசாலை பிரின்ஸிபால் அக்ராசனதிபதி பீடத்தில் அமர்ந்தார். பிறகு, அசோக் குமாரை எல்லோருக்கும் அறிமுகப் படுத்தி விட்டு, அவரைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

அசோக் குமார் மிக்க அழகுவாய்ந்தவனில்லை; ஆனல் குரூபியு மில்லை.

உயர்ந்த கல்வியும் மேலான எண்ணங்களும், வாலிபத்தின் பொறுமையற்ற, நிதானமில்லாத சுபாவங்களையெல்லாம் அவரிடமிருந்து விரட்டியிருந்தன. அதற்குப் பதிலாக, விவேகமும், அடக்கமும் அவரிடம் காணப்பட்டன. ஜனங்களை வசீகரிக்கும்படியான ஒரு கம்பீரமும் பிரகாசமும் அவர் முகத்தில் குடிகொண்டிருந்தன.

அசோக் குமார் பார்த்துப் பேச ஆரம்பித்தார். ஏனெனில், புதிதாகப் பேச ஆரம்பிப்பவராதலால் சபையை ஒரு 'வகுப்பாய்' மனதில் எண்ணிக்கொண்டு பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார்:

"சகோதர, சகோதரிகளே! இன்று நான் சொல்லப்போகும் விஷயம் 'இந்திய ஸ்திரீகளும், ஐரோப்பிய

ஸ்திரீகளும்' என்பதாகும். இங்கு கூடியுள்ள அனைவருக்கும் நான் சொல்லப்போகும் விஷயம் திருப்தியளிக்குமா வென்று என்னுல் நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஆனுல், பேசுவதாக ஒப்புக் கொண்டு விட்டேன். ஆகையால் என் கடமையைச் செய்து விடுகிறேன்.

ஐரோப்பிய தேசங்களின், பலத்தையும் கல்வியையும் நாகரிகத்தையும் பார்த்து இன்று நாம், தலைகுனிந்தவர்களா யிருக்கிறோம். அவர்கள் படித்தவர்கள்; நாம் படித்தவர்களில்லையா? பின் ஏன் இப்படி?

இதற்கு எல்லோரும் பதில் சொல்லிவிடலாம். ஆனுல், ஒவ்வொருவர் அபிப்பிராயமும் ஒவ்வொரு விதமாயிருக்கும். என் அபிப்பிராயம். அங்கு மனைவி கணவனுக்கு அடிமையில்லை, சகதர்மிணியா யிருக்கிறுள். அங்கு படிக்காத பெண்ணை வித்வானின் தலையில் கட்டமாட்டார்கள்.

ஆடவர்கள் மனைவியைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்வார்கள். ஸ்திரீகளுக்கு அங்கு சமஉரிமை உண்டு. சுதந்திரநாடாகையால், அந்த தேசத்துப் பெண்மணிகள் புத்திசாலிகளாய், புருஷர்களுக்கு சரிசமனுய் எல்லாத் துறைகளிலும் விளங்குகின்றன. நாம் ஸ்திரீகளை கொடுமையாயும், அடிமைகளைப் போலவும் நடத்துகிறோம். சுதந்திரமில்லாத நம் நாட்டுப் பெண்மணிகள் வீட்டு வேலைகளில் கூடத் திறமையற்றவர்களா யிருக்கிறுர்கள். பழய பழக்க வழக்கங்களையே குருட்டு நம்பிக்கையுடன் கடைப்பிடித்து வருகிறுர்கள். புருஷர்களின் வாழ்க்கைத்துணைவியாயில்லாமல், நம் முன்னேறும் வழியில் முட்டுக் கட்டையா யிருக்கிறுர்கள். ஆனுல், குற்றவாளி யார்? நாம்தான்; ஆண்பிள்ளைகள்!

ஆதலால், சகோதரர்களே! ஸ்திரீகளுக்கு சுதந்திரம் கொடுங்கள்! பள்ளிக்கூடத்திலும், கலாசாலையிலும் அவர்களைப் படிக்க அனுப்புங்கள்! நமக்கு சரி

சமமாய் அவர்கள் வரும்படியாய் அவர்களை உற்சாகப் படுத்துங்கள்! தேசம் சுதந்திரமடையுமுன், நம் மிடையே அடிமையாய்க் கிடப்பவர்களை சுதந்திரம் அடையச் செய்யுங்கள்! வெளிச் சீர்திருத்தத்திற்கு முன் வீட்டை சீர்திருத்திக்கொள்ளுங்கள்! இப்படி நாம் செய்தால் நம் நாட்டுப் பெண்மணிகளும் கௌரவமான ஸ்தானத்தை அடைவார்கள்!

பலத்த கரகோஷத்தினிடையே அசோக் குமார் தன் ஆசனத்தில் அமர்ந்தார். வானளாவிய கரகோஷத்தைக் கேட்டு அசோக் குமார் தான் பிரசங்கத்தில் வெற்றி யடைந்து விட்டதாக எண்ணினர். ஆனால் இந்தக் கர கோஷத்திற்குப் பின்னால் எத்தனை வித அபிப்பிராயங்கள் மறைந்து இருக்கின்றனவோ! ஜனங்களுக்கு கைதட்டுவ தென்பது பழக்கமாகி விட்டது.

## 5

'இன்டர்வல்' சமயம். காலேஜ் மாணவிகள் எல்லோரும் அவ்வறையில் கூடியிருந்தனர். முதல்நாள் பிரசங்கத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தனர்.

"நேற்று ப்ரொபஸர் செய்த பிரசங்கம் எனக்கு ரொம்ப பிடித்திருந்தது. அவர் சொல்வதுபோல் நாம் இன்னும் யோசனை செய்யாமல் பழய பழக்க வழக்கங்களையேதான் கடைப்பிடித்து வருகிறோம். நமக்கும், நம் பாட்டிமார்களுக்கும் எந்த வகையில் வித்யாசமிருக்கிறது?" என்று ஆரம்பித்தாள் மிஸ். சாலினி.

"அது சரி! ஆனால், நம் முன்னேற்றத்திற்கு ஐரோப்பிய ஸ்திரீகளை பின்பற்ற வேண்டுமென்று சொல்லுவது தான் எனக்குப் பிடிக்கவில்லை; நம் தேசத்தின் உத்தம ஸ்திரீ ரத்தினங்களாகிய சீதை, தமயந்தி முதலானவர்கள் தான் நம்முடைய லட்சிய வாதிகள். நாம் அவர்களின் வழியைப் பின்பற்றினல்தான், நமது கடமையை உணர்வோம்!"

"நீ சொல்வது ரொம்ப வேடிக்கையாயிருக்கிறது! சீதையும், தமயந்தியும் கற்பனைகளேயன்றி, சரித்திரமல்ல. கற்பனையை ஒரு லட்சியமாக நினைத்து அதன்படி நடப்பது முட்டாள்தனம்!" என்று சாலினி தொடர்ந்து சொன்னள்.

"கற்பனைகளோ அல்லது சரித்திரங்களோ, நம்முடைய சீர்திருத்தங்களுக்கு அவர்களைத்தான் பின்பற்ற வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையில்தான் நம் சமூகத்திற்கு வேண்டிய நீதிகளெல்லாம் நிறைந்திருக்கின்றன!

நமது நாகரிகத்தையும், மேல்நாட்டு நாகரிகத்தையும் ஒன்ருய் இணைத்துவிட முடியாது. அவர்களைப் போலவே நடந்துகொள்ள ஆரம்பித்தால் நாம் படு குழியில் விழ வேண்டியதுதான்!"

"சமயத்திற்குத் தகுந்தாற்போல் மாறுவதுதான் நல்லது. இல்லாவிடில், அன்னியர்கள் நம்மை நசுக்கி விடுவார்கள்?"

"ப்ரொபஸரின் பிரசங்கத்தில் சாரம் ஒன்றுமில்லை. நம்மை அந்த விபரீத நாகரீகத்தில் விழும்படி சொல்கிருர். இந்தப் பிரசங்கத்தினல் நமக்கு ஒன்றும் நன்மையில்லை!"

சாலினிக்குக் கோபம் வந்துவிட்டது. இவள் சொல்லுவதை அங்கிருந்த ஒருவராவது ஆதரிக்கவில்லை. அவளுக்கு ப்ரொபஸர் சொன்னது ரொம்ப சரியாய்ப்பட்டது. மற்ற

மாணவிகள் இவளைப் பார்த்து விஷமச் சிரிப்பு சிரித்தனர். தன் கட்சி ஜெயிக்காததால் அவள் ஆத்திரத்துடன் "சகதியில் கிடக்கத்தான் நீங்கள் விரும்புவீர்கள்!'' என்ருள்.

"சரி! நாங்கள் சகதியிலேயே கிடக்கிருேம்! நீங்கள் ஹம்ஸத்தை மணந்து கொண்டு மானஸஸரஸில் உலாவுங்கள்! ப்ரொபஸர் அசோக் குமார் கூட கலியாண மாகாதவர்தான். நீங்கள் முயற்சி செய்தால்........!''

"சந்தேகமென்ன? நான் மணந்து கொண்டால் இந்த மாதிரி சீர்திருத்த வாதியைத்தான் மணந்து கொள்வேன்......!''

"அப்படியானல், சாலினிதேவி! நாங்கள் எல்லோரும் அசோக் குமாரிடம் சென்று தங்கள் மனதிலிருப்பதைத் தெரிவித்து உத்திரவு வாங்கி வருகிருேம்!'' என்ருள் நிசா. இந்த மாதிரி விஷயத்தைப்பற்றி பேசுவதில் அவள் ரொம்பக் கெட்டிக்காரி.

"உங்கள் சிபாரிசு எனக்கு எதற்கு? நானே போய் சொல்லிக் கொள்வேன்!''

"ஆம், சாலினி, நீ சொல்வது சரிதான்! நான் தவறிச் சொல்லிவிட்டேன். என்னை மன்னித்து விடு! ஐரோப்பாவிலே ஆடவர்கள், பெண்களை மனைவியாக, அவரவர்கள் தானே தேர்ந்தெடுத்துக் கொள்கிருர்கள்!'' என்ருள் நிசா. இதைக் கேட்ட மற்ற மாணவிகள் எல்லாம் சிரித்து விட்டனர். இந்தச் சிரிப்பு சாலினியை ரொம்பவும் புண்படுத்தி விட்டது. சாலினி மேலும் வார்த்தையை வளர்க்க விரும்பவில்லை. ஆனல், அவர்கள் ஏன் நிறுத்துகிருர்கள்?

"பிரபல விஞ்ஞான நிருபரும், மாதம் ஆயிரத்து இருநூறு ரூபாய் சம்பாதிக்கும் ஒருவர் கணவராய்க் கிடைத்தால் எந்த ஸ்திரீதான் தன்னை பாக்கியவதியாய் நினைக்க மாட்டாள்.....?''

"அப்படியானல், சாலினி புகழுக்காகவும், சம்பளத்திற்காகவும் தான் ப்ரொபஸரை மணந்துகொள்ள எண்ணுகிருளா? இதயபூர்வமான அன்பிற்காக இல்லையா?"

"இதயமும் அன்பும், சீதை ராமர் அவர்களின் விஷயங்கள்! மேல்நாட்டு நாகரிகத்திற்கு இதயமேது, தர்மமேது?"

"சரி! சரி! இதயமும் தர்மமும் உங்களோடு இருக்கட்டும்! எனக்கும் அதற்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை தான்! அதைப்பற்றி உங்களிடமிருந்து நான் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை!" என்று சாலினி சீறினுள். அவள் மனதில் ஒரு பிரதிக்ஞை தோன்றியது.

"அசோக் குமாருடன் உனக்கு சீக்கிரம் விவாகம் நடைபெறுமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறேன்!" என்று நிசா கிண்டலாய்ச் சொன்னுள்.

"இன்னும் கொஞ்ச நாட்களில் தெரிந்துவிடும்! அப்பொழுது பார்!" என்று அமத்தலாய் தலையை ஓர் ஆட்டல் ஆட்டிக்கொண்டு சொன்னுள் சாலினி.

"அப்படியானல், எங்களுக் கெல்லாம் கலியாணப் பத்திரிகை கிடைத்துவிடும்!........."

இதற்குள் காலேஜ் மணி அடித்துவிட்டது. ஒவ்வொரு மாணவியாக அவ்விடத்தை விட்டுச் சென்றனர். சாலினி மாத்திரம் பிடிவாதத்துடன் அங்கேயே உட்கார்ந்திருந்தாள்.

## 6

அசோக் குமார் விஞ்ஞான ஆராய்ச்சி சாலையில் உட்கார்ந்து ஏதோ ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். அங்கு அவரைத் தவிர வேறு ஒருவருமில்லை. இந்தக் காரியங்களுக்கெல்லாம் அவர் பிறர் உதவியை எதிர்பார்ப்பதில்லை. இப்பொழுதுதான் இரண்டு திரவ பதார்த்தங்களை ஒன்ருய்க் கலந்து ஒரு கண்ணுடிப் பாத்திரத்தில் வைத்துவிட்டு, அது கலந்து கொள்வதைக் கூர்ந்து கவனித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். குறி பார்த்து அடிக்கும் ஒருவனுக்கு எப்படி தன் லட்சியத்தைத் தவிர வேறு ஒன்றும் காணப்படாதோ, அதே நிலைமையில்தான் அசோக் குமார் இப்பொழுது இருந்தார். இந்த சமயத்தில் யாரோ மெதுவாய்க் கதவைத் திறந்து, உள்ளே வர அநுமதி கேட்பது போலிருந்தது. சாலினி உள்ளே வந்தாள். அவள் முகம் கவலையினுல் வாடியிருந்தது. என்ன பேசுவதென்பதைக் கூட அவள் யோசித்துக்கொண்டு வரவில்லை. மற்ற மாணவிகள் செய்த பரிகாசத்தினுல் ஏற்பட்ட ஓர் உறுதிதான் அவளை இங்கு இழுத்து வந்திருக்கிறது.

அசோக் குமார் உட்கார்ந்தபடியே, "தங்கள் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"என் பெயர் சாலினி. எம். எஸ். ஸி. ஜூனியர் வகுப்பில் படிக்கிறேன்!"

"என்ன விஷயம்! தங்களுக்கு என்ன வேண்டும்?"

சாலினி மனதிற்குள் "இன்னதுதான் பேசுவதென்று தீர்மானிக்காமல் ஏன் வந்தோம்!" என்று தன்னையே தான் நொந்து கொண்டாள்.

"என்ன காரணத்திற்காக நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள்?" என்று அசோக் குமார் மறுபடியும் கேட்டார்.

"தங்கள் பிரசங்கத்தைப் பற்றி........!" என்று சாலினி பேச ஆரம்பித்தாள்.

"ஓஹோ! என் பிரசங்கம் எப்படியிருந்தது? பிழைகள் நிறைய இருந்திருக்கும். ஏனெனில் நான் இந்த விஷயத்திற்குப் புதியவன்!"

"ரொம்ப நன்றாயிருந்தது! 'டயம்ஸ்' பத்திரிகையை நீங்கள் பார்க்கவில்லையா? என்ன ஸ்தோத்திரம் செய்திருக்கிறது!"

"பத்திரிகை படிக்க எனக்கு எங்கே ஒழிகிறது? ஆனால், ஜனங்கள் அதைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள், அதற்கு உதாரணம் என் எதிரிலேயே இருக்கிறது!"

"வாக்சாதுர்யத்தினாலும், அபார பாண்டித்யத்தினாலும் தாங்கள் பாரத சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாயிருப்பீர்களென்று தங்கள் பிரசங்கத்தைக் கேட்டதுமே நான் அறிந்துகொண்டுவிட்டேன். நீங்கள் விஞ்ஞானத்திலேயேமுழுகி தங்கள் திறமையை ஏன்வீணாக்குகிறீர்கள்?"

"விஞ்ஞானம் தான் என் வாழ்க்கையின் லட்சியம், சாலினி! இந்த சாமான்களெல்லாம் தான் என் ஐச்வரியங்கள். இவைகளைத் தவிர வேறு ஒன்றும் எனக்கு இவ்வுலகில் சுவாரசியமாகத் தோன்றவில்லை!"

இதற்குள் காலேஜ் மணி அடித்துவிட்டது.

"நல்லது ! நான் சென்று வருகிறேன். அநாவசியமாய் தங்கள் நேரத்தை வீணுக்கிவிட்டேன்! மன்னித்துக் கொள்ளுங்கள் !" என்று சொல்லிக்கொண்டே சாலினி எழுந்தாள்.

"மன்னிப்பு எதற்கு? நான் தங்களுக்கு நன்றி செலுத்தவேண்டும் !" என்ருர் அசோக் குமார்.

"தங்கள் பிரசங்கத்தைப்பற்றி எவ்வளவோ விஷயங்கள், சந்தேகங்களெல்லாம் கேட்கவேண்டுமென்றிருந்தேன். ஆனல், இப்பொழுது நேரமாகிவிட்டது! மற்றவைகளைத் தங்கள் வீட்டிற்கு வந்து கேட்டுக்கொள்கிறேன், தாங்கள் எங்கே வசிக்கிறீர்கள் !"

"75, அபாலோ பந்தரில் வசிக்கிறேன் !"

"நாளை மாலை ஏழு மணிக்கு நான் வரலாமா ? தங்கள் சௌகரியம் எப்படியோ !"

"எனக்கு வேறு ஜோலி ஒன்றும் நாளைக்கு இல்லை! தாங்கள் வரலாம் !"

மலர்ந்த முகத்துடன் சாலினி விடைபெற்றுக் கொண்டு சென்ருள். அவள் சென்ற பிறகும் அவள் அழகிய முகம் அசோக் குமாரின் மனக்கண்முன் தாண்டவமாடியது. அவர் மனதில், "படித்தவள் ; நாகரிகமானவள் ; நல்ல அழகி ! நாளைக்கு ஏழு மணிக்கு வருவாள் !" என்று சொல்லிக்கொண்டார். அவர் இப்பொழுதுதான் முதன் முதலாக ஒரு ஸ்திரீயிடம் நெருங்கிப் பழகினர்.

# 7

"**பை**யன் கண்ணுக்கு லக்ஷணமாயிருக்கிருன். சாலினியைப் போல் படிக்காவிட்டாலும் வியாபார விஷயத்தில் ரொம்ப கெட்டிக்காரன். வருஷத்திற்கு இருபதினுயிரம் ரூபாய் வரும்படிக்குக் குறைச்சலில்லை!" என்று சொல்லிக்கொண்டே தாரக்நாத் மாயாவை நோக்கினர். "பிறகு காலதாமதம் ஏன் செய்கிறீர்கள்? நிச்சயம் செய்துவிடுங்களேன்!" என்று மாயா சந்தோஷத்துடன் கூறினள்.

"இன்று சாயங்காலம் சாலினியைப் பார்க்க அவர்கள் வருவார்கள். சாலினி எங்கேயாவது போய்விடப் போகிருள். அவளை நன்ருய் அலங்காரம் செய்து கொள்ளச் சொல், நீயும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வை!" என்று சொல்லிவிட்டு தாரக்நாத் ஏதோ காரியமாய் வெளியே சென்ருர். மாயா சந்தோஷத்தினல் பூரித்தாள். அவர்கள் வருவதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தாள். இந்த சமயத்தில் சாலினி உள்ளே வந்தாள். இவர்கள் பேசிக்கொண்டிருந்ததை, அவள் மறைந்திருந்து கேட்டிருப்பாள் போல் தோன்றியது.

தாரக்நாத் வெளியே போனதும் சாலினி இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு மிக்க விறைப்பாக, "உங்களுக்கு வேறு வேலையே கிடையாதா?

எப்பொழுதும் 'கலியாணம் கலியாணம் என்று பறக்கிறீர்களே? நான் கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லை! அப்பாவிடம் சொல்லிவிடு!'' என்று ஒரே மூச்சில் சொல்லிவிட்டு சமையல் அறைக்குச் சென்றாள். வெட்கத்தினால்தான் இப்படிச் சொல்லுகிறாள் என்று மாயா நினைத்தாள். கிராமத்துப் பெண்கள் கலியாணத்தைப் பற்றிச் சொன்னால் சங்கோஜப் படுவார்கள். அதேபோல் படித்த பெண்கள் தங்கள் வெட்கத்தை இப்படித்தான் தெரிவிப்பார்கள் போலிருக்கிறதென்று எண்ணினாள். மகளை பின் தொடர்ந்து அவளும் சமையல் அறைக்குச் சென்றாள். சாலினி தானே சாப்பாட்டை எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள்.

"நான் பறிமாறுகிறேன்! இங்கே கொண்டா!'' என்று சொல்லிக்கொண்டே மாயா சாலினிக்கு பறிமாற ஆரம்பித்தாள். "இன்று இவ்வளவு சீக்கிரம் ஏன்?'' என்றாள் மாயா.

"புதிய ப்ரொபஸர் இன்று பிரசங்கம் செய்கிறார். எனக்கு அங்கு போகவேண்டும்!''

"இந்தப் புதிய ப்ரொபஸர் வந்ததிலிருந்து ஒவ்வொரு நாளும் பிரசங்கம் நடக்கிறதா?''

"ஆமாம், அம்மா! ரொம்ப நன்றாகப் பேசுகிறார்'' என்று ப்ரொபஸரைப் புகழ்ந்தாள் சாலினி.

"இன்று எதைப்பற்றி பேசப் போகிறார்?'' என்று மாயா கேட்டாள்.

"அவர் பேச முடியாத விஷயம் என்ன இருக்கிறது? இன்று கீதையைப் பற்றிப் பேசப் போகிறார்!'' என்று தாயாரின் மனதிற்குப் பிடித்தமான விஷயத்தைப் பற்றி சொன்னாள்.

"கீதையைப் பற்றியா? அப்படியானுல் நானும் வரு கிறேன், நல்ல விஷயமாக இருக்கிறது!" என்ருள் மாயா. ஆனுல், அவள் சாயங்காலம் சாலினியைப் பார்க்க யாரோ வரப் போகிருர்கள் என்பதை மறந்து கூறினுள்.

"உபந்யாஸம் ஆங்கிலத்தில் நடைபெறும். உனக்கு ஒன்றுமே புரியாது. என்னை தொந்தரவு செய்வாய்!" என்ருள் சாலினி. இதைக் கேட்ட மாயா வெட்கத்தினுல் தலை குனிந்து கொண்டாள்.

* * *

சாலினி அலங்காரம் செய்துகொண்டிருந்தாள். எப் படி அலங்காரம் செய்துகொண்டால் அசோக் குமாரின் மனதைக் கவரலாம் என்று, பார்த்துப் பார்த்து தன்னை சிங்காரித்துக்கொண்டாள்.

ஏதோவொரு சினிமாக் காதல் பாட்டு ஒன்றை மெல்ல பாடிக்கொண்டே கண்ணுடியில் தன் அழகைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த சமயம் மாயா அங்கு வந்தாள்.

"எட்டரை மணிக்குத்தானே பிரசங்கம் ஆரம்பிக்கப் போகிறது? இப்பொழுது ஆறேகால் மணிதானே ஆகி றது! அதற்குள் கிளம்பிவிட்டாயா?" என்ருள் மாயா.

"இல்லை, சீக்கிரம் போகவேண்டும். ஆறு மணிக்கே நான் கிளம்பியிருக்க வேண்டும்! சீக்கிரம் போனுல்தான் இடம் கிடைக்கும்!" என்ருள் சாலினி.

"எழு மணிக்கு உன்னைப் பார்க்க யாரோ வரப் போகி ருர்கள். நீ இப்பொழுதே கிளம்பிப் போகிருயே!" என் ருள் மாயா.

"வருகிறவர்களிடம் உங்கள் பெண் அழகில்லை, குணமில்லை துஷ்டை யென்று சொல்லிவிடுங்கள்.........!" என்ருள் சாலினி.

"சாலினி! இப்படி யெல்லாம் பேசாதே. அப்பா எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த வரன் பிடித்திருக்கிருர் தெரியுமா? நீ இப்படி நடந்துகொண்டால் அவர் மனம் உடைந்து போகும்?"

சாலினியின் மனதில் வேறொரு எண்ணமும் பிடிவாதமும் குடிகொண்டிருந்தன. மாயாவின் வார்த்தைகள் ஒன்றும் அவள் காதில் ஏறவில்லை.

"கலியாணம் செய்துகொள்வது என் விஷயம். நல்லதையும் கெட்டதையும் அறிந்து அதன்படி நடக்க எனக்குத் தெரியும். உங்கள் திருப்திக்காக எனக்குப் பிடித்தமில்லாத ஒருவரை மணக்க நான் சம்மதிக்கமாட்டேன். நான் யாரை நேசிக்கிறேனே, அவரைத்தான் மணம் செய்துகொள்வேன்! அனுவசியமாய் எனக்காக கஷ்டப்படாதீர்கள்!" என்று சாலினி தீர்மானமாகச் சொன்னுள்.

"இது நல்ல வரன். சொல்வதைக் கேள் சாலினி!" என்று மாயா உற்சாகம் இழந்தவளாய்ச் சொன்னுள்.

"உங்கள் இஷ்டப்படி செய்வதா யிருந்தால் பத்து வருஷத்திற்கு முந்தியே செய்திருக்கவேண்டும்! இப்பொழுது கலியாண விஷயம் என் கையிலிருக்கிறது. உங்கள் சந்தோஷத்திற்காக என் வாழ்க்கையை வீணுக்கிக் கொள்ளமாட்டேன்!" என்ருள் சாலினி.

வெளியே சென்று திரும்பி வந்த தாரக்நாத், சாலினி சொன்னதைக் கேட்டுக்கொண்டே வந்தார். அவருக்கு

கோபம் பொங்கியது. அவரால் பேசாமலிருக்க முடியவில்லை.

"அதிகப்பிரசங்கி! நம் சமூகத்தில் நாம் கௌரவமாக இருக்கவேண்டாமா? நீ எத்தனை நாள் கலியாணம் செய்து கொள்ளாமலிருப்பது? என்னை அவமானப்படுத்துவதென்று தீர்மானித்துவிட்டாயா?" என்று தாரக்நாத் இரைந்தார்.

"அப்பா! என்னை நீங்கள் படிக்க வைத்துவிட்டீர்கள். இந்தப் படிப்பின் பயனாக நீங்கள் சொல்லும் சமூகம், ஜாதி, தர்மம் முதலியவைகள் எல்லாம் எனக்கு அர்த்தமற்றவைகளாகப் படுகிறது. நான் அதன்படி நடக்கவும் இஷ்டப்படவில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள்! இன்று தெளிவாக என் அபிப்பிராயத்தைச் சொல்லும்படி நேர்ந்துவிட்டது!" என்றாள் சாலினி.

"அவர்கள் வரும்வரை நீ இங்கு இருக்கவேண்டும்!" என்றார் தாரக்நாத்.

"ஏன்?"

"கலியாண விஷயமாக அவர்கள் உன்னைப் பார்க்க வருகிறார்கள்...!"

"அதே விஷயமாகத்தான் நானும் போய்க்கொண்டிருக்கிறேன்!"

இதற்குமேல் தாரக்நாத்திற்குப் பேசப் பிடிக்கவில்லை. கோபத்துடன் 'விர்' என்று வெளியே சென்றுவிட்டார்.

"அவர்கள் வந்தால் நாங்கள் என்ன பதில் சொல்லுவது?" என்று மாயா நயமாகக் கேட்டுப் பார்த்தாள்.

"அவளும் கணவனைத் தேடிக்கொண்டு தான் போயிருக்கிறாள் என்று சொல்லிவிடுங்கள்!" என்று சொல்லிக்கொண்டே சாலினி சென்றுவிட்டாள்.

# 8

சாலினியை ஏழு மணிக்கு வரச் சொல்லியிருக்கிறோம் என்பதை அசோக் குமார் முற்றிலும் மறந்துவிட்டார். அவர் தன் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு திரும்பும் பொழுது மணி எட்டு அடித்துவிட்டது.

சாலினி ஆறரை மணிக்கே அசோக்குமார் வீட்டிற்கு வந்துவிட்டாள். ட்ராம், பஸ் கிடைப்பது கஷ்டமாயிருக்கலாம் அல்லது வீடு தேடிக் கண்டுபிடிப்பதில் நேரமாகி விடலாம் என்று பயந்தே சீக்கிரம் புறப்பட்டு விட்டாள். ப்ரொபஸரின் அறை பூட்டியிருந்தது. கோபிநாத் வெளி வராந்தாவில் உட்கார்ந்துகொண்டு பீடி குடித்துக்கொண்டிருந்தான். சாலினியின் வரவு அவனுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. அவள் இருந்த பக்கமே அவன் திரும்பிப் பார்க்கவில்லை. தெருவில் போகும் 'கார்'களின் நம்பர்களைப் படித்துப் படித்து சாலினியின் கண்கள் அலுத்துப்போயின. வெளியே கிடந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்துகொண்டாள்.

இருட்ட ஆரம்பித்துவிட்டது. கோபிநாத் மின்சார விளக்கை ஏற்றினான். ப்ரொபஸரின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து சாலினி சஞ்சலத்துடன் உட்கார்ந்திருந்தாள். தன்னை விநோதமான பொருளொன்றாகக்

கருதி உட்கார்ந்திருக்கும் கோபிநாத்தைக் கண்டாள் சாலினி.

"மணி ஒன்பது அடிக்கப் போகிறது! இன்னும் ப்ரொபஸர் வரவில்லையே.!" என்று சாலினி தன் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே சொன்னாள்.

"அவர் வருவது என்ன நிச்சயம்? ஒவ்வொருநாள் இரவு அவர் வீட்டிற்கே வருவதில்லை!" என்று கோபிநாத் சொன்னான். சாலினியிடம் என்ன மாறுதல் ஏற்படுகிறதென்பதை அறிய விரும்பினான்.

"நான் ஆறரை மணியிலிருந்து காத்துக்கொண்டிருக்கிறேன். நீ அவருக்குத் தெரிவிக்கக்கூடாதா?"

"நான் வீட்டை விட்டு ஒரு நிமிஷங்கூடப் போக முடியாது. இது பம்பாய், அம்மா, பம்பாய்!......நீங்கள் காலேஜைப் பார்த்ததில்லையா?" சாலினி எதற்காக வந்திருக்கிறாள் என்பதை அறிய விரும்பிக்கேட்டான். இவன் இப்படிப் பேசுவது சாலினிக்குக் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. இதற்குள் அசோக் குமாரின் 'கார்' வந்து நின்றது.

கோபியைத் தவிர வேறு ஒருவரும் வீட்டில் இருப்பார்கள் என்று அவர் கற்பனைகூடச் செய்யவில்லை.

சாலினியைப் பார்த்து ஒருகணம் திகைத்து நின்றார். மறுகணம் சமாளித்துக்கொண்டார்.

"இன்று கொஞ்சம் நேரமாகிவிட்டது......கோபி! கதவைத் திற!"

கோபி கதவைத் திறந்தான். அசோக் குமாரும், சாலினியும் உள்ளே சென்றனர். கோபிநாத் அசோக் குமாரின் 'பூட்ஸ்' நாடாவை அவிழ்த்தான்.

"சாப்பாடெல்லாம் ஆறிப் போகிறது, எஜமான்! கை, கால் கழுவிக்கொண்டு வாருங்கள்!'' என்ருன் கோபிநாத்.

"இருக்கட்டும்! வருகிறேன். சாலினி! உங்களுக்கு என்னிடம் என்ன சந்தேகம் கேட்கவேண்டும்!''

"சற்று இளைப்பாருங்கள்! பிறகு இந்த விஷயங்களை யெல்லாம் கேட்டுக்கொள்ளலாம்!'' என்று சாலினியைப் பேசவிடாமல் கோபிநாத் நடுவில் குறுக்கிட்டான். கோபியின் குணம் அசோக் குமாருக்குத் தெரியும். ஆகை யால், அவனிடம் அவர் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. தன் வழியில் அவன் குறுக்கே நிற்பான் என்று சாலினி தெரிந்துகொண்டு விட்டாள். அசோக் குமார் உள்ளே சென்று கை கால் கழுவிக்கொண்டு, வேறு உடை தரித் துக்கொண்டார்.

கரையில் மெல்லிய ஜரிகைச் சீர்போட்ட வேஷ்டியும், பனாஸ் ஸில்க் ஜிப்பாவும் அணிந்துகொண்டு மறுபடியும் வந்து உட்கார்ந்தார். அவர் முகத்தில் சாதாரணமாகத் தோன்றும் புன்சிரிப்பொன்று தவழ்ந்தது. ஏன்? விசேஷ காரணம் ஒன்றுமில்லை. ஆனல், இந்த மாதிரி விஷயங்களில் உலகம் தன் மனம் போனபடி கற்பனை செய்துகொள்கிறது. சாலினியும் ப்ரொபஸரின் புன் சிரிப்பை ஒருவிதமாக அர்த்தம் செய்துகொண்டாள்.

"இன்று இங்கு நீங்களும் கொஞ்சம் சாப்பிடுங் களேன்!'' என்ருர் அசோக் குமார்.

"இல்லை; நான் சாப்பிட்டுவிட்டுத்தான் வந்திருக் கிறேன்!'' என்று சொன்னுள் சாலினி. சொல்லிவிட் டாளே தவிர, இந்தமாதிரி நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விட்டோமே என்று மனதிற்குள் நொந்துகொண் டாள். அசோக் குமார் சாப்பிட்டுவிட்டு சோபாவில்

வந்து உட்கார்ந்தார். ஆடம்பரமற்ற அவர் செய்கைகளும், தன்னிடம் சகோதர பாவத்துடன் கௌரவமாக நடந்துகொள்ளும் முறையையும் கண்டு சாலினி பிரமித்தாள்.

"இன்று, தங்களிடம் நான் முக்கியமான விஷயம் ஒன்றிற்கு அபிப்பிராயம் கேட்க வந்திருக்கிறேன்," என்ருள் சாலினி.

"நல்லது! என்னவென்று சொல்லுங்கள். என்ஞல் முடிந்தவற்றை சொல்லுகிறேன்!" என்ருர் ப்ரொபஸர்.

சாலினி சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. தன் மௌனத்தினுல் அவள் என்ன சொல்லப் போகிருளோ வென்ற ஆவலைப் பெருக்குவதற்காக அவள் சற்று தாமதித்தாள்.

"இந்த அநியாயத்தைக் கேளுங்கள்! என் தகப்பனர், படிப்பில்லாத, எனக்குப் பிடித்தமில்லாத ஒருவருக்கு என்னைக் கலியாணம் செய்து கொடுப்பதாகப் பேசிக் கொண்டிருக்கிருர். நான் அதற்குச் சம்மதிக்கவில்லை...!"

"நமது தேசத்தில் எப்பொழுதும் இப்படித்தான் நடக்கிறது......!"

"ஆனுல், நான் என் வாழ்வைக் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை!" அசோக் குமாருக்கு என்ன சொல்வ தென்று புரியவில்லை. பிரசங்கம் என்னவோ அமர்க்கள மாகச் செய்துவிட்டார். ஆனுல், இந்த விஷயங்களை யெல் லாம் அவர் கனவில் கூட யோசித்தவரில்லை. சாலினியின் விஷயம் அவருக்கு மிகவும் சிக்கலாகத் தோன்றியது. என்ன அபிப்பிராயம் சொல்வதென்று அவர் யோசிக்க, யோசிக்க அவ்விஷயம் அவருக்கு எட்டாமல் வெகுதூரம் சென்றுகொண்டிருந்தது. சிகரெட் பெட்டியிலிருந்து

சிகரெட்டு ஒன்றை எடுத்து பற்றவைத்து வாயில் வைத்துக் கொண்டார். சிகரெட் பெட்டியை சாலினியின் பக்கம் நீட்டினுர். "நான் சிகரெட் குடிப்பதில்லை!" என்ருள் சாலினி. அவர் மனம் யோசனை செய்துகொண்டிருந்தது. பேச்சை வேறு வழியில் மாற்ற முயன்ருர்.

"இங்கிலாந்தில் ஸ்திரீகள் கூட சிகரெட் குடிக்கிருர்கள். நீங்கள் கூடக் கற்றுக்கொள்ள வேண்டும். போதைக்காக அல்ல. நாகரிக சமூகத்தில் பழகும்பொழுது இதுவும் தெரிந்திருக்க வேண்டியிருக்கிறது......!" என்ருர் அசோக் குமார்.

சாலினி சிகரெட்டு ஒன்றை எடுத்து வாயில் வைத்துக்கொண்டாள். அசோக் குமார் அதைப் பற்றவைத்தார்.

"ஆம், சாலினி! பிறகு என்ன?"

"என் தகப்பனுர் சொற்படி நான் கலியாணம் செய்து கொள்ள விரும்பவில்லை. அதனுல் அவர் என் மீது கோபம் கொண்டிருக்கிருர்!" சிகரெட் புகை அவளுக்குப் பிடிக்கவில்லை. இருமல் ஆரம்பித்துவிட்டது. இருந்தும், அசோக் குமாரின் திருப்திக்காக அதை எறியாமல் கையில் பிடித்துக்கொண்டிருந்தாள்.

"படிப்பின் மேன்மையால் உங்கள் எண்ணம் உயர்ந்த நோக்கம் உள்ளதா யிருக்கிறது. ஆனுல், உங்கள் தகப்பனுர் இன்னும் பழைய வழியிலேயே சென்றுகொண்டிருக்கிருர்போல் இருக்கிறது!......"

"எப்பொழுது நான் இஷ்டப் படுகிறேனே அப்பொழுதுதான் கலியாணம் செய்துகொள்ளப் போகிறேன். ஆனுல், என் பயம் என்னவென்ருல், அவர் சொல்படி நான் கேட்கவில்லை என்று என்னை வீட்டை விட்டுப்

போகச் சொல்லிவிட்டால்.........?'' என்றாள் சாலினி. அவரிடமிருந்து 'இந்த வீடு உன்னுடையதுதான்' என்று பதில் வருமென எதிர்பார்த்தாள். ஆனால், அவர் யோசனை செய்துகொண்டே, "ஆம்! அதை யோசிக்க வேண்டியது தான்!'' என்றார். "ஆனால், ஒரு வழி இருக்கிறது! நீங்கள் எனக்கு அந்த உதவியைச் செய்தால்.........!'' என்று சாலினி சிகரெட்டை வாயில் வைத்துக்கொண்டே சொன்னாள்.

"என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன் என்று நான்தான் முன்பே சொல்லிவிட்டேனே!'' என்றார் அசோக் குமார்.

சிகரெட் புகையானது அவளைத் திணற அடித்து விட்டது. பேச்சுவாக்கில் ரொம்ப இழுத்துவிட்டாள். அவளுக்குத் தலையைச் சுற்றியது. என்ன முயன்றும் அவளால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. அப்படியே சோபாவில் மயங்கி விழுந்துவிட்டாள். கையிலிருந்த சிகரெட் கீழே விழுந்து அவிந்தது. அசோக் குமாருக்கு ஒன்றும் புரியவில்லை. சாலினி யார்? நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் மறந்தார். மின்சார விசிறியைப் போட்டுவிட்டு சாலினியின் தலையை தன் மடியில் வைத்துக்கொண்டு அவள் முகத்தில் தண்ணீர் தெளிக்க ஆரம்பித்தார். சற்று நேரத்திற்கெல்லாம் சாலினிக்கு மயக்கம் தெளிந்தது. அவள் கண்களை மூடிக் கொண்டே, தான் இருக்கும் ஸ்தானத்தை எண்ணி சந்தோஷித்தாள். மெல்ல கண்களைத் திறந்தாள். உடனே அசோக் குமார், "உடம்பு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார்.

"இப்பொழுது தேவலை, சிகரெட்டால் வந்ததுதான் இது.........!'' என்றாள் சாலினி.

"ஆமாம்! ரொம்ப கெடுதலான சிகரெட்.........!"

"இல்லை! நல்ல சிகரெட்தான்! நான் இப்பொழுது அனுபவித்துக்கொண்டிருக்கும் சுகம், அதன் மூலம் தானே எனக்குக் கிடைத்திருக்கிறது!"

அசோக் குமாரை வெட்கமும் பயமும் சூழ்ந்து கொண்டன. தன் மடியிலிருந்து அவள் தலையை எடுக்க முயன்றார்.

"இல்லை, சற்று நேரம் இப்படியே இருக்கிறேன்......?" என்று சாலினி தன் தலையை முன்னிருந்தபடியே வைத்துக்கொண்டாள். அசோக் குமார் ஒன்றும் புரியாமல் அப்படியே உட்கார்ந்திருந்தார். "ஆமாம்! நான் என்ன சொல்லிக்கொண்டிருந்தேன்?" என்றாள் சாலினி. மிகவும் கஷ்டத்துடன், "ஆனால் ஒரு வழி இருக்கிறது......!" என்று அவள் விட்ட இடத்தை எடுத்துக் கொடுத்தார் அசோக் குமார்.

"நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள். பிறகு நான் வழி தேடிக்கொள்கிறேன்!"

"சரி! கேள்!" என்றார் அசோக் குமார். சாலினி எழுந்து உட்கார்ந்தாள். அழகிய தன் இரு நேத்திரங்களால் அசோக் குமாரை ஆவலுடன் பார்த்தாள்.

"நான் அழகா யில்லையா?" என்றாள் சாலினி. அவள் கேட்ட கேள்வியினால் அசோக் குமாருக்கு மின்சாரம் பாய்வது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

"நீங்கள் இப்படிக் கேள்வி கேட்பதன் அர்த்தம் என்ன?" என்று அவர் கலக்கத்துடன் கேட்டார்.

அவருடைய பதிலை ஆவலுடன் எதிர்பார்த்து, "அதை யெல்லாம் பின்னால் சொல்லுகிறேன்!" என்றாள் சாலினி.

வெகு நேரம் கழித்து, "உண்மையிலேயே நீங்கள் அழகாகத்தான் இருக்கிறீர்கள்!" என்ருர் அசோக் குமார்.

"என் இரண்டாவது கேள்வி, நான் படித்தவள் இல்லையா?"

"உங்கள் படிப்பைப்பற்றி யார் சந்தேகம் கொள் வார்கள்?"

"என் அபிப்பிராயங்கள்......?"

"இப்பொழுது உள்ள நாகரிக சமூகத்திற்கு ஏற்ற தாக இருக்கின்றது!"

"நல்லது! கடைசியாகத் தங்களிடம் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். நான் கேட்ட கேள்விகளை எல்லாம் திருப்பி என்னிடம் கேளுங்கள்!" என்ருள் சாலினி.

"சாலினி! நீங்கள் என்ன வேடிக்கை செய்கிறீர் களா?" என்ருர் அசோக் குமார். அவர் குரலில் கோபம் கலந்திருந்தது.

"இதை நீங்கள் தள்ளாதீர்கள்! நான் பிறகு சென்று விடுகிறேன். இதனுல் என் மனம் சாந்தியடையும். இந்த உதவி கூட உங்களால் செய்ய முடியாதா?" என்று மிகவும் விநயமாய் வேண்டிக் கொள்பவள்போல் முகத்தை வைத்துக் கொண்டாள். கெஞ்சுவதுபோல் அவள் பேசியதும், அவரிடமிருந்த கொஞ்சநஞ்சம் கோபமும் பறந்து சென்றது. அவ்விடத்தை விட்டுப் போகவும் முடியவில்லை. அவளை வீட்டிற்குப் போக உத் திரவு கொடுக்கவும் தைரியமில்லை. கடைசியில் வேறு வழி யின்றி அசோக் குமார் அவள் கேட்ட கேள்விகளையே திருப்பிக் கேட்க ஆரம்பித்தார்.

"நான் அழகாயில்லையா?"

"இந்தப் பூவுலகில் நீங்கள் இரண்டாவது சந்திரன்!"

"நான் படித்தவனில்லையா?"

"உலகத்திலுள்ள மேதாவிகளின் மத்தியில் சுக்ரனைப் போல் விளங்குகிறீர்கள்!"

"என் அபிப்பிராயங்கள்?"

"தற்கால சமூகத்திற்கு, கலைகளுக்கு, குருவைப் போல் விளங்குகிறீர்கள்!"

சாலினி தான் வெற்றியடைந்து விட்டதை எண்ணி மகிழ்ச்சியடைந்தாள். அவள் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. அசோக் குமார் ஆச்சரியத்தில் மூழ்கிக் கிடந்தார்.

"ஆமாம்! இப்படியெல்லாம் பேசுவதின் அர்த்தம் என்ன?" என்றார் அவர்.

அர்த்தமில்லாமல் சாலினி 'கட கட' என்று சிரித்தாள். "அர்த்தம் என்னவென்றால், இதிலிருந்து நம் இருவரின் பொருத்தமும் உங்களுக்கு விளங்கவில்லையா?" என்று சொல்லிக்கொண்டே அவர் தோள்மேல் தன் கையை வைத்து மீண்டும், "முழு மனதுடன் நான் உங்களை காதலிக்கிறேன்!" என்றாள் சாலினி.

"இது என்ன சாலினி? கையை எடு! பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்?"

"இந்த விஷயத்தில் யார் என்ன சொல்வது? காதலர்களென்றால் ரோமியோவும், ஜூலியட்டும்.........!"

அசோக் குமார் அவ்விடத்தை விட்டு எழுந்துவிட்டார். அவருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

"ப்ரொபஸர்! என்னை நீங்கள் நேசிக்கிறீர்களா?" என்று அவர் காலடியில் உட்கார்ந்துகொண்டே சாலினி கேட்டாள்.

"சாலினி! இது ரொம்ப அநியாயம்! வரம்புக்கு மீறிய நடத்தை!"

"சரி! அதற்குத் தகுந்த தண்டனை அளித்து விடுங்கள்! ஆனால், என்னை நீங்கள் நேசிக்கிறீர்களா என்பதைச் சொல்லி விடுங்கள்!"

அசோக் குமாருக்கு அவளிடமிருந்து தப்ப வேறு வழியில்லை. "ஆம்! நான் உன்னை நேசிக்கிறேன்!" என்று சொல்லிவிட்டார். இதற்குள் மணி பன்னிரெண்டு அடித்து விட்டது. சாலினி அவ்விடத்தை விட்டுச் சென்றாள்.

# 9

இவ்வளவு லகுவாய்த் தன் காரியம் கைகூடிவிடும் என்று சாலினி நினைக்கவில்லை. அவள் ஆச்சரியப்பட்டுக் கொண்டாள். அசோக் குமார் தன்னை காதலிப்பதாகச் சொன்னது வெளிவார்த்தைகளேயன்றி அந்தரங்கமானது அல்லவென்று அவளுக்குப் பட்டது. யோசித்துக் கொண்டே வீட்டிற்குச் சென்றாள்.

தாரக்நாத் கவலையுடன் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தார். அவருக்குத் தூக்கம் வரவில்லை. மாயா,

சாலினியின் வரவை எதிர்பார்த்து தன் படுக்கையில் உட்கார்ந்திருந்தாள். இந்தச் சமயத்தில் சாலினி வந்து கதவைத் தட்டினுள்.

"சாலினி! மணி பன்னிரெண்டாகிவிட்டது!" என்று சொல்லிக்கொண்டே மாயா கதவைத் திறந்தாள். "நான் வேணுமென்றுதான் நேரங்கழித்து வந்திருக்கிறேன்!" என்றுள் சாலினி.

"ஏன்?"

"என்னைப் பார்க்க வரும் ஜனங்களின் கண்களில் படாமலிருப்பதற்குத்தான்!"

இதைக் கேட்ட மாயாவின் மனம் உடைந்தது. இருந்தும் தைரியத்தை விடாமல், "அவர்கள் உன் போட்டோவைப் பார்த்தே கலியாணத்திற்கு சம்மதித்து விட்டார்கள்!"

"நல்லதாயிற்று! அந்தப் போட்டோவிற்கே தாலி கட்டிவிடச் சொல்லுங்கள்!"

"இப்படியெல்லாம் ஏன் பேசுகிறுய்?"

"ஏனென்றுல், என் கலியாணம் ஓர் இடத்தில் நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது!"

"நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறதா? எங்கே, எப்பொழுது?"

"சமயம் வரும்பொழுது தெரிவிக்கப்படும்!"

மகளின் பேச்சைக் கேட்டு தாரக்நாத் கோபத்தினுல் பொங்கி எழுந்தார். ஆனுல் அவர் ஒன்றும் பேச

வில்லை. நிசப்தமான அந்த இரவு நேரத்தில் அவர் ஆத்திரத்துடன் பேச ஆரம்பித்தால் அந்நகரமே கிடுகிடுக்கும். மாயாவினுல் பொறுக்க முடியவில்லை.

“சாலினி! பிடிவாதம் செய்யாதே! பெரியவர்கள் ......உனக்கு நல்லது செய்பவர்களிடம் மரியாதையாக நடந்துகொள். அவர்கள் சொற்படி கேட்பதுதான் உன் கடமை. எங்களை நோகச் செய்துவிட்டு நீ சுகமாயிருந்து விட முடியாது. அதை அறிந்து கொள்! எங்கள் ஆவலை தடுப்பதுதான் உன் படிப்பின் லட்சணமென்ருல் தடுத்து விடு! ஆனுல், நம் ஜாதிக் கௌரவத்தை, குடும்பப் பெயரை உதறித் தள்ளாதே......!”

சாலினியின் காதில் மாயா பேசும் சப்தம் கேட்டதே தவிர, அதன் சாராம்சம் எட்டவே யில்லை. காலேஜ் மாணவிகளின் பரிகாசத்தினுல் எற்பட்ட பிரதிக்ஞையும் பிடிவாதமும்தான் அவள் மனதில் குடிகொண்டிருந்தன.

## 10

அசோக் குமார் படுக்கையில் படுத்துக்கொண்டே சாலினியை வைதுகொண்டிருந்தார். “பெண் ஜென்மமா இவள்! ஸ்திரீகள் கூட இவ்வளவு லஜ்ஜையற்றவர்களாயிருப்பார்களா? நான் இவளை கலியாணம் செய்து கொள்வேன் என்று எப்படித் தெரிந்துகொண்டாள்?” ஆனுல், அவர் அந்தரங்கத்தில் எழுந்த இன்ப உணர்ச்சி அவர் எண்ணத்தை வேறு விதமாக மாற்றியது. “அவள் மேல்

என்ன தப்பு? என் பிரசங்கத்தின் பலன்தான் அவளை இங்கு இழுத்து வந்திருக்கிறது! தன் எதிர்கால வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள வந்திருக்கிருள். அதற்காக இந்த மாதிரி யெல்லாம் நடந்துகொள்ள வேண்டியதில்லை. அவள் படித்தவள்; அழகி. அதற்காக நான் கலியாணம் செய்துகொள்ள மாட்டேன். ஆனல், சாலினியின் மனம் உடைந்துவிடும்......!" இப்படி யெல்லாம் குழம்பிக்கொண்டே வெகு நேரம் கழித்து கண்ணயர்ந்தார்.

சூதுவாது அறியாத, கபடமற்ற அசோக் குமார் சாலினியின் வலையில் அகப்பட்டுவிடுவாரென்று கோபிநாத் அறிவான். அவன் அசோக் குமாரின் மனைவியாக வரப் போகிறவளைப் பற்றி தன் கற்பனையில் ஒருவிதமாகப் உருவகப்படுத்தி யிருந்தான். சீதை, தமயந்தி, சாவித்ரி இவர்களின் அம்சமாக அசோக் குமாரின் குணத்திற்கு எற்றவளாகத் தன் கற்பனையில் அமைத்திருந்தான். இன்று அவன் மனக் கோட்டை இடிந்து விழுந்தது. அவருடைய கலியாணத்தைப்பற்றி தான் எண்ணியிருந்ததும், இப்பொழுது நடக்கும் வகையையும் பார்த்து யோசனை செய்துகொண்டிருந்தான். இதிலிருந்து அவரைத் தடுக்க முடியுமா? அசோக் குமார்—சாலினி சம்பந்தத்தைத் தடுத்துவிட்டாலும், அவனல் அசோக் குமாருக்கு எற்ற மனைவியைக் கொண்டுவர முடியுமா? அப்படியே தேடிக் கொணர்ந்தாலும் அவன் வார்த்தையை அவர் லக்ஷியம் செய்வாரா? கடைசியில் 'கடவுள் விட்டவழி விடுகிருர்' என்று எண்ணி கோபிநாத் தன்னை மறந்து தூங்கிவிட்டான்!

வெகுநேரம் வரை தாரக்நாத்திற்கு தூக்கம் வரவில்லை. சாலினியை மனதிற்குள்ளேயே வைத்து கொண்டார். அவள் எற்பாடு செய்து கொண்டிருக்கும் கலியாணத்தை நிறுத்திஞல் தற்கொலை செய்துகொண்டு விடுவாளோ

என்று பயந்தார். தன்னை மீறி விஷயம் சென்ற பிறகு அவர் கவலை யெல்லாம் சமூகத்தின் மீது சென்றது. நாலு பேர் என்ன நினைப்பார்கள்? சாலினியை ஏன் படிக்க வைத்தோம்? இந்த நாள் படிப்பின் லட்சணம் இதுதானு? பெரியவர்களை எதிர்ப்பதுதானு அதன் சாராம்சம்?

எப்பொழுதோ அவர் கேட்ட பிரசங்கம் ஞாபகத்திற்கு வந்தது. அந்தப் பிரசங்கி, "லார்ட் மெகாலே ஒரு பத்திரிகையில், இந்தியா தேசம் முழுவதும் இங்கிலீஷ் பாஷையைப் பரவச் செய்துவிட்டால் விக்ரஹ ஆராதனை போன்ற மூட நம்பிக்கைகள் ஒழியும்!'' என்று எழுதியிருப்பதாக அவர் பிரசங்கித்தார். அதன் உண்மை இப்பொழுதுதான் தாரக்நாத்திற்கு விளங்கியது. உண்மையிலேயே இங்கிலீஷ் படிப்பின் தரம் இவ்வளவு தானென்முல் அதற்குத் தகுந்த பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று எண்ணியவாறே அவர் நித்ரா தேவியின் வசமானுர்.

மாயா வெகுநேரம் வரை தன் எண்ணமெல்லாம் வீணுகப் போனதை எண்ணி துக்கப்பட்டுக் கொண்டிருந்தாள். கலியாணம் நடக்கும்; ஊர்வலம் வரும்; பிறகு, சாலினி புக்ககம் செல்லும்பொழுது கொஞ்சம் கஷ்டமாகத்தானிருக்கும். இருந்தாலும் அதையும் சகித்துக் கொள்ள வேண்டியதுதான்—இப்படி யெல்லாம் அவள் எண்ணியிருந்தாள். ஆனுல், இப்பொழுது என்ன நடக்கும்? எப்படி கலியாணம் செய்வது? பூர்வ ஜன்மத்தில் செய்த பாவத்தின் பலன்தான் சாலினி இப்படிப் பேசுகிருள். இல்லாவிடில், சாலினிபோன்ற பெண் ஏன் இப்படி ஒரேயடியாக மாறிவிடுகிருள்?......

அசோக் குமார், தாரக்நாத், மாயா, கோபிநாத் இவர்களெல்லோரையும் இவ்வளவு நேரம்வரை விழித்துக்

கொண்டிருக்கும்படிச் செய்த சாலினியும் வெகு நேரம் வரை தூங்கவில்லை.

நிச்சயமாக அசோக் குமார் அவளை கலியாணம் செய்து கொள்வாரா? ஒருவேளை கோபிநாத் நடுவில் தடை செய்தாலும் செய்வான். தன்னை நேசிப்பதாகச் சொன்னது கூட உள்ளன்புடன் சொன்ன வார்த்தைகளாக இல்லாமலிருக்கலாம். எது எப்படியிருந்த போதிலும், அவர் தன்னை மணம்செய்து கொள்ளுமாறு என்னென்ன முயற்சிகள் செய்யலாமோ அத்தனையும் செய்து விடுவதென்று தீர்மானித்தாள். தன்னைப் பரிகசித்த மற்ற மாணவிகளுக்கெல்லாம் அழைப்பு அனுப்புவது, அவர்கள் கலியாணத்தன்று வந்ததும் அவர்களிடம் "பார்த்தீர்களா? சாலினி என்ன நினைக்கிறாளோ அதை அவளால் நிறைவேற்ற முடியுமென்று இப்பொழுதாவது அறிந்து கொண்டீர்களா?" என்று சொல்வதாகத் தீர்மானித்தாள். கலியாணக் காட்சிகள் ஒன்றன் பின் ஒன்ருகத் தோன்ற, அவள் எப்பொழுது தூங்கினளோ, தெரியாது!

# 11

ஒன்று அவசியமென்று மனிதனுக்கு ஏற்பட்டுவிட்டால் அதை சாதித்துக் கொள்வதற்காக அவனுக்கு முன்பு இல்லாத பழக்க வழக்கங்களெல்லாம் உண்டாகி விடுகின்றன. நம்முடைய சுயநலமானது, நடப்பதையெண்ணி எதிர்காலத்தைப்பற்றிச் சிறிதும் சிந்தியாமல் கண்மூடித்தனமாக நம்மை, இழுத்துக் கொண்டு

போகிறது நல்லது, கெட்டது என்று அறியாமல் நம் ஆவல்களானது புத்தியை அடக்கி விடுகிறது. இதன் பலன் என்னவென்ருல் நம் அறிவு குறுகி வாழ்க்கையில் வெற்றி அடையாதவர்களாகப் பின்னர் வருந்துகிருேம்.

சாலினிக்கு அசோக் குமாரை கலியாணம் செய்து கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அவள் அன்பானது பவித்ரமான கங்கா நதியைப் போன்றது அன்று. சுயநலமெனும் அழுக்காறு கொண்ட குட்டையைப் போன்றது. அவள் கலியாணம் செய்துகொள்ள விரும்பினுள். ஆனுல், அவ்விவாகத் தளையில் ஈடுபட்டு வாழ்க்கையில் வெற்றி அடைவதற்காக அல்ல; தன்னைப் பரிகசித்த மற்ற மாணவிகளின் முன் தன் சாமர்த்தியத்தைக் காட்டத்தான்!

அவள் தன் தந்தையின் வார்த்தையை மீறி நடந்தாள். தாயின் ஆசைகளைத் தவிடு பொடியாக்கினுள். சமூகத்தையும் அவள் லட்சியம் செய்யவில்லை. இதற்கெல்லாம் காரணம் அவள் தன் புத்தியை உபயோகித்து ஒரு காரியமும் செய்யவில்லை.

தினந்தோறும் மாலையில் அசோக் குமார் வீட்டிற்குச் செல்வாள். அவருக்கு எப்படி, எப்படி நடந்துகொண்டால் பிடிக்குமென்பதை அறிந்து அதன்படி நடக்கலானுள். கடைசியில், தன் வினயத்தாலும், நடிப்பாலும், சாமர்த்தியத்தினுலும் வரண்ட அசோக் குமாரின் உள்ளத்தில் அன்பு வெள்ளம் பெருகி ஓடும்படிச் செய்தாள். அந்த வெள்ளத்தில் அவர் நன்ருக அகப்பட்டுக்கொண்டார்.

இந்த ரகசியக் காதல் லீலைகள் அநேகம் பேருக்குத் தெரியாது. சந்தேகமாகத் தெரிந்த சிலரும் 'நமக்கு என்ன' என்று வாயை மூடிக்கொண்டிருந்தனர். 'தன்

கந்தையைத் தானே கிழித்துக்' கொள்ளத் தாரக்நாத்தும் மாயாவும் விரும்பவில்லை.

# 12

இந்த விஷயம் ரகசியமாகவே இருந்துவிடவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அசோக் குமார்—சாலினி சம்பந்தம் ஜனங்களுக்குத் தெரிய ஆரம்பித்துவிட்டது. ஒவ்வொருவரும் மனம் போனவாறு பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். சாலினி இன்னும் காலேஜிற்குப் போய்க்கொண்டிருந்தாள். வகுப்பில் உட்கார்ந்திருக்கும் பொழுது அவள் மனம் குற்றவாளியைப்போல் இருந்தது. அதனால் அவள் ஒருவருடனும் பேசுவதில்லை. அப்படிப் பேச்சு வந்தாலும் அவ்விடத்தைவிட்டுச் சென்றுவிடுவாள். அவளைப் பற்றி மாணவர்கள் 'குசு குசு' என்று பேசிக்கொள்வார்கள். மாணவிகள் அவளைச் சுட்டிக் காட்டி தங்களுக்குள் ஏதேனும் பேசிக்கொள்வார்கள்.

* * *

காலேஜில் ஐந்தாவது மணி. ப்ரொபஸர் போஸின் லெக்சருக்குப் போக சாலினி விரும்பவில்லை. அவள் நேரே ப்ரொபஸர் அசோக் குமாரின் அறைப் பக்கம் சென்றாள். அறைக் கதவு மூடியிருந்தது. உள்ளே அசோக் குமார் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். ப்ரொபஸர் போஸ் தலைவலியினால் லெக்சர் செய்யவில்லை. அதனால் அவர் மாணவர்களைப் போகச் சொல்லிவிட்டார்.

இதை சாலினி எதிர்பார்க்கவில்லை. கதவைத் திறப்பதற்
காக அவள் முயன்று கொண்டிருக்கும் பொழுது, எல்லா
மாணவிகளும் அவ்விடம் வந்து சேர்ந்தனர். 'கொல்'
என்று சாலினியைப் பார்த்து எல்லோரும் சிரித்தனர்.
சாலினி ஒன்றும் புரியாதவளாக அப்படியே பிரமித்து
நின்றுள்.

அதற்குள் ஒரு மாணவி, 'காதலரின் பாதை......!'
என்று ஆரம்பித்தாள். அவளை மறித்து இன்னொருவள்
"கெமிஸ்ட்ரி க்ளாஸா? அல்லது காம தேவனின்
அறையா?" என்றுள். "சாலினியின் கலியாணம் எப்
பொழுது?" என்றுள் ஒரு அதிகப்பிரசங்கி. சாலினிக்குக்
கோபம் கோபமாக வந்தது. ஆனுல், வார்த்தை
ஒன்றும் எழவில்லை. உடனே நிசா "இந்த மாதிரி
விஷயங்களைச் சொல்ல வெட்கப்படும் பெண்களைச் சேர்ந்
தவளல்ல, சாலினி. எப்பொழுது, தானே ஒரு கணவனை
தேடிக் கொள்கிறுளோ, அப்பொழுது கலியாணத்தைப்
பற்றிச் சொல்ல அவளுக்கு என்ன சங்கோஜம்?"
என்றுள்.

"ஆம், ஆம்! உனக்குக் கலியாணப் பத்திரிகை
கிடைத்துவிடும், நிசா!" இப்படி சாலினி சொல்லிக்
கொண்டிருக்கும் போதே ப்ரொபஸரின் அறைக் கதவு
திறக்கும் சப்தம் கேட்டது. மற்ற மாணவிகளெல்லாம்
ஓடிவிட்டனர். சாலினி உள்ளே நுழைந்ததும் அசோக்
குமார், "உன்னிடம் அவர்கள் என்ன சொல்லிக் கொண்
டிருந்தனர்!" என்று கேட்டார்.

"என்ன சொல்வார்கள்! நம் புனிதமான அன்பைப்
பற்றி அவர்களுக்குத் தோன்றியபடி வம்பளப்பார்கள்.
இவர்கள் மாத்திரமென்ன? நகர் முழுவதும் இதே பேச்
சாகத்தான் இருக்கிறது. நீங்கள் இந்த அறையைவிட்டு

வெளிக் கிளம்புவதில்லை. அதனல் உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. வெளியில், எல்லா அவதூறுகளையும் நான் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது!" என்று சாலினி மாய்மாலக் கண்ணீர் வடித்தாள். "ஓஹோ! இது ரொம்ப கெட்ட வழக்கம்!" என்று அசோக் குமார் கோபத்துடன் சொன்னர்.

"இந்த மாதிரி கேட்டுக் கொண்டிருப்பதைவிட உயிர் துறப்பதே சரியென்று எனக்குப் படுகிறது. நீங்கள் என்னைக் கலியாணம் செய்து கொள்ளாவிட்டால், ஒரு தாசியினிடம் இருக்கும் மதிப்புக்கூட ஜனங்களுக்கு என்னிடம் இராது!" என்ருள் சாலினி.

"சீக்கிரம் ரிஜிஸ்டர் செய்ய வேண்டியதுதான்! ஆனல், முக்கியமான, சிக்கலான காரியத்தைக் கொஞ்சம் தள்ளி......!" நடுவில் சாலினி குறுக்கிட்டு, "தள்ளிப் போடுவதில் லாபமென்ன? வெளியில் உண்டாகி யிருக்கும் கெட்ட பெயரை நீங்கள் இன்னும் அறிந்து கொள்ளவில்லை!" என்ருள்.

"சரி! இன்னும் ஒரு வாரம் பொறுத்துக்கொள்!"

"இல்லை! நம் கலியாணம் இன்னும் இரண்டு தினங்களுக்குள் நடந்துவிட வேண்டும்!"

"இந்த வாரத்திற்குள் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட சில விஷயங்களை 'அகாடமி'க்கு அனுப்பவேண்டி யிருக்கிறது. அதற்குப் பிறகு கலியாண ஏற்பாடு செய்யலாம்!"

"இந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு செய்துகொண்டால் போகிறது. இப்பொழுது அதை ஒத்திப் போடுங்கள்!"

"ஆனல், நான் இன்னும் லீவு எடுத்துக்கொள்ளவில்லை. ஒரு ஏற்பாடும் செய்யவில்லை...!"

"எல்லா ஏற்பாடுகளையும் நான் செய்து கொள்கிறேன். பணமிருந்தால் ஒரே நாளில் உலகையே விலைக்கு வாங்கி விடலாம்! நீங்கள் லீவிற்கு எழுதிப்போடுங்கள்."

சாலினி ஜயித்துவிட்டாள். அசோக் குமார் தோற்றுவிட்டார். சுபாவமாகவே அசோக் குமாரிடம் அதிகார தோரணைக்கு வேண்டிய கடுமை கிடையாது. ஆரம்பத்திலிருந்தே, தன் கற்பனையுலகில் தன் காலத்தை நடத்தி வந்தார். அதனால் உலக வியவகாரம் ஒன்றும் அவர் அறிந்துகொள்ளவில்லை. அவர் பலவீனத்தைக் கண்ட சாலினி அவரைத் தன் வசப்படுத்திக்கொள்ளும் வழியை சுலபமாகக் கண்டுகொண்டாள். சாலினி சொன்ன பிரகாரம் அசோக் குமார் இரண்டு நாட்களுக்கு லீவு எழுதிப்போட்டு விட்டார்.

## 13

சாலினி கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதில் முனைந்திருந்தாள். இவ்வளவு ஏற்பாடுகளும் தன்னால் எப்படிச் செய்ய முடிந்ததென்று அவளே ஆச்சரியப்பட்டாள். ஐயாயிரம் அழைப்புப் பத்திரிகை அச்சடித்து எல்லோருக்கும் கொடுத்தாள். தனக்கும், அசோக் குமாருக்கும் வேண்டிய துணிமணிகளை வாங்கினாள். டீபார்ட்டி, ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டிய விஷயங்கள் எல்லாம் தயாராகிவிட்டன. இம்மாதிரியாக

அசோக் குமாரின் ஐயாயிரம் ரூபாயையும் இரண்டு நாளில் சாலினி ஊதிவிட்டாள்.

நிசாவிற்குத் தானே நேரில் சென்று பத்திரிகையைக் கொடுத்தாள்.

என்ன ஏற்பாடாகி இருக்கிறதென்றுகூட அசோக் குமாருக்குத் தெரியாது. சாலினியிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு அவர் தன் வேலையில் மறுபடியும் மூழ்கி விட்டார். இன்னும் இரண்டொரு தினங்களில் அவருக்கு கலியாணம் நடக்கப் போகிறதென்று அவரைப் பார்த்த ஒருவரும் நினைக்கமாட்டார்கள்.

மறுநாள் காலை கலியாணம் நடக்கவிருந்தது. அன்று இரவு சாலினி வீட்டிற்குச் சென்றாள். அவள் வீட்டிற்குச் சென்றபொழுது நள்ளிரவாகி விட்டது. தாரக்நாத்தும், மாயாவும் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். சாலினி உள்ளே நுழைந்ததும் தாரக்நாத், "சாலினி! நான் உன்னை ஒன்று கேட்க விரும்புகிறேன்! நீ உன் வழியே செல்லப் போகிறாயா, அல்லது எங்கள் சொற்படி கேட்கப் போகிறாயா?" என்றார்.

சாலினி ஒன்றும் பேசவில்லை. என் வழியேதான் நான் செல்வேன் என்று அவளால் சொல்லமுடியவில்லை. இரண்டுகலியாணப் பத்திரிகை எடுத்து ஒன்றில் தந்தையின் பெயரும் இன்னொன்றில் தாயின் பெயரும் எழுதி இருவரிடமும் கொடுத்தாள். அதைப் படித்த தாரக்நாத் அதைக் கசக்கிக் கீழே எறிந்தார். கோபத்தினால் அவர் உதடுகள் துடித்தன. "மகா பாபி!" என்று முணுமுணுத்தார். மாயா விஷயம் என்னவென்று தெரிந்துகொண்டாள். அவள் அப்படியே அயர்ந்து உட்கார்ந்து விட்டாள். "சாலினி! நீ பிறந்து எங்களை அவமானப் படுத்துவதற்கு

நீ பிறக்காமலேயே இருந்திருக்கக் கூடாதா?" என்று தன்னையும் அறியாமல் மாயா கூறினாள்.

"ரொம்ப சரிதான்! இந்த யோசனை வெகு வருஷங்களுக்கு முந்தியே ஏற்பட்டிருக்கவேண்டும்!" என்றாள் சாலினி.

இதைக் கேட்ட தாரக் நாத்திற்குக் கோபம் பொங்கியது. அவர் ஆத்திரத்துடன் எழுந்தார்.

"நீ இந்த நிமிஷமே வீட்டை விட்டுச் சென்று விடு! உன் போன்ற துஷ்டையின் நிழல்கூட என் வீட்டில் படக் கூடாது. இந்த வீட்டின் கௌரவத்தை உதறித்தள்ளிய நீ இங்கு இருக்கவேண்டிய அவசியமில்லை, புறப்படு!" என்று அவள் கையைப் பிடித்து வெளியில் கொண்டுவிட்டார். ஆனால், மாயா ஓடிச்சென்று அவளுக்குப் புத்தி சொல்லத் தொடங்கினாள். சாலினி ஒன்றையும் லட்சியம் செய்யாமல், "நான் என் இஷ்டப்படி செல்வதென்று தீர்மானித்து விட்டேன். இனி என்னை திருப்புவதென்பது கஷ்டமானது மாத்திரமல்ல. அது முடியாத காரியம்தான்!" என்றாள். இதைக் கேட்ட தாரக்நாத் மாயாவைப் பிடித்து உள்ளே தள்ளிவிட்டு சாலினியை வீட்டை விட்டுப் போகும்படி உத்தரவிட்டார். அவர் கோபம் உச்ச நிலையை அடைந்தது. சாலினிக்கு துக்கமும், கோபமும் பொங்கியது. ஆனால், பிடிவாதக்காரியான அவள் அந்த வீட்டை விட்டு வெளியேறினாள்.

# 14

சாலினி நேரே அசோக் குமார் பங்களாவிற்குச் செல்ல விரும்பவில்லை. ஏனெனில், தான் பெற்றோர்களிடம் தகராறு செய்து கொண்டிருப்பதை அவர் அறிந்து கொண்டுவிட்டால் என்ன செய்வதென்று பயந்தாள். தன் தாய் தந்தையின் செய்கையை எண்ணி அவர்களை மனதிற்குள் வைதுகொண்டே மெல்ல சென்று கொண்டிருந்தாள்.

தூக்கத்திலிருந்த பம்பாய் நகரம் விழிப்படைந்தது. ட்ராம், பஸ், முதலியன ஓடக்கிளம்பின. வேலைக்குச் செல்பவர்கள் குறுக்கும், நெடுக்கும் ஓடோடிச் சென்று கொண்டிருந்தனர். பத்திரிகை விற்கும் பையன்கள் ஒரே சப்தம் போட்டு பத்திரிகை விற்றுக்கொண்டிருந்தனர். 'டயிம்ஸ் ஆப் இன்டியா' என்ற பத்திரிகையின் பெயர் சாலினியின் காதில் விழவே அவள் தன் சிந்தனையிலிருந்து விழிப்படைந்தாள். ஒரு பிரதி வாங்கிக்கொண்டு ட்ராம் ஸ்டேஷனருகில் சென்று பிரித்துப்பார்க்கலானாள். முக்கியமாக அதில் ஒரு விஷயம் பார்க்க விரும்பினாள். நாலைந்து பக்கம் புரட்டியதும் அது கிடைத்துவிட்டது. அதைப் படித்து முடிப்பதற்குள் கால்கள் கடுக்கத் தொடங்கின. வெயில் கிளம்பிவிடவே அவ்விடமிருந்து அசோக் குமார் பங்களாவிற்குக் கிளம்பினாள்.

அசோக் குமார் ஏதோ யோசனை செய்துகொண்டே வராந்தாவில் உலவிக்கொண்டிருந்தார். இவ்வளவு சீக்கிரம் அவர் சாலினியை எதிர்பார்க்கவில்லை. கோபிநாத் காலை ஆகாரம் தயாரித்துக் கொண்டிருந்தான். ஏதோ கசப்பான வஸ்துவை சாப்பிட்டுவிட்டதுபோல் முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டிருந்தான். தான் போகும் சமயம் அசோக் குமார் தூங்கிக்கொண்டிருப்பா ரென்று எண்ணிய சாலினி, அவர் உலவிக் கொண்டிருப் பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். செருப்பு சத்தம் கேட்டதும் அசோக் குமாரின் சிந்தனை கலைந்தது. "சாலினி, என்ன இவ்வளவு சீக்கிரம்.........?" என்றார். சாலினி அவரருகில் சென்று, "இன்று நம் மணவாழ்க்கையின் ஆரம்பதினம். ஆதலால், நாமிருவரும் சேர்ந்தாற்போல், மங்களகரத்துடன் புலரும் இந்தக் காலை நேரத்தில் சூரிய நமஸ்காரம் செய்யவேண்டுமென்று எண்ணித்தான் சீக் கிரம் வந்து விட்டேன். வாருங்கள்; நமஸ்காரம் செய் வோம்!" என்றாள் சாலினி.

மேலான அவள் எண்ணத்தைக் கேட்ட அசோக் குமாருக்கு அவளிடம் ஏற்பட்டிருந்த காதலுடன், உயர்ந்த நன்மதிப்பும் ஏற்பட்டது. சந்தோஷத்தினால் அவர் பூரித் தார். தன் ஜன்மத்திலேயே இப்பொழுதுதான் முதன் முதலாக நமஸ்காரம் செய்கிறாரோ என்னவோ! சாலினி யும் நமஸ்கரித்தாள். ஆனால், பக்திசிரத்தையுடன் அல்ல; வெளி வேஷத்திற்குத்தான்! இந்த நாடகத்தைப் பார்த்த கோபிக்கு சாலினியிடம் கொஞ்சம் மதிப்பு உண்டாகியது. அவனும் நமஸ்கரித்தான். பக்திசிரத்தையுடன், புனிதமான அன்புடன் பிரார்த்தித்தான்!

அசோக் குமாரும், சாலினியும் டீ அருந்திக் கொண் டிருந்தனர். சாலினி 'டயம்ஸ்' பத்திரிகையில் வந்திருக்கும் விஷயத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

கலியாண ஏற்பாட்டைப் பற்றி பேச்சு நடந்தது. இவர்கள் பேச்சைக் கவனியாமல் கோபி தன் வேலையைச் செய்துகொண்டிருந்தான். அசோக் குமார், "உன் சொந்தக்காரர்களுக்கெல்லாம் தெரிவித்து விட்டாயா?" என்று கேட்டார்.

"எனக்கு சொந்தக்காரர்கள் யார் இருக்கிறார்கள்? என் பெற்றோர்களே எனக்கு விரோதமாக இருக்கிறார்கள். அவர்கள் தேடிப் படிக்காத ஒருவனை நான் கலியாணம் செய்துகொள்ளவில்லை என்று என்னிடம் கோபமா யிருந்தார்கள். பிறகு நான் தங்களைக் கலியா யாணம் செய்து கொள்வதாகத் தீர்மானித்துவிட்டதைக் கூறியதும் அவர்கள் என்னைத் தங்கள் எதிரியாக எண்ணி விட்டனர். கலியாண சமயத்தில் இந்த ஊரிலிருந்தால் தங்களுக்கு அவமானம் என்று எண்ணி கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டனர். ஒருவரை ஒருவர் நேசித்து கலியாணம் செய்துகொள்ளும்பொழுது அவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று அவர்களுக்குத் தோன்றவில்லை. அவர்களிஷ்டப்படி எனக்குப் பிடிக்காத ஒருவரை நான் கலியாணம் செய்து கொள்ள விரும்பவில்லை......!" என்று சொல்லிக்கொண்டே சாலினி கண்களைத் துடைத்துக் கொண்டாள். அசோக் குமாரின் மனம் இளகியது. ஏதோ சிந்தனை செய்தவாறே அவர் உட்கார்ந்திருந்தார். சாலினி மீண்டும், "தங்கள் பிரசங்கத்தைக் கேட்டபிறகு கூட என் தகப்பனாரைப் போல் சில ஜனங்கள் இருக்கிறார்களேயென்று ஆச்சரியமாக இருக்கிறது!" என்றாள் சாதுரியமாக. அவள் எழுந்து சென்றதும் அசோக் குமார் கோபிநாத்திடம் சாலினியின் கஷ்டமான நிலைமையைச் சொல்லி, "கோபி! சாலினியை சந்தோஷப் படுத்துவது ஒரு புண்ணிய காரியமில்லையா?" என்றார்.

"ஆம்; அதில் சந்தேகமென்ன!" என்றான் கோபி தன் எண்ணங்களை மறைத்துக்கொண்டே.

# 15

உயர்ந்த உடைகளினாலும், தன் மனோரதம் ஈடேறிய சந்தோஷத்தினாலும் சாலினி அதிரூபவதியாக விளங்கினாள். அவள் அழகைக் கண்டு அசோக்குமார் பெருமை கொண்டார். சரியாகப் பதினோரு மணிக்கு ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில் அவசியமான சட்ட விவகாரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு புருஷன், மனைவி என்னும் உறவில் அவர்கள் உலகில் தள்ளப்பட்டார்கள்.

அசோக்குமாரின் சகோதர ஆசிரியர்களும், மாணவர்களும் நகரப் பிரமுகர்களும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். அருகிலிருந்த பத்துப்பன்னிரெண்டு காமிராக்கள் 'கட், கட், கட்' என சப்தித்து ஓய்ந்தன; சாலினியின் கண்கள் நிசாவைத் தேடிக்கொண்டிருந்தன; ஆனால், அவள் காணப்படவில்லை. மாலை 'தாஜ்' ஹோட்டலில் விருந்து நடந்தது. தம்பதிகளைப் பற்றியும், அவர்களின் அழகிய ஜோடியைப் பற்றியும், சந்தோஷகரமான அவர்களின் எதிர்காலத்தைப் பற்றியும், சமூகத்தின் கட்டுப்பாடுகளை உதறித் தள்ளிய அவர்களின் தைரியத்தையும் எல்லோரும் மெச்சிப் பேசினர்.

அசோக் குமார்-சாலினியும் இதை லட்சிய விவாகமாக எண்ணி சந்தோஷித்தனர். மறுநாள் பம்பாயில்

வெளியான பத்திரிகைகளிலெல்லாம் இந்தக் கலியாணத்தைப்பற்றி விமர்சனம் வெளிவந்தது.

ஆனல், கோபிநாத் ஏனே வருத்தத்துடன் காணப்பட்டான். எஜமானின் சந்தோஷத்தில் தானும் கலந்து சந்தோஷமாக இருப்பதுதான் ஒரு நல்ல வேலைக்காரனின் தர்மமென்று அடிக்கடி மனதைத் திருத்திக்கொள்ள முயன்ருன். கலியாணமென்பது ஸ்திரீ-புருஷனின் சுகத்திற்காக ஏற்பட்டதேயன்றி, மற்றவர்களின் சந்தோஷத்திற்காகச் செய்யும் விஷயம் அல்லவென்று ஆயிரம்தரம் மனதில் யோசனை செய்துவிட்டான். இருந்தும், அவன் உள்ளம் சந்தோஷமாகவேயில்லை. ஒரு வேளை, கலியாணத்தைப் பற்றி அவன் வேறு விதமாகக் கற்பனை செய்திருப்பான். ஜனங்கள் வருவார்கள்; கலியாணப் பேச்சு ஆரம்பமாகும்; எஜமான் கலியாணத்திற்கு சம்மதிப்பார். பிறகு முகூர்த்தம் வைப்பார்கள்; ஊர்வலம் நடக்கும்; இப்படியாக...பொதுவாக கலியாணத்திற்குப் பிறகு எல்லோரிடமே ஒரு விசேஷ மாறுதல் ஏற்படுகிறது. அவர்களின் தினசரி.காரியங்கள் மாறுதலடைகிறது. அதற்கு முன் காணப்படாத கம்பீரமும் ஏற்பட்டு விடுகிறது. கொஞ்சம் பொறுப்பும் உண்டாகிவிடுகிறது. ஆனல், அசோக் குமார் இதற்கு விதிவிலக்காக இருந்தார். எள்ளத்தனை மாறுதல் கூட அவரிடம் காணப்படவில்லை. வீட்டில் மனைவி வந்துவிட்டதால் அவரது விஞ்ஞான மோகம் குறைந்துவிடவில்லை. அதே பிரகாரம், முன்போலவே ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்.

கலியாணத்திற்கு முன் பெண்கள் தங்கள் மணவாழ்க்கையின் இன்பங்களைப் பற்றி ஓர் கோட்டை கட்டி விடுகின்றனர். எப்பொழுது பெண்களின் அன்பு அலைகள் புருஷர்களின் மனதில் மோதுகின்றனவோ, அப்பொழுதே

அவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைந்தவர்களாக ஆகி விடுகிறுர்கள். சாலினியும் எவ்வளவோ எண்ணி யிருந் தாள். ஆனல், அவள் எண்ணங்களெல்லாம் அசோக் குமாரின் விஞ்ஞானப் பாறையில் மோதி சுக்கு நூரு கியது.

நமக்கு ஒரு காரியம் ஆக வேண்டுமானல் அதற்காக நாம், இரவும் பகலும் வெற்றியடையவேண் டிய வழிகளை யெல்லாம் சிந்தித்து நம் எண்ணத்தை சாதித்துக்கொள்ளப் பார்க்கிறேம். இது வாழ்க்கைப் போராட்டத்தின் ஒரு நியமம்.

ஆனல், வெற்றி கிட்டியதும் அதை விட்டு இன் ெருரு விருப்பத்தின் பின் செல்லுகிறேம். முதல் முயற் சியின் பலனை நாம் நினைப்பதில்லை. சாலினி முதலில் அசோக் குமாரை கலியாணம் செய்துகொள்ளமுயற்சித்து வெற்றியடைந்தாள். இந்த கலியாணத்திற்காக பெற்றேர் களையும், சமூகத்தையும் விரோதித்துக்கொண்டாள். கலியாணத்திற்குப் பிறகு, தன் கடமையை உணராமல், வேறு பாதையில் செல்லத் தொடங்கினுள். கலியாணம் செய்துகொள்வதின் அர்த்தம் என்னவென்பதையும் அவள் யோசிக்கவில்லை; கணவனுக்குச் செய்ய வேண் டிய கடமைகளையும் உணரவில்லை.

# 16

ஜனங்களின் நிந்தனைகளைக் கேட்டுக் கேட்டு தாரக்நாத் களைத்து விட்டார். "தாரக்நாத்தும், மாயாவும் சம்மதித்தே இந்தக் கலியாணம் நடந்திருக்கிறது. இல்லாவிடில், ஒரு பெண் துணிந்து ஜாதிக்கட்டுப் பாட்டைத் தகர்த்து வீட்டைவிட்டு வெளியேறி விடுமா?" என்று அவர்கள் ஜாதித்தலைவன் கூட சொல்லிவிட்டார். அநுதாபமும், ஆறுதலளிக்கும் மொழிகளையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஒருவரை, அபாண்டமான வார்த்தைகளால் புண்படுத்தினல் அவருக்கு கோபத்திற்குப் பதிலாக வெறுப்புத்தான் உண்டாகிறது. சாலினியின் கலியாணத்தினல் ஏற்பட்ட கஷ்டத்தைவிட, சமூகத்தின் தொந்திரவுதான் தாரக்நாத்திற்குப் பொறுக்க முடியாமல் இருந்தது. அவர் தேகநலம் குன்றியது. மாயா துக்கத்தினல் உருகிப்போனள்.

அவர்கள் ஜாதித்தலைவர், வார்த்தையால் எவ்வளவு தாக்கமுடியுமோ அவ்வளவும் தாக்கினர். அதில் களைத்துப் போகவே, பேனவின் மூலம், கலியாணத்தைப்பற்றி நிந்தித்து பத்திரிகைகளுக்கு அனுப்பினர். எல்லாக் குற்றத்தையும் தாரக்நாத் தலையில் போட்டுவிட்டார். ஒருநாள் ஜாதி ஜனங்கள் கூடி தாரக்நாத்தை ஜாதியை விட்டு விலக்கிவிட்டனர். அவர் ஸ்தானத்தில் வேருெருவர் இருந்தால் பயித்தியமே பிடித்திருக்கும். ஆனல், தாரக்நாத் சமாளித்துக் கொண்டார். ஒருநாள் தாரக்நாத் மாயாவிடம்

"நான் இதற்கு பிராயச்சித்தம் செய்துகொள்ளப் போகிறேன் மாயா" என்றார்.

"பிராயச்சித்தம் செய்துகொள்ளும்படியாக நீங்கள் என்ன பாபம் செய்தீர்கள் ?" என்றாள் மாயா.

"மாயா! பிராயச்சித்தம் பாபத்திற்கு மாத்திரமல்ல ; நாம் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் அதனால் முடியும். நான் சாலினியை பாரதப் பெண்மணியாக வளர்க்காமல் மேல்நாட்டு நாகரிகத்திற்கு இறையாக்கி விட்டேன். இப்பொழுது அதற்காக வருந்துகிறேன். விஷ—விருட்சத்திற்கு விதை விதைத்தவன் நான். அந்த தோஷத்திற்குப் பரிகாரம் தேடப் போகிறேன்..." என்றார் தாரக்நாத்.

"பரிகாரம் என்ன ? அதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் ?" என்றாள் மாயா.

"இன்னும் ஏற்பாடு செய்யவில்லை. ஆனால் அதைச் செய்த பிறகுதான் என் மனம் சாந்தியடையும் !" என்றார் தாரக்நாத். மாயா சற்று தைரியம் அடைந்தாள். எங்கே அவர் தற்கொலை செய்து கொண்டு விடுவாரோவென்று பயந்து கொண்டிருந்தாள். அவருடைய இந்த வார்த்தைகளைக்கேட்டதும் அவள் பயம்பறந்துசென்றது. தாரக்நாத் பரிகாரத்தின் ஏற்பாட்டைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தார். மற்றவர்கள் செய்த தொந்தரவினால் அவர் மிக்க கஷ்டப்பட்டார். ஆனால், இப்பொழுது தான் செய்த பிழையை உணர்ந்து கொண்டார். அதற்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் தீர்மானித்து விட்டார். இதனால் அவர் மனம் திருப்தியடைந்தது. உள்ளூர அரித்துத் தின்னும் கஷ்டத்தைத் தடுக்கும் சக்தி பிராயச்சித்தத் திற்கு உண்டு. அது புனிதமான வாழ்க்கையையும், மனதிற்கு சாந்தியையும் உண்டாக்கி விடுகிறது.

# 17

"வீட்டுவிவகாரங்களெல்லாம் சரியாக நடந்துகொண்டு வருகிறதா?" என்று கேட்டுக்கொண்டே அசோக் குமார் மாதச் சம்பளமான ஆயிரத்தி இருநூறு ரூபாய் நோட்டுக்களை சாலினியிடம் கொடுத்தார்.

"நடக்காமல் என்ன? 'மெட்ரிக்' வரை நான்தான் வீட்டு விவகாரங்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அதுவுமன்றி மாதம் ஒரு முறைதான் சம்பளம் கொடுப் பார்களென்றும், வரவிற்குத் தகுந்தாற்போல் செலவு செய்ய வேண்டுமென்றும் எனக்குத் தெரியும்!" என்று அவருக்கு நம்பிக்கை ஏற்படும் முறையில் சொன்னாள்.

"உன் அழகைப்போல் உன் ஏற்பாடுகளும் நன்றாகத் தானிருக்கும்!" என்று சொல்லிக்கொண்டே சாலினியின் முதுகில் 'ஷொட்'டு கொடுத்தார் அசோக் குமார்.

"நீங்கள் இரவு எவ்வளவு நேரங்கழித்து வீட்டிற்கு வருகிறீர்கள்! பகலிலும் சரி, இரவிலும் சரி வீட்டில் தங்கு வதே இல்லை. எனக்குப் பொழுது போவது எவ்வளவு கஷ்டமா யிருக்கிறதென்று நீங்கள் அறியவில்லை. நீங்கள் சீக்கிரம் வீட்டிற்கு ஏன் வருகிறதில்லை?" என்றாள் சாலினி.

"ஆம், சாலினி! இப்பொழுது நான் வருவதற்கு நேரந்தான் ஆகிவிடுகிறது. ஏனென்றால், இப்பொழுது புதிதாக ஆராய்ச்சி ஒன்று தொடங்கி யிருக்கிறேன். அதில்,

வெற்றி சீக்கிரம் கிடைத்துவிடுமென்று தோன்றுகிறது...!'' இப்படிச் சொல்லிக் கொண்டே அசோக்குமார் நின்றவாறே அதைப்பற்றி யோசிக்கத் தொடங்கி விட்டார்.

"உங்கள் முயற்சிக்கு என்ன வெகுமதி கிடைக்கும்?''

"வெகுமதியா? அதற்காக, நான் முயற்சி செய்யவில்லை. உண்மைத் தத்துவத்தை அறியும்பொருட்டு ஆராய்ச்சியில் ஈடுபடுவதேயொழிய பணத்தையே நோக்கமாகக் கொண்டு செய்யும் காரியம் விஞ்ஞானமல்ல. முயற்சியில் வெற்றியடைவதே விஞ்ஞானிகளின் முக்கிய நோக்கம், அதுவே வெகுமதி!''

"இந்தக் கொள்கைகள் எல்லாம் எனக்குப் பிடிப்பதில்லை. பணம் சம்பாதிப்பதுதான் எனக்கு முக்கியமாகப் படுகிறது!''

"பணம், பணமென்கிருயே; அதன்மூலம் உனக்கு என்ன சுகம் கிடைத்துவிடுகிறது!'' என்று அசோக்குமார் சிரித்தவாறு கேட்டார்.

"பணமிருந்தால் எவ்வளவோ செய்யலாம். ஒரு மோட்டார் வாங்கலாம். இன்னும் துணிமணிகள் இஷ்டப்படி புதிது புதிதாக வாங்கலாம். வாழ்க்கையே அதனுல் சுவர்க்க போகமாகிவிடாதா.........!''

"ஆனுல், பணத்தினுல் என்ன கிடைத்தாலும், சாந்தியைமாத்திரம் விலைக்கு வாங்க முடியாது. வெளி வேஷத்திற்கான ஆர்ப்பாட்டங்களை யெல்லாம் பணம் பூர்த்தி செய்துவிடும். ஆனுல், அந்தரங்கத்தில் ஏற்படவேண்டிய அமைதியை அது அளிக்காது. சந்தோஷம், சம்பத்து இவ்விரண்டும் தனித்தனி விஷயங்கள். தெரிந்ததா, சாலினி?''

"தாங்கள் சொல்வதை நான் புரிந்துகொண்டு விட்டேன்! ஆனால், நீங்கள்தான் என்னை இன்னும் அறிந்து கொள்ள வில்லை!" என்றாள் சாலினி.

அவரிடமிருந்து பதிலை எதிர்பார்க்காமல் மீண்டும் தொடர்ந்து சொல்லத்தொடங்கினாள். "நான் தங்களைக் காதலித்து, உங்களையே மணம் செய்து கொள்வதற்காக என் பெற்றோர்களையும் விரோதித்துக் கொண்டேன். சமூகம், தாய், தந்தை இவர்கள் ஒருவராலும் என்னைத் தடுக்க முடியவில்லை. ஆனால், நீங்கள் வீட்டிலேயே தங்குவதே இல்லை. எனக்குப் பொழுது போகவில்லை. ஆகையால் நான் 'மலபார் க்ளப்'பில் மெம்பராகச் சேர்ந்து விட்டேன்!"

"என்ன? 'மலபார் க்ளப்'பிற்குப் போக ஆரம்பித்து விட்டாயா?" என்றார் அசோக் குமார். அவர் முகத்தில் கவலைக்குறி காணப்பட்டது.

"ஏன் கவலைப்படுகிறீர்கள்? நான் இங்குவந்து ஒரு மாதமாகிறது. நீங்கள் இன்னும் விஞ்ஞானத்தை விட வில்லை. உங்களுக்கு எப்படி அதை விட முடியவில்லையோ, அதேபோல் எனக்கும் வாழ்க்கையின் ஆனந்தத்தை அநுபவியாமல் பொழுதை வீணாக்க முடியவில்லை!"

"ஆனால், 'க்ளப்'பின் கெட்ட சகவாசங்களில் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்!" என்று அசோக் குமார் அவளுக்கு புத்திமதி கூறினார்.

"என்மேல் சந்தேகப்படுகிறீர்களா?"

"சந்தேகப்பட வில்லை. நீ ஸ்திரீயானதால் ஜாக்கிரதையாயிருக்க வேண்டு மென்பதற்காகச் சொன்னேன்!"

"உங்கள் பிரசங்கத்தை மறந்து விட்டீர்களே? ஸ்திரீகள் புருஷர்களைவிட குறைந்தவர்களென்றுதானே எண்ணுகிறீர்கள். ஆனால்......!"

"சரி!" நீ உன் இஷ்டப்படி செல்! ஆனால் சாலினி, சந்தேகம் ஏற்படும்படியாக நடந்துகொள்ளாதே. சந்தேகமென்னும் வியாதிக்கு மருந்து கிடையாது. நம்பிக்கையுள்ளவரை தான் சாந்தி நிலவும். அவநம்பிக்கை ஏற்பட்டு விட்டால் அமைதியின்மை ஏற்பட்டுவிடும். இவ்விரண்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு......!" என்று அசோக் குமார் மிகுந்த சந்தேகத்துடனும் பயத்துடனும் அவளிடம் சொல்லிவிட்டுச் சாப்பிட உள்ளே சென்றார். சாலினி சற்றுநேரம் அவ்விடம் நின்று கொண்டு ஏதோ யோசித்தவண்ணம் இருந்தாள். பிறகு எங்கோ வெளியே கிளம்பிச் சென்றாள்.

சாப்பாடெல்லாம் பறிமாறிவிட்டு அசோக்குமாரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் கோபிநாத். அசோக் குமார் நேரே போய் சாப்பிட உட்கார்ந்தார். ஆனால், அவருக்கு சாப்பிடப் பிடிக்கவில்லை. இன்று; அவர்களிருவரும் பேசிக்கொண்டிருந்ததைக் கோபிநாத் கேட்டுக்கொண்டிருந்தானே என்னவோ, அவன் அதைப்பற்றி என்ன எண்ணிக் கொண்டிருக்கிறானே என்ற சந்தேகம் அவருக்கு எழுந்தது. சாலினியின் நடவடிக்கைகளைப் பற்றித் தன் மனதில் எழும் எண்ணங்களை தெளிவாகக் கோபிநாத்திடம் அவரால் சொல்ல முடியுமா?

தன் பலவீனத்தை கோபியின் முன் ஒப்புக்கொள்ள அவர் தயாராயில்லை. ஆனால், கோபிநாத் இன்று அவர்களுக்குள் நடந்த சம்பாஷணைகளை கேட்டிருக்கிறானா இல்லையா யென்பதை அறிய அவர் விரும்பினார்.

"என் கோபி! எஜமானியிடம் உனக்கு ஒத்துக் கொள்கிறதா?" என்று அசோக் குமார் சாப்பிட்டுக் கொண்டே கேட்டார்.

"எஜமான்! வேலைக்காரர்களுக்கு ஒத்துக்கொள்வது, கொள்ளாதது என்பதே கிடையாது. சேவை செய்வதே எங்கள் நோக்கம். எப்படித் தங்களுக்கு உண்மையாக ஊழியம் செய்கிறேனோ அதேபோல் எஜமானியம்மாளுக்கும் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன்!" என்று கோபி அந்தரங்கமாகக் கூறினான்.

"சரி! கோபிநாத், இந்தக் கலியாணம் அசாதாரணமானதுதான். ஆனால் சந்தோஷமளிப்பதென்பதையாவது நீ ஒப்புக்கொள்வாயல்லவா?" என்றார் அசோக்குமார்.

"இந்தக் கலியாணத்தினால் தங்களுக்கு சந்தோஷம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் எனக்கு ரொம்ப விசித்திரமாக இருக்கிறது!"

"இந்தமாதிரி நீ எங்கேயும் பார்த்திருக்க மாட்டாய். அதனால் தான் உனக்கு இது விசித்திரமாகப் படுகின்றது!"

"அதனால் இல்லை, எஜமான்! எஜமானியம்மாள் இங்கு வந்தும் தங்களுடன் ஒன்றுபடவில்லையென்பது தான் எனக்கு விசித்திரமாகப் படுகிறது!"

"சாலினி எஜமானியாயிருக்க வந்திருக்கிறாளேயன்றி, அடிமையாயிருக்கவல்ல.........!"

"அடிமை—எஜமான் என்பதைப்பற்றி நான் சொல்லவில்லை, எஜமான்! எஜமானியம்மாளிடம், பெண்களுக்குரிய மிருதுத்தன்மை, தோழமைக்கு வேண்டிய தயாளகுணம், சதிக்குரிய பதிபக்தி இவைகள் ஒன்றும் காணப்படவில்லை.........!"

"நீ பழைய பழக்க வழக்கங்களுக்கு அடிமை. அதனால் தான்......!" என்று, அசோக்குமாருக்குச் சொல்லப் பிடிக்காவிட்டாலும் சொல்லும்படி நேர்ந்து விட்டது.

"சரிதான்! இருக்கும்!" என்று சொல்லிக்கொண்டே கோபிநாத் தன் வேலையில் ஈடுபட்டான். அசோக் குமார் சாப்பாட்டை முடித்துக்கொண்டு காரில் எங்கோ கிளம்பினார். கவலையினாலும், விசாரத்தினாலும் அவருள்ளம் ஊசலாடிக் கொண்டிருந்தது.

# 18

'மலபார் க்ளப்' ஹேகிங் தோட்டத்திற்கு அருகிலிருந்து செல்லும் வீதியில், சமுத்திரக் கரையோரத்தில் அமைந்திருக்கிறது. பம்பாயில் இடநெருக்கடி அதிகமாக இருந்த போதிலும், 'க்ளப்'பிற்கு வேண்டிய கட்டிடம், அதைச் சுற்றி நந்தவனம், டென்னிஸ் கோர்ட் முதலியவைகளுக்கு தகுதியான—விஸ்தாரமான இடம் கிடைத்திருக்கிறது. 'க்ளப்'பிற்கு அருகிலேயே வாடகை மோட்டார் ஸ்டேஷனிருந்தது. ஏனெனில், க்ளப் மெம்பர்களுக்கு போகவர சௌகர்யமாயிருக்குமென்று. ஆனல், சொந்தக் கார் இல்லாதவர்களே ரொம்பக் குறைவு. இந்த க்ளப்பில் மெம்பராகச் சேருவது ரொம்ப சுலபம்; ஆனல் சிலவை நிர்வகிப்பது கடினம். 'மலபார் க்ளப்'பில் மெம்பராவது, கௌரவமாகவும், நவநாகரிகமாகவும் கருதப்பட்டு வந்தது.

மாலை நேரம். டென்னிஸ் வலைகள் கட்டப்பட்டன. 'பிலியர்ட்' மேஜையின் நாற்புறமும் மெம்பர்கள் உட்கார்ந்திருந்தனர். நந்தவனத்தில் 'க்ளப்' பாண்டு வாத்தியம் முழங்கிக் கொண்டிருந்தது. மெல்லிய ஜார்ஜெட் உடை தரித்துக்கொண்டு பெண்மணிகள் தனியாகவோ அல்லது ஜோடியாகவோ அங்குமிங்கும் உலவிக்கொண்டிருந்தனர்.

'க்ளப்' செலவில் மெம்பர்களின் வசதிக்காக ஹோட்ட லொன்று நடந்துவந்தது. அதனருகில் 'ரேடியோ' ஒன்று ஒரு சமயம் தெளிவாகவும், இன்னொரு சமயம் தெளிவில்லா மலும் அலறிக்கொண்டிருந்தது. கட்டிடத்தின் ஓர் அறை யில் காரியதரிசியின் காரியாலயம் இருந்தது.

'க்ளப்'பில் நுழைந்து விட்டவர்களுக்கு அவ்விடத் தைவிட்டு வரவே தோன்ருது. உலகத்திலுள்ள எல்லா சுகங்களும் ஓரிடத்தில் கூடியிருக்கிறதென்ருல், அது இந்த 'க்ளப்'தானென்று எண்ணும்படியா யிருந்தது.

அருகிலிருக்கும் அறையிலிருந்து சிரிக்கும் சப்தம் பல மாகக் கேட்டது.

ஆட்டத்தில் சாலினியின் கட்சி தோற்றுவிட்டது.

"எத்தனை 'பாயிண்ட்ஸ்' டாக்டர்...?" என்று சாலி னியின் சிநேகிதர் உமேச் சந்தர் கேட்டார்.

"எட்டு! ஐந்து ரூபாயும், எட்டணவும்!" என்ருர் டாக்டர்.

"எங்களிருவருடைய பணத்தையும் எடுத்துக் கொள் ளுங்கள்!" என்று சொல்லிக்கொண்டே உமேச் சந்தர் பத்து ரூபாய் நோட்டு ஒன்றையும், ஒரு ரூபாயையும் மேஜையின் மேல் வைத்தார்.

"மிஸ்டர், உமேச் சந்தர்! நீங்கள் பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள்! இன்று நான் உங்களுக்கும் சேர்த்துக் கொடுக்கிறேன்!" என்று கூறிக்கொண்டே தன் பணப் பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து உமேச் சந்தரிடம் நீட்டினள் சாலினி.

"என்னை அவமானப்படுத்த விரும்புகிறீர்களா?" என்று உமேச் சந்தர் சாலினியைப் பார்த்துக் கேட்டார்.

டாக்டர் மெல்ல சிரித்தார். அவர் ஆட்டத் தோழி மனோரமா 'கல கல'வென்று நகைத்தாள். அவள் சிரிப்பு சாலினிக்குப் பிடிக்கவில்லை. ஆட்டம் முடிந்ததும் சாலினியும், உமேச் சந்தரும் அவ்விடத்தை விட்டு வெளிச் சென்றனர்.

"உமேச் சந்தர்! தொடர்ச்சியாக மூன்று தினங்கள் என்னால் நீங்கள் தோற்று விட்டீர்கள். அதற்கு கொடுக்க வேண்டிய பணத்தை நான் தங்களுக்குக் கொடுத்து விடுகிறேன்!'' என்றாள் சாலினி.

"அது ஒரு நாளும் நடக்காது, சாலினி தேவி! ஏனெனில், உங்கள் மூலமாகவே என்றாவது ஒரு நாள் ஜயம் அடையலாமென்று நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்!'' என்றார் உமேச் சந்தர்.

"அப்படியானால், இதுவரை நீங்கள் எனக்காகக் கொடுத்த பணத்தையாவது வாங்கிக் கொள்ளுங்கள்!''

"நான் இதுவரை சொல்ல வேண்டாமென்றிருந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லும்படி நீங்கள் பேசுகிறீர்கள். 'மலபார் க்ளப்'பில் மாதம், சாதாரணச் சிலவு ஐந்நூறு ரூபாய்க்குக் குறைவில்லை. இன்னும் ஜனங்களின் மதிப்பைப்பெற 'கார்' வாங்க வேண்டும். தினந்தோறும் புதுப் புது உடைகள் அணியவேண்டும். இவைகளெல்லாமாகச் சேர்ந்து ஆயிரம் ரூபாயாகிவிடுகிறது. டாக்டர் அசோக் குமாருக்கு ஆயிரத்தி இருநூறுதான் சம்பளமென்று எனக்குத் தெரியும். இப்படியிருக்கும்பொழுது, நீங்கள் ஆட்டத்தில் பணம் கட்ட வந்தீர்களானால், இன்றில்லாவிட்டால் என்றாவது ஒருநாள் 'க்ளப்'பைவிட்டு நிற்கும்படி யாகிவிடும். இதனால் உங்களுக்கு மாத்திரம் அவமானமென்றல்ல; அசோக் குமாருக்கும் மதிப்புக் குறைவுதான்!'' என்றார் உமேச் சந்தர்.

இவ்வாறு பேசிக்கொண்டே இருவரும் 'க்ளப்' சிற்றுண்டிச்சாலையை அடைந்தனர். சாலினி உமேச் சந்தர் சொன்னதற்குப் பதிலே சொல்லவில்லை. என்ன சொல்வதென்று அவளுக்குப் புரியவில்லை. சாலினியின் மௌனத்தைக் கண்டு உமேச் சந்தர் பூரித்தார். தான் வெற்றி அடைந்து விட்டோமென்ற சந்தோஷத்தில் சாலினியிடம் "மனோரமாவிற்கு மாதம் என்ன செலவாகுமென்று நினைக்கிறீர்கள்?" என்றார்.

இருவரும் ஒரே சோபாவில் உட்கார்ந்து கொண்டனர்.

"ஆமாம்! இந்த மனோரமா என்பவள் யார்?" என்றாள் சாலினி.

"ஸேட் கோவர்த்தனதாஸின் மூன்றாவது மனைவி. சந்ததியில்லாது இரண்டுமனைவிகள் இறந்ததும், இவ்வளவு வயதான பிறகு, ஸேட்ஜி மூன்றாம் மனைவியாக மனோரமாவை மணந்துகொண்டிருக்கிறார். வருஷத்தில் குறைந்த பட்சம் இருபதுலட்ச ரூபாய் வரும்படி வருகிறது. இதைத் தவிர கோடிக்கணக்கில் சொத்துகள் இருக்கின்றன.

ஆனால், அவருடைய சம்பாதிப்பைப் பூரணமாக அநுபவிப்பவள் மனோரமாதான். மூன்று மாதங்களுக்கொரு முறை கார் மாற்றுகிறாள். தினம் ஒவ்வொரு விதமான துணிமணிகள் வாங்குகிறாள். 'ஷேம்பன்' மதுபானத்தைத் தவிர வேறொன்றையும் தொடுவதில்லை. அவள் வீட்டுப் பெயர் என்னவோ, நாங்கள் அவளை 'மனோரமா' வென்றுதான் கூப்பிடுகிறோம்!" என்று சொல்லிக் கொண்டே மணியடித்தார். அடுத்த நிமிஷம் 'க்ளப்' வேலைக்காரன் வந்து நின்றான்.

...ERSITY EXTENSION LIBR...

"இரண்டு பிராந்தி புட்டிகளும், சோடாவும் கொண்டுவா, பையா!" என்றார் உமேச் சந்தர். அந்த நாற்பது வயது 'பையன்' சென்றான்.

"மிஸ்டர் உமேச்! நான் மது அருந்துவதில்லை. எனக்காக வரவழைக்காதீர்கள்......!" என்றாள் சாலினி.

"உங்களுக்குப் பிடிக்காதென்று எனக்குத் தெரியும், மிஸஸ், குமார்! அதை வெறுக்கத்தான் வேண்டும். ஆனால், எப்பொழுது வெறுக்க வேண்டும், எப்பொழுது வெறுக்கக் கூடாதென்று தாங்கள் இன்னும் அறிந்து கொள்ளவில்லை!" என்றார் உமேச் சந்தர்.

"இல்லை, உமேச்! நான் மது அருந்தவே விரும்பவில்லை......!"

"மனிதர்களுக்கு எத்தனையோ காரியங்கள் செய்யப் பிடிக்காமலிருக்கும் பொழுதே செய்யும்படியாக நேர்ந்து விடுகிறது. நம் அந்தஸ்தை உத்தேசித்தும், சமூகத்தை உத்தேசித்தும், ஆடம்பர வாழ்க்கையை உத்தேசித்தும், சில காரியங்கள் மனதிற்குப் பிடிக்காத போதிலும் செய்ய வேண்டியிருக்கின்றன. நீங்களும் கொஞ்சம் சாப்பிட்டுத் தானாகவேண்டும். போதைக்காகவும், பழக்கத்திற்காகவும் அல்ல; ஏனென்றால், இந்தக் 'க்ளப்' மெம்பர்களெல்லோரும் மதுபானம் செய்கிறார்கள். எந்த சமூகத்தில் நாம் பழகுகிறோமோ, அதற்குத் தகுந்தபடி நடந்துகொள்வதுதான் நாகரிகமான முறை!" என்றார் உமேச் சந்தர். இதற்குள் சோடா, மது, கண்ணாடி டம்ளர்கள், எல்லாம் வந்துசேர்ந்தன. உமேச் சந்தர், தனக்கு ஒரு டம்ளரில் ஊற்றிக்கொண்டு, சாலினியிடம் ஒரு டம்ளர் மதுவைக் கொடுத்தார். வேலைக்காரனிடம், "போய், சிகரெட் கொண்டுவா!" என்று அவனை அனுப்பினார். சாலினியின் அந்தரங்கத்தில் இவ்வார்த்தைகள் எழுந்தன :

"சாலினி! இதனல் உனக்கு ஒன்றும் நேர்ந்து விடாது. சுயகாரியத்திற்காகவும், நாகரிகத்திற்காகவும் ஒருநாள் ஒரு புருஷனின் சொற்படி சிகரெட் குடித்தாய். இன்று மதுபானமும் செய்யவேண்டி வந்திருக்கிறது...!" டம்ளரிலிருந்த மதுவை உறிஞ்சிவிட்டாள். பிறகு, இருவரும் சிகரெட் குடிக்கத் தொடங்கினர்.

சற்று நேரத்திற்கெல்லாம் மது தன் வேலையைச் செய்யத் தொடங்கியது. சாலினியின் கண்கள் சிவந்தன. அழகிய அவள் முகம் போதையினல் சிவந்திருந்தது. இந்த மயக்கத்தினல் அவளுக்கு ஒரு விதமான சந்தோஷம் ஏற்பட்டிருந்தது. திறந்த காற்று வெளியில் செல்ல விரும்பினள்.

"நந்தவனத்தில் உலாவச் செல்வோம், சாலினிதேவி!" என்று சொல்லிக்கொண்டே அவள் கையைப் பிடித்துக் கொண்டு அவளை அழைத்துச் சென்ருர் உமேச் சந்தர். மணி பத்தடித்துவிட்டது. சாலினி வீட்டிற்குச் செல்ல எண்ணினள். சாலினியும், உமேச் சந்தரும் காரை நோக்கி சென்று கொண்டிருக்கும்பொழுது, மனேரமா தன்னருகில் ஒரு வாலிபனை உட்கார வைத்துக்கொண்டு, அவனுக்கு ஒரு டம்ளரில் மது ஊற்றிக்கொடுத்துக் கொண்டிருந்தாள். இதைப் பார்த்த சாலினி, அந்த யுவனை சுட்டிக் காண்பித்து, "அவன் யார் மிஸ்டர், உமேச் சந்த்?" என்ருள். "மனேரமாவின், 'சாபர்'!" என்று அலட்சியமாகக் கூறினர் உமேச் சந்தர்.

உமேச் சந்தர் தன் மோட்டாரில் சாலினியை அவள் பங்களா வரை கொண்டுவிட்டார். சாலினி உள்ளே சென்று உறங்க ஆரம்பித்தாள்.

# 19

**சா**லினியின் கெட்ட சகவாசங்களை அசோக் குமார் அறியவில்லை. இதையெல்லாம் அசோக் குமாரிடம் தெரிவிக்க 'க்ளப்' அங்கத்தினர் ஒருவராவது துணிய வில்லை. குடிகாரன் பிறரின் திருட்டுத்தனத்தைப் பற்றி புகார் செய்வதில்லை. வியபசாரி இன்னொருவரின் குற்றங் களைக் கண்டு இகழ்வதில்லை. அதேபோல்தான் 'க்ளப்' அங்கத்தினர்களும் தாங்கள் சொல்வது உசிதமல்ல வென்று எண்ணினர் போலும்! கோபிநாத் மௌனியா யிருந்தான். சாலினியைப்பற்றி விசேஷமாக அவனுக்கு ஒன்றும் தகவல் தெரியாது. இருந்தும், அவனுக்கு ஏற் பட்டிருக்கும் சந்தேகத்தைக் கூட அசோக் குமாரிடம் சொல்ல அவனுக்குப் பிடிக்கவில்லை. இவ்வளவு வயதான அநுபவத்தினல், காலமும் சகவாசமும்தான் மனிதனை, நல்வழியிலோ, கெட்டவழியிலோ இழுத்துச் செல்கிற தென்று கோபிநாத் அறிந்திருந்தான்.

கலியாணத்திற்குப் பிறகு அசோக் குமார் விஞ்ஞான சாலையையே தன் வாசஸ்தலமாக்கிக் கொண்டார். அதைத் தவிர வேறென்றும் அவருக்குப் பிடிக்கவில்லை. மற்ற நாட்டுப் பத்திரிகைகளில் தன்னைப்பற்றி புகழ்ந்து எழுதி யிருப்பதைக் கண்டு, உற்சாகத்துடன் மீண்டும் புது ஆராய்ச்சியில் ஈடுபட்டார். பிறகு, வீட்டிற்கு வந்து சாலி னியை சந்திக்கக் கூட பயந்தார். ஏனெனில் தான் சாலினி

யிடம் இப்படி நடந்துகொள்வது சரியல்லவென்று அவருக்குப்பட்டது. வீட்டிற்கு வந்தால் சாலினியின் கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. இதனையெல்லாம், தன் விஞ்ஞான ஆராய்ச்சி தடைப்பட்டுவிடலாம். ஆகையால் வீட்டிற்கே அதிகமாகச் செல்லக்கூடாதென்று தீர்மானித்தார்.

ஒரு மணி அடித்துவிட்டது. அசோக் குமாருக்கு தூக்கமே வரவில்லை. இன்னும் ஏதாவது வேலை செய்யலாமென்று எண்ணினர். ஆனல், சாலினியின் ஞாபகம் அடிக்கடி வந்துகொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் தன்னையே தான் வைதுகொண்டார். வீட்டிற்குச் சென்று தன் நடத்தைக்காக சாலினியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று தீர்மானித்தார். அறையின் கதவை பூட்டிவிட்டு வீட்டிற்குக் கிளம்பினர். மோட்டாரின் சப்தமும், அதன் வெளிச்சமும் கோபியை எழுப்பின. அவன் கண்களைக் கசக்கிக்கொண்டே கதவைத் திறந்தான்.

"சாலினி இன்னும் வரவில்லை?" என்று கேட்டார் அசோக் குமார்.

"இல்லை, எஜமான்!" என்றான் கோபிநாத்.

அசோக் குமார் மறுமுறை தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டார். அவருக்கு ஏதோவொரு சந்தேகம் எழுந்தது.

"கோபி!. நான் சென்று சாலினியை அழைத்து வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு 'மலபார் க்ளப்' பக்கம் காரை ஓட்டினர்.

*　　*　　*

குடி மயக்கத்திலிருந்த சாலினிக்கு, மணி ஒன்று அடித்துவிட்டதே, வீட்டிற்குச் செல்ல வேண்டுமேயென்ற

எண்ணமே ஏற்படவில்லை. கடைசியில் உமேச் சந்தர், "சாலினி, மணி ஒன்று அடித்துவிட்டதே! வீட்டிற்குச் செல்ல வேண்டாமா? 'க்ளப்' மூடும் தருணமாகிவிட்டதே!" என்றார்.

"என்ன? மணி ஒன்று அடித்துவிட்டதா?" என்று சாலினி திடுக்கிட்டுக் கூறினாள். "ஆம். இப்பொழுது மணி ஒன்று!" என்றார் உமேச் சந்தர்.

"வீட்டிற்குப் போக எனக்கு சக்தியேயில்லை. எனக்கு ரொம்ப களைப்பாயிருக்கிறது!"

"கிளம்புங்கள்! நான் கொண்டு விடுகிறேன்!"

"ஆம்! அதுதான் நல்லது! ஆனால், நான் மதுபானம் செய்திருப்பதை அசோக் குமார் தெரிந்துகொண்டு விட்டால்......?"

"தெரிந்தால் ஒன்றும் பாதகமில்லை!" என்று அவளுக்குத் தைரியம் சொல்லிவிட்டு, அவள் கையைப் பிடித்துக்கொண்டு கார் நிற்குமிடம் சென்றார்.

இருவரும் காரில் உட்கார்ந்ததும் கார் கிளம்பியது. வெளியே செல்லும் 'கேட்' வழியாக இவர்கள் கார் கிளம்பியதும், உள்ளே வரும் 'கேட்' வழியாக அசோக் குமாரின் கார் நுழைந்தது. உமேச் சந்தரின் கார் சாலினியின் பங்களா எதிரில் வந்து நின்றதும் சாலினி இறங்கிக் கொண்டாள். "நான் குடித்துவிட்டு வந்திருக்கிறேனென்று தெரிந்தால் ப்ரொபஸர் என்ன சொல்வாரோ!" என்று சாலினி கவலையுடன் கூறினாள்.

"ஸ்திரீகள்தான் குடிப்பதைப்பற்றி பிரசங்கிப்பார்கள். புருஷர்கள் இதையெல்லாம் லட்சியம் செய்யமாட்டார்கள். சீக்கிரம் செல்வது, நேரங்கழித்து வருவது இவை

களையெல்லாம் பெண்கள்தான் கவனித்துக்கொண்டிருப்பார்கள். அசோக் குமார் நாகரிக மனிதர். அவர் ஒன்றும் சொல்லமாட்டார் சாலினி!'' என்று உமேச் சந்தர் கூறிவிட்டு காரை ஓட்டிக்கொண்டு சென்றார். இந்த வார்த்தைகளினால் சாலினிக்குத் தைரியம் ஏற்படவில்லை. குற்றவாளியைப்போல் உள்ளே சென்றாள். தற்கொலை செய்து கொள்ள முயன்று கொண்டிருக்கும் ஒருவனை அந்த சமயத்தில் பிறர் தடுத்துவிட்டால் அவன் மனோநிலை எவ்வாறிருக்குமோ அதே நிலைமை சாலினிக்கும் ஏற்பட்டிருந்தது. பேசாமல் நேரே தன் படுக்கைக்குச் செல்ல வேண்டுமென்று நினைத்தாள். ஆனால், கோபிநாத் "யாரது? யஜமானா!'' என்று குரல் கொடுத்தான். "இல்லை, நான்...!'' என்றாள் சாலினி. குரலிலிருந்து கோபி சாலினியென்று அறிந்துகொண்டு கதவைத் திறந்தான். "மணி இரண்டடித்து விட்டதே. ஒரு வேளை நீங்கள் பிறந்த வீட்டிற்கு சென்றிருக்கிறீர்கள் என்று நினைத்தேன்!'' என்றான் கோபிநாத்.

"ப்ரொபஸர் தூங்கிக் கொண்டிருக்கிறாரா?'' என்று அவனிடம் அதிகம் பேச விரும்பாமல் சாலினி கேட்டாள். 'ஆம்' என்பதுடன் சம்பாஷணை முடிந்துவிடுமென்று நினைத்தாள். "அவர் கலாசாலையிலிருந்து வந்தார். பிறகு தங்களை அழைத்துக்கொண்டு வருவதற்காக 'க்ளப்' பக்கம் சென்றார்!'' என்று கூறிக்கொண்டே ஏதோ கெட்ட வாசனையை முகர்வதுபோல் முகத்தைச் சுளுக்கிக் கொண்டான்.

"என் முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக் கொள்கிறாய்? ஏதோ கெட்ட வாசனை வீசுகிறதே? சாராய நாற்றமா? எங்கிருந்து இந்த சாராய நாற்றம் வருகிறது?''

"ஆம், அம்மா! சாராய நாற்றம்தான் வீசுகிறது!'' என்று மூக்கைப் பிடித்துக் கொண்டான் கோபிநாத்.

சாலினியின் வாயிலிருந்துதான் இந்த வேகம் வருகிற தென்று கோபிநாத் அறிந்துகொண்டான். தான் குடித் திருப்பது தெரியக்கூடாதென்று குடிகாரன் ஆயிரம் முயற்சி செய்கிறான். குடிப்பதைப்பற்றியல்ல; குடித்து விட்டு ஒப்புக்கொள்வது அவனுக்கு அவமானமாகப் படு கிறது. சாலினி தன் கைக்குட்டையை எடுத்து கோபிநாத் தின் பக்கம் நீட்டினாள். "இந்த வாசனையை பார்!" என் றாள். கோபிநாத்திற்கு அவளுடன் பேச இஷ்டமில்லை. அந்த வேகம் அவனுக்கு சகிக்கவில்லை. "இதே மாதிரிதான் ஏதோ வாசனை!" என்றான். சாலினி 'கட கட'வென்று சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "பயித்தியம்! இது 'ஈவினிங் இன் பாரிஸ்!'' என்றாள். அதிகமாக வாயைத் திறந்து சிரித்ததால் அவள் நன்றாகக் குடித்திருக்கிறா ளென்று கோபிநாத் அறிந்து கொண்டான்.

சாலினி நேரே தன் படுக்கைக்குச் சென்று படுத்துக் கொண்டாள். சற்று நேரத்திற்கெல்லாம் அசோக்குமாரின் கார் வந்து நின்றது. அசோக் குமார் உள்ளே வந்தார். அவர் கோபிநாத்திடம் ஒன்றும் பேசவில்லை. உடுப்புகளை மாற்றிக்கொண்டு படுக்கச் சென்றுவிட்டார். அசோக் குமாரின் முகபாவத்திலிருந்து அவர் மனது சரியாயில்லை யென்று கோபிநாத் தெரிந்து கொண்டான். கோபமும், வெறுப்பும் அவர் முகத்தில் குடிகொண்டிருந்தன.

# 20

'க்ளப்' ஸெக்ரெட்ரி சொன்ன விஷயங்களை மறந்துவிட வேண்டுமென்று அசோக் குமார் லட்சம் தரம் முயற்சித்து விட்டார். ஆனால், அவை அவர் மனதைவிட்டு அகலவேயில்லை. சாலினி ஏன் இப்படி நடந்து கொள்கிறாளென்று அடிக்கடி அவர் யோசித்துப் பார்த்துக்கொண்டார். சாலினியைப்பற்றி யோசிப்பதையே விட்டுவிட வேண்டுமென்று தீர்மானித்தார். ஆனால், ஏனோ தெரியவில்லை, காரியதரிசியின் வார்த்தைகள் காதில் ஒலித்துக் கொண்டே யிருந்தன.

காலேஜிற்கு செல்வதற்காக அசோக் குமார் உடை அணிந்து கொண்டிருந்தார். அந்த சமயம் சாலினி உள்ளே வந்தாள்.

"க்ளப்'பிலிருந்து திரும்பி வருவது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. எனக்காக ஒரு மோட்டார் வாங்கிக் கொடுங்கள்!" என்றாள் சாலினி. அவர் மனதை அறியவே அவள் இவ்வாறு கூறினாள்.

"க்ளப்'பிற்குப் போகும் பொழுதைவிட, 'க்ளப்'பிலிருந்து வருவதுதான் ரொம்ப சுகமாயிருக்கும்!" என்றார் அசோக் குமார். அவள் கார் வேண்டுமென்றதும் அவர் முகத்தில் கவலைக்குறி தோன்றியது.

"நான்கு மைல் நடந்து வருவது சுகமாயிருக்குமா?"

"நடந்து வருவதைச் சொல்லவில்லை! காரில் வருவதைச் சொன்னேன்!"

"காரில் யார் வருகிறார்கள்?"

"சாலினியும், உமேச் சந்தரும்!"

"யார் சொன்னது? கோபி! இருங்கள்! இப்பொழுதே கூப்பிட்டு கேட்கிறேன்! பொய் எதற்கு?" என்று சொல்லிக்கொண்டே 'கோபி' 'கோபி' யென்று கூவினாள். கோபிநாத் உடனே வந்தான். அவனைப் பார்த்ததும் கோபத்தால் பொங்கி எழுந்தாள். "ஏண்டா! தினம் இரவு நான் யாருடன் வருகிறேன்?" என்று சீறினாள்.

"நீங்கள் யாருடன் வருகிறீர்கள், என்ன, ஏது என்பதைப்பற்றி நான் எஜமானிடம் ஒன்றும் சொல்லவில்லை. அவரும் அதைப்பற்றி என்னை ஒன்றும் கேட்கவில்லை!" என்றான் கோபி.

"உன்னை எனக்குத் தெரியுமடா! நீ செய்யும் கலகந் தானிது! நீ கோள் சொல்வது தெரியாதா?......"

அவள் கோபிநாத்திடம் ஆத்திரப்படுவதைக் கண்டு அசோக் குமார் உண்மையைச் சொல்ல விரும்பினார். ஏனெனில் சாலினியின் பேச்சைக் கேட்டு கோபிநாத்துக்குக் கோபம் வந்து விட்டது.

"உன் பிரதாபங்களை யெல்லாம் 'க்ளப்' ஸெக்ரெட்ரி தான் சொன்னார். கோபிநாத் அல்ல!"

"அந்த ஸெக்ரெட்ரிக்கு என்ன தெரியும்?"

"உலகத்தில் ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது; நம் நடவடிக்கைகளைக் கவனிக்க ஒருவருக்கும் கண்கள் கிடையாதென்று நினைக்கிறுயா?''

"அது எப்படி வேண்டுமானுலும் இருக்கட்டும்! என் கார் விஷயமாக என்ன சொல்லப் போகிறீர்கள்?''

"கூடிய சீக்கிரம் ஒரு 'சாப'ருடன் கிடைத்துவிடும்! சாலினி! எனக்கு நேரமாகி விட்டது. கடைசியாக ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். நீ கெட்டபாதையில் சென்று கொண்டிருக்கிருய். 'க்ளப்'பிலிருந்து நின்றுவிடு! இல்லாவிடில், அதற்கு இரையாவாய்!'' என்ருர் அசோக் குமார்.

"அதற்கு இரையாகாமல் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும்!'' என்ருள் சாலினி.

அசோக் குமார் வேறென்றும் பேசாமல் சென்று விட்டார். ஒவ்வொரு நாளும் அவரை வாயிற்படிவரை கொண்டுவிடுவாள் சாலினி. ஆனல், இன்று அவள் கால்கள் ஏனே எழவில்லை. அவ்விடமே உட்கார்ந்து கொண்டாள். மணி பதினென்றிருக்கும். சாலினி வெளிவராந்தாவில் உலவிக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் யாரையோ ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. கோபிநாத் ஹூக்கா குடித்துக் கொண்டிருந்தான். சாலினி அவனருகில் போய் நின்ருள். அவள் மனம் ஏதோ குற்றம் செய்தவளைப் போலிருந்தது. சற்றுநேரம் பேசாமலிருந்த பிறகு அவன் என்ன நினைத்துக் கொள்வானே வென்று மெல்லிய குரலில் அவள், "கோபி! என்ன ஹூக்கா குடித்துக் கொண்டிருக்கிருயா?'' என்ருள். தன் செய்கையில் வருத்தங்கொள்பவனைப் போல் கோபி," ஆம், அம்மா! வழக்கமாகப் போய்விட்டது. விடமுடியவில்லை! என்ருன்,

"நான் குடிப்பதாக ப்ரொபஸர் சந்தேகப்படுகிருரா கோபி!"

"அதென்னவோ, அம்மா! எனக்குத் தெரியாது. ஸெக்ரெட்ரி என்ன சொல்லியிருக்கிருரோ!"

"உண்மையாகச் சொல்கிறேன், கோபி! நான் குடிப்பதில்லை!"

"சரிதான். அம்மா!" என்று ஆமோதிப்பவனைப் போல் தலையை ஆட்டினன் கோபிநாத்.

"அன்று உன்னை வைதேனென்று என்மேல் கோபமா, கோபி?" என்ருள் சாலினி. இந்தக் கேள்வியைக் கேட்டு கோபிநாத் மெல்ல சிரித்தான்." நான் வேலைக்காரன். நான் கோபித்துக் கொண்டு என்ன செய்வது? என் கோபம் என்னையே விழுங்கிவிடும். அதுவுமன்றி, நான் கோபித்துக் கொள்ளும் படியாக யார் என்ன செய்தார்கள்!" என்ருன். மேலும் வார்த்தையை வளர்க்க விரும்பாமல் சாலினி,

"சரி, கோபிநாத்! என் சிநேகிதர் ஒருவர் வரப்போகிருர். நீ சென்று டீ போடு!" என்ருள்.

சரியாக பன்னிரெண்டு மணி அடித்ததும் உமேச் சந்தரின் கார் வந்து நின்றது. சாலினி அவரை உள்ளே அழைத்துச் சென்ருள். உமேச் சந்தர் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்தார். ஒருவேளை, அசோக் குமாரின் பங்களா நாகரிகமான முறையில் அலங்கரிக்கப்பட்டிருக்குமென்று நினைத்திருந்தாரோ, என்னவோ! ஆனல், அங்கு அவ்விதமான நாகரிகமொன்றும் அவருக்குத் தென்படவில்லை. "இன்று ஒரு காரணமாகத் தான் உங்களை இங்கு அழைத்தேன், உமேச்!" என்ருள் சாலினி.

"என்ன விஷயம்?" என்று கேட்டுக்கொண்டே உமேச் சந்தர் அங்குள்ள சாமான்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்.

"நான் ஒரு மோட்டார் வாங்கலாமென்றிருக்கிறேன். ஆனால், கையில் ரொக்கப்பணமில்லை. கொஞ்சங் கொஞ்சமாக, மாதா மாதம் அடைத்து விடலாமென்று நினைக்கிறேன்!"

"அந்தமாதிரி கார் வாங்குவதில் முந்நூறு, நானூறு அதிகம் கொடுத்து வாங்கும்படியா யிருக்கும்!"

"அதைத் தவிர வேறு வழியொன்றும் எனக்குத் தெரியவில்லை!" இதற்குள் கோபிநாத் டீயும் பழங்களும் கொணர்ந்து வைத்தான். சாலினியின் உபசாரத்தின் பேரில் உமேச் சந்தர் டீ குடித்துக்கொண்டே, "வேறு வழியில்லாமலென்ன? இப்பொழுது நான் பணம் தருகிறேன். பிறகு தங்களுக்கு சௌகரியப் பட்டபொழுது எனக்குக் கொடுத்துக் கொள்ளலாம்!" என்றார்.

"அப்படிச் செய்தால் நல்லதுதான்! ஆனால், உங்களுக்கு என்னால் அநாவசியமாக ரொம்ப செலவாகிறது!" என்றாள் சாலினி.

"இவையெல்லாம் அநாவசியமில்லை! என்றாவது ஒரு நாள் எனக்கு லாபத்தை கொடுக்கக் கூடியவைகள்தான்!" என்றார் உமேச் சந்தர். டீ சாப்பிட்ட பிறகு சிகரெட் குடித்துக்கொண்டே உமேச் சந்தர் வெளியே வந்தார். கார் வரை அவரைக் கொண்டுவிட சாலினியும் வந்தாள். புதிய கார் வாங்கப் போகும் சந்தோஷத்துடன் உமேச் சந்தரிடம் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு மனிதன் சாலினியிடம் நெருங்கினான். அவன் வந்திருக்கும் காரணத்தை

அறிந்தும் சாலினி, "என்ன விஷயம்?" என்ருள். "வாடகை வாங்க வந்திருக்கிறேன் அம்மா!" என்ருன் அவன்.

"ஒரு நிமிஷம் இரு! வந்து தருகிறேன்!" என்ருள் சாலினி. சற்று நேரம் பேசிவிட்டு உமேச் சந்தர் சென்று விட்டார்.

சாலினி உள்ளே சென்ருள். அவளைத் தொடர்ந்து வந்த மனிதனும் சென்ருன். "மூன்று மாத வாடகையையும் கொடுத்து விடுங்கள். அம்மா! என்னல் அலைய முடியவில்லை!" என்ருன் அவன். நாங்கள் எங்கேயும் ஓடிவிட மாட்டோம். முதல் தேதியன்று எல்லாவற்றையும் கொடுத்து விடுகிறேன்!" என்ருள் சாலினி.

"இன்று இரண்டு தேதியாகிறதே. அம்மா! இந்த மாத வாடகையையாவது கொடுத்து விடுங்கள்!"

"இப்பொழுது கொடுப்பதற்கில்லை! மொத்தமாக எல்லாவற்றையும் அடுத்த மாதம் முதல் தேதி கொடுத்து விடுகிறேன்!" என்ருள் சாலினி.

"அடுத்த மாதம் முதல் தேதி கொடுக்காவிட்டால் 'நோட்டீஸ்' கொடுத்து விடுவேன்!" என்று கூறி விட்டு அவன் சென்று விட்டான். சாலினி இதற்கென்ன பதில் சொல்லக் கூடும்? அவன் சென்றதும் வண்ணன் உள்ளே நுழைந்தான். அவன் உடைகளை எண்ணி வைத்தான். அழுக்கு உருப்படிகளை எண்ணி மூட்டை கட்டிக் கொண்டான்.

"அம்மா! சம்பளம் தருகிறீர்களா?" என்ருன்.

"தருகிறேன், தருகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே வெளுத்து வந்த ஆடைகளைப் பார்க்க ஆரம்

பித்தாள். அதில் ஏதாவது குற்றங் கண்டு பிடிக்க விரும்பினாள். ஒன்றும் அகப்படாமல் போகவே இரண்டு துணிகளை எடுத்து அவன் மேல் எறிந்து, "இதைப் பார்! இதிலிருக்கும் பொத்தான் ஒன்றாவது பாக்கி யிருக்கிறதா?" என்று ஆயிரம் வார்த்தை பேசினாள். இதைப் பார்த்த வண்ணான் அழுக்கு மூட்டையை எடுத்துக் கொண்டு பேசாமல் போய்ச் சேர்ந்தான்.

"பணத்திற்காக இன்னும் யாராவது உட்கார்ந்திருக்கிறார்களா?" என்று சாலினி கோபிநாத்தைக் கேட்டாள்.

"ரொட்டிக்காரன் இருக்கிறானம்மா!"

"வியாழக்கிழமையன்று கணக்குத் தீர்த்து விடுகிறேனென்று சொல்!".

வியாழக்கிழமை யன்று வரும்படியாக கோபிநாத் ரொட்டிக்காரனிடம் சொன்னான். அவன் வைது கொண்டே வெளியே சென்றான். கோபமோ துக்கமோ அல்லது கஷ்டமோ, ஏற்பட்டுவிட்டால் சில மனிதர்களுக்கு ஏதாவது எழுதவேண்டுமென்று தோன்றிவிடுகிறது. அதன் மூலம் ஏதோ ஆறுதல் கிடைத்துவிடுவதாகத் தோற்றம். ஒவ்வொருவராக பணம் கேட்டுவிட்டு போன பிறகு சாலினி சற்று நேரம் துக்கத்துடன் உட்கார்ந்திருந்தாள். அவள் செலவிற்கு ப்ரொபஸரின் சம்பளம் போதவில்லை. இவ்வளவு கடன்காரர்களுக்கும் எப்படிப் பணம் கொடுப்பது? தந்தையிடம் சென்று பணம் கேட்பதென்றால் அவர் இவளை உள்ளே விடுவாரா? கடைசியில் வேறு வழியின்றி தன் கஷ்ட நிலைமையை விவரித்து தாரக்நாத்திற்கு ஒரு கடிதம் எழுதினாள்.

"கோபிநாத்! நான் ஒரு கடிதம் தருகிறேன். அதை என் தகப்பனரிடம் கொண்டு சேர்க்கிருயா?" என்று கோபிநாத்தைக் கூப்பிட்டுக் கேட்டாள். உடனே அவன் கடிதத்தை வாங்கிக்கொண்டான். ஏனெனில், சாலினியின் தந்தையைப் பார்க்க மிக்க ஆவலுள்ளவனு யிருந்தான். இந்த மாதிரியான பெண்ணின் தாய், தந்தையர் எப்படி யிருக்கிருர்களென்று பார்க்க விரும்பினன். "கொண்டு கொடுக்கிறேனம்மா! அவர் விலாசம் என்னவென்று சொல்லுங்கள்!" என்ருன் கோபி.

"போஸ்டாபீஸுக்கு அருகிலுள்ள 'பாய்தூனியில்' வசிக்கிருர். பாபு தாரக்நாத் எங்கே யிருக்கிருரென்று யாரையாவது கேள்: சொல்வார்கள். அவரைக் குழந்தைகளுக்குக் கூடத் தெரியும்! இந்தா, ட்ராம் சத்தம்!" என்று அவனிடம் சில்லறையைக் கொடுத்தாள். "பாபு தாரக்நாத்தா?" என்று அவனையு மறியாமல் ஆச்சரியத்துடன் கூறினன்.

"ஏன் ஆச்சரியப்படுகிருய்? அவரை உனக்குத் தெரியுமா? என்ருள் சாலினி.

"ஐக்கிய மாகாணத்தில், ராய்பரேலி ஜில்லாவில் வசித்துக்கொண்டிருந்த தாரக்நாத் என்பவர் எனக்கு ரொம்ப வேண்டியவர். அவர் தந்தை இங்கு பம்பாயில் வீடு வாசல் வாங்கிக்கொண்டு பிள்ளையுடன் வந்துவிட்டார். தாங்கள் சொல்லும் தாரக்நாத் அவரோவென்று......!"

"ஆம், ஆம், அவரேதான்!"

"அந்த மகானின் புதல்வியா நீங்கள்?" என்று கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டான். வேடிக்கை பார்க்க எண்ணியிருந்த அவனுக்குப் பெரும் ஏமாற்றம்

ஏற்பட்ட்து. வீதியில் உட்கார்ந்து வீடு கட்டி விளை யாடும் குழந்தைகளின் மண் வீடு கலைந்ததும், அவர் களுக்கு ஏற்படும் வருத்தத்தைப் போல் கோபிநாத்தின் மனதிலும் ஒரு வேதனை எழுந்தது. பம்பாயில் தாரக்நாத் இருக்கிருரென்று தெரிந்தும் கோபிநாத் இந்த இருபது வருஷ காலமாக அவரை போய்ப் பார்க்கவேயில்லை. இப்பொழுது அவரைப் பார்க்கும்படியான சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி சந்தோஷித்தான்.

## 22

டிராம் ஸ்டேஷனிலிருந்து தாரக்நாத் வீட்டை அடைந் தான் கோபிநாத். வாசற்கதவு மூடியிருந்தது. கோபிநாத் கதவைத் தட்டியதும் மாயா கதவைத் திறந் தாள். மாயாவை கோபிநாத் தெரிந்துகொண்டான். ஆனால் மாயா அவனைப் புரிந்துகொள்ளவில்லை. எங்கோ பார்த்த முகம் போல அவளுக்குத் தோன்றியது. "தங்கள் புதல்வி சாலினிதேவி என்னை இங்கு அனுப்பியிருக்கிருர்கள்!" என்ருன் கோபிநாத்.

"நீ சாலினியின் வீட்டில் வேலை செய்பவனு?" என்ருள் மாயா.

"ஆம், அம்மா! முன்பு தங்கள் வீட்டில் செய்து கொண்டிருந்தேன். இப்பொழுது தங்கள் பெண்ணின் வீட்டில் செய்துகொண்டிருக்கிறேன்!" என்ருன் கோபி நாத். மாயா யாரென்று புரிந்துகொண்டாள். "கோபி நாத்தா?" என்ருள்.

"ஆம், அம்மா!" என்றான் கோபிநாத்.

"எந்தப் பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைபட்டு கிடக்கிறாயோ, அல்லது இறந்து விட்டாயோவென்று எண்ணியிருந்தேன்!"

"என்னைப் போன்ற பாவிகளுக்கு மரணமேது? செய்த பாவங்களுக்கு பிராயச்சித்தம் செய்துகொண் டிருக்கிறேன்!"

"கோபி! சாலினி சௌக்கியமாயிருக்கிறாளா?"

"சௌக்கியத்திற்கென்ன? தலைகால் தெரியாமல் கெட்ட வழிகளில் சென்றுகொண்டிருக்கிறாள். இந்தக் கலியாணம் நடக்கும்படி தாரக்நாத் ஏன் விட்டுவிட்டா ரென்று எனக்குப் புரியவில்லை!"

"அவர் என்ன செய்வார். கோபி! எவ்வளவோ நாங்கள் சொல்லிப் பார்த்தோம். ஒன்றிற்கும் அவள் அடங்கவில்லை. தன் இஷ்டப்படியே அவள் காரியத்தை நடத்திக்கொண்டு விட்டாள்!"

"எஜமான் எங்கே சென்றிருக்கிறார்?"

"கிராமத்திற்குச் சென்றிருக்கிறார். அங்கிருக்கும் நிலபுலன்களை விற்று ஏதோ பிராயச்சித்தம் செய்யப் போகிறேனென்று சொல்லிக்கொண்டிருக்கிறார். என்ன செய்யப் போகிறாரோ, என்னவோ; ஒன்றும் தெரியவில்லை. நாளைக்கு வருவதாகக் கடிதம் எழுதியிருக்கிறார்!"

"அவர் பெயருக்கு சாலினி ஒரு கடிதம் கொடுத் தனுப்பியிருக்கிறாள்!" என்று கடிதத்தைக் கொடுத்துக்

கொண்டே கோபிநாத் கூறினன். மாயா கடிதத்தைப் படித்துவிட்டு "ப்ரொபஸர் அவளிடம் பணம் கொடுப்ப தில்லையா?" என்ருள். "சம்பளம் முழுவதையும் சாலினி யிடம்தான் கொடுக்கிருர். அதுவும் போதவில்லை சாலினிக்கு!"

"சாலினி இரண்டாயிரம் ரூபாய் கேட்டிருக்கிருள். என் கையில் பணமிருக்கிறது. அதை நான் கொடுத்தே ஞனல் அவர் ஊரிலிருந்து வந்து, விஷயம் தெரிந்ததும் என்னைக் கோபித்துக் கொள்வாரே!"

"அப்படியானல், சாலினியிடம், தகப்பனர் ஊரில் இல்லை யென்று சொல்லிவிடுகிறேன்!"

"இல்லை, கோபிநாத்! அப்படிச் சொல்லவேண்டாம். என்னதான் பிள்ளை, பெண்கள் தவறு செய்தபோதிலும் பெற்றவளுக்கு அவர்களை உதறி எறிய மனம் வராது. தாயுள்ளத்தின் தன்மை இது. நான் சில நகைகளும், கொஞ்சம் பணமும் தருகிறேன்; அதை சாலினியிடம் கொண்டுபோய்க் கொடு! அவளை நானென்றும் சொல்ல வில்லை: ஒரு தரம் என்னை வந்து பார்த்துவிட்டுப் போகும் படிச் சொல்!"

"சரி! சொல்கிறேனம்மா! நேரமாகி விட்டது. சாலினி என் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். நான் போய் வருகிறேன்!" என்று சொல்லிக்கொண்டு கிளம்பினன்.

"நல்லது; சென்றுவா, அப்பா! நாளைக்கு அவர் வந்துவிடுவார். அவரைப் பார்க்க ஒரு நாள் வா! உன் னைப் பார்த்து வெகு நாளாகி விட்டது!" என்று வாயிற் படிவரை அவனைக் கொண்டு விட்டாள் மாயா. அவன் ட்ராம் ஸ்டேஷனை நோக்கிச் சென்ருன்.

சாலினியிடம் பணத்தையும், நகைகளையும் கொடுத்து விட்டு அவளுடைய தந்தை ஊரிலில்லாததையும், தன்னை வந்து பார்த்துவிட்டுப் போகும்படி அவளுடைய தாய் சொன்னதையும் கோபிநாத் அவளிடம் கூறினன்.

"அப்பா இருந்திருந்தால் இன்னும் நிறைய பணம் அனுப்பியிருப்பார், கோபி!" என்று சாலினி ஜம்ப மாகச் சொல்லிக் கொண்டாள்.

"ஆமாம்! அதற்குச் சந்தேகமென்ன?" என்று கோபிநாத் பரிகாசம் கலந்த தொனியுடன் கூறினன். ஆனல், சாலினி அதை உண்மையான வார்த்தையாகவே எண்ணிக் கொண்டாள்.

"ஒரு தடவை அம்மாவைப் பார்த்துவிட்டு வர வேண்டும். ஏன் கோபி! இந்த நகைகளை விற்ருல் எவ்வளவு கிடைக்கும்?"

"குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் கிடைத்துவிடும்!"

"அப்படியானல் இவைகளை விற்றுப் பணத்தை கொண்டுவா!" சுலபமாகப் பணம் கிடைத்ததும் சந்தோஷத்துடன் வேறு உடை தரித்துக்கொண்டு 'க்ளப்' பிற்குக் கிளம்பினள்.

# 23

சாலினியின் நகைகளை அடகுவைத்து ஆயிரம் ரூபாய் பணத்தை அவளிடம் கொடுத்தான் கோபிநாத். யாரிடம் அடகுவைத்திருக்கிறு னென்று சாலினியும் கேட்கவில்லை; கோபிநாத்தும் சொல்லவில்லை. கடன்காரர்களுக்கெல்லாம் பணம் கொடுத்து முடித்தாள். பாக்கி பணத்தில் 'க்ளப்' செலவு மிக அமர்க்களமாய் நடந்துவந்தது. அசோக் குமாரின் வார்த்தைகளை லட்சியம் செய்யாமல் அவள் தன் வழியே சென்று கொண்டிருந்தாள்.

அசோக் குமார் மனதிற்குள் மிக்க வருத்தப்பட்டுக் கொண்டார். குடும்ப வாழ்க்கை அவருக்கு மிகவும் பாரமாகப்பட்டது. இந்தத் தொல்லைகளையெல்லாம் மறக்க விஞ்ஞான சாலையில் அடைக்கலம் புகுந்தார். அவர் உழைப்பிற்குப் பலன் கிடைக்காமற் போகவில்லை. ஆராய்ச்சியில் வெற்றி கிடைத்தது. அவர் புகழ் மேலும் பெருகியது. ஆனல், விடாது செய்த வேலையினல் அவர் உடல் நலங்குன்றி பலவீனமடைந்தார். ஜுரங்கண்டது. டாக்டர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு சொல்லினர். அவர் வீட்டிலேயேயிருக்க ஆரம்பித்தார். ஆனல், ஜுரம் நிற்கும் வழியாயில்லை. மனவேதனை வேறு அவரை வறுக்க ஆரம்பித்தது. சாலினியின் நடத்தையோ அவரால் சகிக்கவே முடியவில்லை.

அன்று ஜுரம் சற்று குறைந்திருந்தது. யாருடனுவது அவருக்குப் பேச வேண்டும் போலிருந்தது. கோபிநாத்திடம், "கோபி! என் உடம்பு சரியாகி விடுமா?" என்று கேட்டார்.

இந்த ஜுரம் என்ன செய்து விடும் எஜமான்? நாளைக்கே பாருங்கள்! உடம்பு குணமாகி விடும். ஓயாமல்வேலை செய்ததால் வந்த வினைதானிது! வேறொன்றுமில்லை. ஓய்வெடுத்துக் கொண்டால் சரியாகி விடும்!" என்று தைரியம் கூறினன். இந்த சமயத்தில் சாலினி புது உடை தரித்துக் கொண்டு 'க்ளப்'பிற்குச் செல்லத் தயாராக அங்கு வந்தாள். போகும் பொழுது ப்ரொபஸரின் உடல் நிலையை விசாரித்துவிட்டுப் போவோமென்று வந்திருந்தாள். ஆனல், அசோக்குமார் அவள் விசாரிப்பதற்கு இடங் கொடுக்கவில்லை.

"என் உடம்பு நன்ருகத்தானிருக்கிறது! நீ என்ன 'க்ளப்'பிற்கு கிளம்பி விட்டாயா?"

"ஆம்! இன்று 'க்ளப்'பின் வருஷாந்திரக் கொண்டாட்டம்!"

"அப்படியானல் போக வேண்டியது அவசியந்தான். வீட்டிலிருக்க வேண்டிய அவசியமே யில்லை!"

"வருஷாந்திரக் கொண்டாட்டத்தின் பொழுது அங்கத்தினர்கள் கலந்து கொள்வது முக்கிய மென்பதையும் நீங்கள் எண்ணிப் பாருங்கள்!"

"இந்த சமயத்தில் நீ இங்கு இருப்பதுதான் உன் கடமை!"

"நான் இங்கு இருந்து விட்டால் உங்கள் உடம்பு குணமாகி விடுமா?"

"நான் ஏதோ நினைத்திருந்தேன்......!" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவர் நடுவில் நிறுத்திக் கொண்டார்.

"நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருந்தீர்களென்று எனக்குத் தெரியும். எனக்கு இப்போது 'க்ளப்'பிற்குப் போவதுதான் முக்கியமாகப் படுகிறது!"

"அப்படியானால், பேஷாகச் செல்! நீ இங்கு இருப்பதனால் எனக்கு ஆறுதல் உண்டாகிவிடாது. பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அன்பு ஏற்படாதிருக்கும் போது உன்னைக் கட்டாயப்படுத்தி இங்கு இருக்கச் செய்வதினால் எனக்கு நிம்மதி ஏற்படாது. இதயமற்ற உனக்கு என் வேதனை எப்படித் தெரியப்போகிறது? நீ சென்றுவா!"

சாலினி வெளியே போக விரும்பினாள். கடிகாரத்தைப் பார்த்துச் சற்றுத் தயங்கி நின்றாள். அசோக் குமாரின் வார்த்தைகள் அவளை சற்று சிந்தனை செய்யும்படிச் செய்தது. மீண்டும் அசோக் குமார், "சாலினி! நீ போகலாம்! நீ இங்கு இருப்பதனால் எனக்கு நிம்மதி ஏற்படாது!" என்றார். தயங்கி நின்று கொண்டிருந்த சாலினி இந்தக் காரமான வார்த்தைகளைக் கேட்டதும் உடனே அவ்விடத்தை விட்டுச் சென்றாள்.

"எனக்கு உடம்பு சரியில்லையென்பதற்காக பிறர் உதவியை எதிர்பார்க்கிறேனே; இது என்ன முட்டாள் தனம்! கோபி! நீயும் இவ்விடத்தை விட்டுச் செல்!" என்றார் அசோக் குமார் வெறுப்புடன். சாலினியின் நடத்தையால் ஏற்பட்டிருந்த வெறுப்பின் காரணமாகத்தான் இப்படிச் சொல்கிறாரென்று கோபிநாத் தெரிந்துகொண்டான். அவன் ஒன்றும் சொல்லாமல் யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"கோபி! இந்தமாதிரி பணிவிடைகளை உன்னிடமிருந்து நான் எதிர்பார்ப்பதே தவறு!"

"இல்லை; எஜமான்! அப்படிச் சொல்லாதீர்கள். சேவை செய்வதே என் வாழ்க்கையின் லட்சியம். தங்களை விட்டுச் சென்றேனானால் சேவாதர்மத்திற்கு விரோதமாகச் சென்றவனாவேன். என்னெதிரில் 'க்ளப்' பைப்பற்றிய பிரச்னை எழவில்லை. கடைசியில், நம்முடன் வரப்போகும் புண்ணிய பாவங்களைப்பற்றிய பிரச்னைதான் என்முன் நிற்கிறது!"

"படித்த மனைவி தன் கடமையை உணராதிருக்கும் போது, ஒரு வேலைக்காரன் கடமையைப்பற்றியும், புண்ணிய பாவங்களைப்பற்றியும் அறிந்து அதன்படி நடக்கஎப்படி சாத்தியமாகும்?"

"நேரானவழியில் செல்ல எங்களுக்கு எவ்வளவோ கதைகள் இருக்கின்றன. எஜமான்! பக்த ஹனுமானின் சேவை, பாமா சாஹின் பக்தி இவைகளே எங்கள் வாழ்க்கையின் வழிகாட்டிகள்!"

சற்றுநேரம் இருவரும் பேசாமலிருந்தனர். அசோக் குமார் மீண்டும் "கோபி! நீ கலியாணம் செய்துகொண்டவன் தானே?" என்றார்.

"ஆம், எஜமான்!"

"கலியாணம் செய்துகொண்ட பிறகு எப்போதாவது உனக்கு உடம்புக்கு வந்திருக்கிறதா?"

"எத்தனையோ தரம் நோயாகப் படுத்திருக்கிறேன். ஏன், பாபு!"

• "அப்போது உனக்கு யார் பணிவிடை செய்தார்கள்?" அசோக் குமாரின் மனதை அறிந்து கொண்ட கோபிநாத், அவர் எதற்காக இதைக் கேட்கிருரென்று தெரிந்து கொண்டான். ஆனல், அவர் கேள்வியினல் அவன் மனதில் அடைபட்டுக் கிடந்த துக்கம் பீறிக் கொண்டு கிளம்பியது. என்ன முயன்றும் அவனல் கண்ணீரை அடக்க முடியவில்லே.

"ஏன் அழுகிருய், கோபி?" என்று கேட்டார் அசோக் குமார்.

"ஒன்றுமில்லே, எஜமான்?" என்று கூறிக்கொண்டே கண்களேத் துடைத்துக் கொண்டான்.

"ஒன்றுமில்லாமல் அழுகை வருமா? என்ன விஷயமென்று சொல்!" என்ருர் அசோக் குமார்.

கோபிநாத் தன் மனதிலிருந்ததை வெளியிட விரும்பினன். தன் துக்கத்தை யாரிடமாவது சொல்லி ஆற்றிக் கொள்ள வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. "நீங்கள் கேட்ட கேள்வியினல் பழைய விஷயங்களெல்லாம் எனக்கு ஞாபகத்திற்கு வந்தன. எஜமான் என் வீட்டில் நானும் என் மனேவியும்தான் இருந்தோம். என் தகப்பனர் நிறைய எனக்கு சொத்து வைத்துச் சென்ருர். அதனல் நான் சம்பாதிக்காமல் உட்கார்ந்தே சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். வாலிபத்தின் மிதப்பில் நான் வேசிகளின் சகவாசம் கொண்டேன். என் மனேவிக்கு எத்தனேயோ தொந்திரவுகள் கொடுத்தேன். அவளேப் படுத்திவைத்தேன். அநேக நாட்கள் வீட்டிற்கே செல்லமாட்டேன். இதனல் அவள் மனம் உடைந்து நோயாகப் படுத்தாள். ஆனல் அப்பொழுதும் நான் வேசியின் வீட்டிலேயே கிடந்தேன்.

பணமுள்ள போது அவளைக் கவனிக்கவில்லை. எல்லா சொத்தும் கரைந்து, தாசிகள் என்னை வெறுத்து அனுப்பி விட்டனர். நான் பரம ஏழையாகப் போனபிறகு அவள் தான் எனக்குத் துணையாக நின்றாள். ஒரு சமயம் எனக்கு காலரா கண்டது. நான் பிழைக்கமாட்டேனென்று கிடந்தேன். அவள் இரவுபகலாக எனக்காக கடவுளைப் பிரார்த்தித்தாள். அந்த உத்தமியின் பிரார்த்தனை கடவுளின் செவிக் கெட்டியது போலும்! நான் அந்தக் கண்டத்தில் பிழைத்தேன். பதிவிரதையாகிய அவள் மறுநாள் அதே நோய்கண்டு இறந்தாள். அவளை நான் தெய்வம் போல் எண்ணிக்கொண்டிருக்கிறேன். கடமையின் தத்துவத்தை அறிவித்த குருவைப் போலவும் எண்ணிக்கொண்டிருக்கிறேன். அதன் பிறகு பிறருக்கு சேவை செய்வதே என் கடமையாகக் கொண்டேன். அதில் தான் என் பாபத்திற்குப் பரிகாரமும், என் மனதிற்கு சாந்தியும் கிடைக்கிறது!" என்று கூறிமுடித்தான். கோபிநாத்தின் வார்த்தைகள் அசோக்குமாரின் மனதைக்கூட ஆட்டிவிட்டது. அசோக்குமாரின் மனக்கண்முன் சாலினியின் நடவடிக்கைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்ற ஆரம்பித்தன. இந்த யோசனையினால் அவர் இதயத்தில் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. இதயம் நின்றுவிடும் போல் 'பட பட' என்று அடித்துக்கொண்டது. "கோபிநாத்! சீக்கிரம் சென்று டாக்டரை அழைத்துவா!" என்றார். டாக்டரை அழைக்க கோபிநாத் ஓடினான்.

# 24

கோபிநாத் டாக்டர் வீட்டுக்குச் சென்று 'டாக்டர், டாக்டர்' என்று கூவினன். ஆனல் அவனுக்குப் பதிலொன்றும் கிடைக்கவில்லை. அலுத்துப்போய் அங்கிருந்து புறப்படும் .போது ஒரு வேலைக்காரி கதவைத் திறந்தாள். "நாசமாய்ப்போக! இந்த நேரத்தில் வந்து ஏன் கூச்சல் போடுகிருய்? டாக்டர், டாக்டர் என்று கத்துகிருயே? டாக்டரிடம் உனக்கு என்ன வேலை?" என்று ஆத்திரத்துடன் கோபிநாத்தை வைதாள். அவள் பார்வையிலிருந்தும் முகபாவத்திலிருந்தும் கோபிநாத் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டான். "பாவம்! உனக்கு ரொம்பகஷ்டம்; என்ன செய்வதம்மா! நம் வேலை அப்படியிருக்கிறது! என்னைப் பார்; கிழவன். நடு இரவில் அனுப்பப்பட்டிருக்கிறேன். ஆனல் என்ன செய்வது? இந்தப் பாழும் வயிற்றுக்காக.........!" என்று சொல்லிக்கொண்டே ரொம்ப வருத்தப்படுபவன் போல் தலையைக் குனிந்துகொண்டான். "நீ எங்கே வேலை செய்கிருய்?" என்ருள் அந்த வேலைக்காரி.

"அபாலோ பந்தரில் ஒரு ப்ரொபஸர் இருக்கிருர். அவரிடம் வேலை செய்து கொண்டிருக்கிறேன். மாதம் பத்து ரூபாய்!"

"அடே உன் வாழ்க்கை தேவலையே!"

"என்ன தேவலே; அம்மா! எஜமானின் வழி வேறு, எஜமானியின் வழி வேறு! இவர்களிருவரிடமும் அகப் பட்டுக்கொண்டு நான் முழிக்கிறேன். டாக்டர் சாஹிபிடம் வேலை செய்ய எதாவது இடம் கிடைக்குமா?"

ஐயோ! இங்கே ரொம்ப அநியாயம்! டாக்டர் 'க்ளப்'பில் கொட்டமடிக்கிறார். அவர் மனைவி பர புருஷர் களை வரவழைத்து அவர்களுடன் சல்லாபித்துக் கொண் டிருக்கிறாள். இந்தக் கூட்டிக்கொடுக்கும் வேலை எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவில்லை!"

"என்ன செய்வதம்மா; அடிமைத் தொழிலே உத வாது!" என்று தன் மனோபாவதை மறைத்துக்கொண்டு சாதுரியமாகப் பேசினன் கோபிநாத். "டாக்டர் பத்து ரூபாய் கொடுக்கிறார். டாக்டரின் மனைவி தினம் நோட்டு நோட்டாகக் கொடுக்கிறாள். எனக்குப் பணத்திற்கொன் றும் குறைச்சலில்லை. ஆனல் இந்தமாதிரி பணம் சம்பா திப்பதற்கு உன் பத்து ரூபாய் சம்பளமே தேவலை!" என்றாள் அந்த வேலைக்காரி. எல்லாவற்றையும் சொன்ன பிறகு, ஒருவேளை தான் சொன்னதை யெல்லாம் இவன் டாக்டரிடம் சொல்லிவிட்டாலென்ன செய்வது என்ற சந்தேகம் எழுந்தது. "உனக்குக் கூட இந்தமாதிரி வரும் படி கிடைக்குமா?" என்று அவனைக் கேட்டாள்.

"மாதச் சம்பளம் பத்து ரூபாய்தான். அதைத் தவிர நான் முப்பது நாற்பது சம்பாதித்துவிடுவேன்!" என்று அவளுக்காக ஒரு பொய்யைச் சொல்லி வைத்தான்.

"சரி; நான் போய் வருகிறேன் அம்மா! டாக்டர் எந்தக் க்ளப்பில் சேர்ந்திருக்கிறார்?" என் று கேட்டுக் கொண்டே கோபிநாத் புறப்பட்டான். "'மலபார்க்ளப்'பில் தான்! அங்கு போனல் திரும்பி வருவதேது?" என்றாள் அவள்.

டாக்டர் மனைவியின் நடத்தையைப்பற்றி வேலைக்காரி சொன்னது எவ்வளவுதூரம் நிஜமாயிருக்குமென்பதைப் பற்றி சிந்தித்தவாறே கோபிநாத் ‘மலபார் க்ளப்’பை நோக்கிச் சென்ருன்.

# 25

‘க்ளப்’பில் விருந்து முடிந்தது. அநேக மெம்பர்கள் அவ் விடத்தை விட்டு வீட்டிற்குக் கிளம்பிவிட்டனர். உமேச் சந்தர் டாக்டரிடம், “ஏன் டாக்டர்! இன்று விளை யாட வேண்டாமா?’’ என்ருர். “இல்லை நான் வீட்டிற்குப் போகவேண்டும்!’’ என்ருர் டாக்டர். அதற்குள் மனோரமா, “வீட்டிற்குப் போகாமல் இங்கேயே இருந்துவிடப் போகி றீருமா, டாக்டர்? ‘ரப்பர் ஆட்டம் ஒரே ஆட்டம் ஆடி விட்டுப் போவோம்!’’ என்ருள். டாக்டர் சிரித்துக் கொண்டே, “என்னிடத்தில் இந்தப் பலவீனம் ஒன்றிருக் கிறது!’’ என்ருர்.

“என்ன பலவீனம்?’’ என்ருள் மனோரமா.

“அழகிய ஸ்திரீ சொல்லும் வார்த்தையை தட்டமுடி யாத பலவீனம் தான்!’’ என்ருர் டாக்டர்.

டாக்டர் வார்த்தையை புன்முறுவலுடன் மனோரமா எற்றுக் கொண்டாள். “நான்காவது ஆசாமிக்கு சாலினியை அழைத்து வாருங்கள்!’’ என்ருர் டாக்டர். உமேச் சந்தர் சாலினியை அழைத்து வந்தார். நான்கு பேரும் ஆட உட்கார்ந்தனர்.

கோபிநாத் டாக்டரை தேடிக்கொண்டு அங்கு வந்தான். நேராக டாக்டரிடம் சென்று, "டாக்டர்! எஜமானுக்கு உடம்பு சரியாயில்லை. தங்களை அழைத்துக்கொண்டு வரும்படி சொன்னார்!" என்றான். இதைக் கேட்டதும் டாக்டர் சாலினியைப் பார்த்தார். "உடம்பு ஜாஸ்தியாயிருக்கிறதா? டாக்டர் இதோ வருகிறாரென்று போய்ச் சொல்!" என்று சாலினி ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள்.

"கோபிநாத்! நீ வீட்டிற்குப் போவதற்குள் நான் வந்துவிடுகிறேன்!" என்று நயமாக டாக்டர் சொன்னார். சாலினி சொன்ன வார்த்தைகள் டாக்டரிடமிருந்து வந்திருந்தால் கோபி வருத்தப்பட்டிருக்க மாட்டான். அவன் தன் மன வருத்தத்தை வெளிக்காட்டாமல் அங்கிருந்து கிளம்பினான்.

டாக்டர் ஆட்டத்தில் வேண்டுமென்றே தோற்றார். அங்கிருந்து தன் வீட்டிற்குச் சென்று மருந்துகளை எடுத்துக்கொண்டு, அசோக் குமாரின் வீட்டிற்குச் சென்றார். அங்கு கோபிநாத் அதற்குள் வந்திருக்க மாட்டானென்று நினைத்தார். ஆனால், அவர் காரைக் கண்டதும் ஓடிவந்து கதவைத் திறந்தான்.

டாக்டர் அசோக் குமாரை பரீட்சித்துக்கொண்டிருக்கும்போது கோபிநாத் அவர் முகபாவங்களை கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தான். அவர் முகத்திலிருந்தே அவர் மனதையறிந்துகொள்ள அவனுக்குத் தெரியும்.

"ஒன்றுமில்லை! மனக்கொதிப்பினால் சரீரம் உஷ்ணம் அடைந்திருக்கிறது! மிஸ்டர் அசோக் குமார்! நான் முன்பு சொன்னதைப்போலவே இப்போதும் ஓய்வெடுத்துக் கொள்ளுங்களென்று சொல்லுகிறேன். ஓய்வெடுத்துக் கொண்டீர்களானால் உடம்பு குணமாகிவிடும். கோபிநாத்! காலை மருந்து வாங்க வா! என்றார் டாக்டர்.

"பீஸும் காலையில் கொடுத்தனுப்பி விடுகிறேன்!" என்றார் அசோக் குமார். "அதைப்பற்றியென்ன? உங்கள் பணம் எங்கே போய்விடுகிறது?" என்றார் டாக்டர்.

"உங்களுக்கும் குடும்பபாரமிருக்கிறதே! மோட்டார், பங்களா, வேலைக்காரர்கள் எல்லாம் வேண்டியிருக்கிறதே!" என்றார் அசோக்குமார்.

"அதனாலென்ன? கடவுள் எல்லாவற்றையும் நடத்துவார்!" என்று சொல்லிவிட்டு டாக்டர் சென்றுவிட்டார். அசோக்குமார் சற்று நேரத்திற்கெல்லாம் தூங்கிவிட்டார். அலைந்ததினால் களைத்துப்போய் கோபிநாத் அயர்ந்து தூங்கிவிட்டான். சாலினி எப்பொழுது வந்தாள், எப்பொழுது தூங்கினாளென்று ஒருவருக்கும் தெரியாது.

பொழுது விடிந்தது. சோபிநாத் பலகாரமும், டீயும் அசோக் குமாரின் அறையில் கொண்டு வைத்தான். சாலினி அசோக்குமாரின் அறைக்குள் வந்தாள். அசோக்குமார் அவளுடன் பேச விரும்பவில்லை. அசோக்குமாரின் முகபாவத்திலிருந்தே அவர் மனதை சாலினி அறிந்து கொண்டாள். தினம் டீ சாப்பிட்டுவிட்டு அங்கிருந்து போய்விடுபவள் அன்று அங்கேயே உட்கார்ந்துகொள்ள தீர்மானித்தாள். 'டயம்ஸ் ஆப் இன்டியா' பிரதியொன்றை எடுத்துக்கொண்டு அகராதியுடன் பகுத்தறிவுபோட்டிக்கு விடை கண்டுபிடிக்க உட்கார்ந்தாள்.

"கோபி! டாக்டரிடம் சென்று மருந்து வாங்கிக் கொண்டு வா! நடந்து போகாதே! ட்ராமில் போ! இல்லாவிட்டால் நீயும் படுத்துக்கொள்வாய்!" என்றார் அசோக் குமார். இதைக் கேட்ட சாலினி அகராதியைப் பார்த்துக் கொண்டே மெல்ல சிரித்தாள். "கோபிநாத் மருந்து வாங்கப் போகிறான் டாக்டரின் 'பீஸை'க் கொடு!

அவரிடம் கொடுத்துவிட்டு வருவான்!" என்று சாலினியின் பக்கம் பார்த்துக்கொண்டே அசோக் குமார் சொன்னர். ஆனல், சாலினி இதைக் கேட்டும், கேளாதவள்போல் புத்தகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சாலினி நான் என்ன சொன்னேனென்று கேட்டாயா?" என்று கோபத்துடன் கேட்டார் அசோக்குமார்.

"கேட்டேன்!" என்று சுருக்கமாகப் பதிலளித்தாள் சாலினி.

"பின் நீ என்ன சொல்கிருய்?"

"நான் போட்டியில் மூழ்கியிருக்கிறேன். இந்த சமயம் எல்லா விடைகளும் சரியாகக் கிடைத்துவிடும் போலிருக்கிறது. முதல் ப்ரைஸ் 40,000 ரூபாய்!"

"வீடு பற்றி எரியும்போது கிணறு வெட்டக் கிளம்பியிருக்கிருயாக்கும்?"

"ஆமாம்! இல்லாத இடத்தில் கிணறு வெட்டத்தான் வேண்டியிருக்கிறது!"

"ஏன்? என் சம்பளம் போதவில்லையா?"

"போதுமானதா யிருந்தால் இதை யெல்லாம் ஏன் செய்ய வேண்டிவருகிறது!"

"உனக்கு எவ்வளவு வந்தால் தான் போதும்! உன் செலவினல் மருந்துகூட சாப்பிடாமல் பிராணனை விட வேண்டியது தான்!"

"நீங்கள் பிராணனை விடும்படியாகச் செய்துவிட மாட்டேன்! கொஞ்ச நாட்கழித்து பணம் அனுப்புவதாக

கடிதம் எழுதி அனுப்புகிறேன். டாக்டர் ஒன்றும் சொல்ல மாட்டார்!''

"டாக்டர் ஒன்றும் சொல்லமாட்டாரென்று எனக்குத் தெரியும்! அவருக்கு வரவு செலவு ஒன்றும் கிடையாதா? எத்தனை நாள்வரை அவருக்குப் பணம் கொடுக்காமலிருப்பது? அவர் மனதிற்குள் ஏதாவது நினைத்துக் கொள்ள மாட்டாரா!''

"இதைத் தவிர வேறு வழியொன்றும் எனக்குத் தெரியவில்லை!''

"அவருக்குப் பணம் கொடுக்காமல் எனக்கு மருந்து வேண்டாம்!''

அசோக் குமாரின் பேச்சைக் கேட்டு கோபிநாத் பயந்து விட்டான். திரும்பவும் அவருக்கு உடம்பு ஜாஸ்தியாகிவிடப் போகிறதே யென்று கவலை கொண்டான். அவர் மனதை மாற்றுவதற்காக அவ்விடத்தை விட்டுச் சென்று தன் அறையிலிருந்து ஒரு சிறிய பொட்டலத்தை எடுத்து வந்தான். அவர் எதிரில் வந்து நின்றானே தவிர விஷயத்தைச் சொல்ல அவனுக்குத் தைரியமில்லை. அவன் யோசித்தவாறு நிற்பதைக் கண்டு அசோக் குமார், "என்ன விஷயம், கோபி?'' என்றார்.

"ஒன்றுமில்லை, எஜமான்! நான் கொஞ்சம் பணம் சேர்த்து வைத்திருந்தேன். அதை உபயோகிக்க இப்போது சந்தர்ப்பம் வந்திருக்கிறது. அதனால் இப்போது அதைக் கொணடுவந்திருக்கிறேன்!'' என்று சொல்லிக் கொண்டே பொட்டலத்தைப் பிரித்து அவர்முன் வைத்தான். அதில் குறைந்தபட்சம் ஐந்நூறு ரூபாய் இருந்திருக்கும்.

"வேண்டாம் கோபி! உன் பணத்தை நான் வாங்கிக் கொள்ள மாட்டேன். அது உன்னிடமிருந்து கடன் வாங்குவதாகும். கடன் வாங்கி சாப்பிடுவதைவிட பட்டினி கிடந்து இறப்பதே மேலென்று எண்ணும் சுபாவமுடையவன் நான் என்பது உனக்குத் தெரியும்?" என்று கூறிக்கொண்டே அலட்சியமாக அந்தப் பணத்தைப் பார்த்தார்.

"தெரியும் எஜமான்! ஆனால், நான் கொடுப்பது கடனல்ல, என் கடமையை உணர்ந்து கொடுக்கிறேன். எஜமானின் கஷ்ட சமயத்திற்கு உதவாத பணம் எதற்கு! தாங்கள் இதை அங்கீகரித்துக் கொள்ளாவிட்டால், எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கும் எஜமான்! என் சேவா-விரதத்திற்கும் பங்கம் ஏற்பட்டுவிடும்!" என்று வருத்தத்துடன் கோபிநாத் சொன்னான். கடமையைப் பற்றி கோபிநாத் சொன்னதும் அவர் மனக்கண் முன் கோபிநாத்தின் கதை ஞாபகம் வந்தது.

"நல்லது, கோபி! இதை நான் அங்கீகரித்துக் கொண்டேன். எனக்காக இதை நீ செலவு செய்யலாம்!" என்றார். கோபிநாத் அதை எடுத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்றான். சாலினிக்கு முதலில் கோபிநாத்தின் செய்கை பிடிக்கவில்லை. பிறகு அசோக் குமார் அந்தப் பணத்தை அங்கீகரித்துக் கொண்டு திரும்பவும் கோபிநாத்திடமே கொடுத்து செலவு செய்யும்படியாகச் சொன்னதும் அவள் தனக்குள் ஆத்திரப்பட்டுக் கொண்டாள். ஆனால், இதையெல்லாம் கவனியாதது போல் தலைகுனிந்த வண்ணம் பகுத்தறிவு போட்டியிலேயே ஈடுபட்டிருந்தாள்.

"ஆஹா! என்ன விசுவாசம்! எத்தனை யோக்கியன்! என்ன மேலான எண்ணங்கள்! உயர்ந்த லட்சியங்கள்!

பாரதத்தாயின் உத்தம புத்திரன்!'' என்று தன் அந்தரங்கத்தில் எழுந்த எண்ணங்களை அசோக் குமார் வெளியிட்டார். சாலினிக்கு இது பிடிக்கவில்லை. அகராதியைப் பார்த்துக்கொண்டே "அடாடா! என்ன விபரீத மாறுதல்! சில மாதங்களுக்கு முன் அடிமைத்தனத்திலேயே வெறுப்பு ஏற்பட்டிருந்தது; இப்போது, அடிமைத்தனத்தில் அன்புண்டாகி விட்டதாக்கும்; அடாடா! என்ன யோக்கியன்! எத்தனை உயர்ந்த லட்சியம்! இவனால் தான் பாரத நாட்டிற்கே விமோசனம் ஏற்பட்டு விடப்போகிறது!'' என்று பரிகாசத்துடன் கூறினாள்.

"எது எப்படியிருந்த போதிலும், தன் கடமையை உணர்ந்து அதன்படி செல்வது தான் அழகு!'' என்றார் அசோக் குமார்.

"அழகுதான்! யார் இல்லை என்றார்கள்? ஆனால், மனைவியிடம் அவநம்பிக்கை கொண்டு வேலைக்காரனிடம் பணம் கொடுத்துவைப்பது எந்த அழகான கடமையைச் சேர்ந்ததோ?''

"அவன் வேலைக்காரனாயிருந்த போதிலும் அவனிடம் தயாள குணம் இருக்கிறது. அவனுக்கு இருக்கும் பக்தி கூட உனக்குக் கிடையாது. அப்படியிருக்கும் போது அவனிடம் பணத்தை கொடுத்து வைத்தாலென்ன?''

"அப்படியானால், அவனிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பக்தியைப் போலவே என்னிடமும் எதிர்பார்க்கிறீர்களா?''

"ஆம்! ஏன் எதிர்பார்க்கக் கூடாது?''

"தன் மனைவியிடமிருந்து பயபக்தியை அதிகாரத்தின் மூலம் பெற எண்ணும் மனிதர்கள் மிக்க அறிவீனர்கள்.

இதனால் அவர்களுக்கு நன்மையொன்றும் ஏற்பட்டு விடாது!''

"பக்தியென்றால் நீ அர்த்தம் செய்து கொண்டிருக்கும் விதத்தில் நான் சொல்லவில்லை. புருஷன் - மனைவியின் அபிப்பிராயங்கள், நீதிகள், லட்சியங்கள் எல்லாம் ஒரே மாதிரியா யிருக்கும் அன்பைத்தான் நான் விரும்புகிறேன். அடிமைத்தனத்தைச் சொல்லவில்லை!''

"அப்படி நீங்கள் அன்புடனிருக்க விரும்பினால் என்னிடம் சந்தேகங்கொண்டு கோபிநாத்திடம் என் பணத்தை கொடுத்து வைக்கிறீர்கள்?''

"உன் வியவகாரங்கள் அப்படியிருக்கின்றன! என் சம்பாத்யத்தில் உனக்கு அக்கரையிருந்தால் ஏன் வீணாகப் பணத்தை அழிக்கிறாய்? என்னிடம் உனக்குப் பிரியமிருந்தால் ஜுரமாயிருக்கும் என்னை விட்டு ஏன் 'க்ளப்'புக்குப் போகிறாய்? டாக்டருக்குப் பணம் கொடுக்காமல் மருந்து வேண்டாமென்று நான் சொன்னபோது, உன்னிடமிருக்கும் எதையாவது விற்று மருந்து வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று உனக்கு ஏன் தோன்றவில்லை? கோபிநாத் உழைத்து சம்பாதித்த பணம் அது. அதை உன்கையில் கொடுத்து நீ ஊதி எறிய எனக்குச் சம்மதமில்லை!''

சாலினி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் தபாற்காரனின் குரல் கேட்டது. சாலினி எழுந்து சென்றாள்.

"ப்ரொபஸரின் பெயருக்கு ஓர் இன்ஷியூரன்ஸ் லெட்டர் வந்திருக்கிறது!''

"அவருக்கு உடம்பு சரியாயில்லை! நான் கொண்டு போய்க் கொடுக்கிறேன்.''

"இல்லையம்மா! நானே இதைக் கொடுக்கவேண்டும்!" கவரை அசோக்குமாரிடம் கொடுத்துவிட்டு தபால்காரன் சென்று விட்டான். கவரில் கடிதமும், செக்கும் காணப் பட்டன. "இது என் கடிதம். என்னிடம் கொடுங்கள்!" என்றாள் சாலினி. அவர் கடிதத்தைப் பிரித்துக்கொண்டு "இது உன் கடிதமா? எப்படி?" என்றார்.

"இந்த 'செக்' என் தகப்பனார் அனுப்பியிருக்கலாம். ஏனெனில் இரண்டாயிரம் ரூபாய் அனுப்பும்படி எழுதி யிருந்தேன். இங்கே கொண்டாருங்கள்!" என்று பொறுமை யில்லாமல் துடித்தாள்.

"இது உன்னுடையதல்ல; எனக்குத்தான் வந்திருக் கிறது!" என்று கடிதத்தைப் படித்துக் கொண்டே அசோக்குமார் சொன்னார். "உங்களுக்கு யார் அனுப்ப காத்திருக்கிறார்கள்?" என்று சாலினி துடுக்காய்க் கூறினாள். கடவுள்தானென்று சொல்வதுபோல் மேலே தன் கையைத் தூக்கிக் காண்பித்தார் அசோக்குமார்.

"சாலினி! சீமையில் 'பேடென்ட்' ஆன என் ஆராய்ச்சிக்காக இந்தச் 'செக்' வந்திருக்கிறது! இரண் டாயிரம் ரூபாயல்ல; பத்தாயிரம் பவுன்!"

"உங்கள் முயற்சிக்கு வெற்றி கிடைத்து விட்டது! நல்லதாகப் போயிற்று! கார், ரேடியோ துணிமணிகள் எல்லாம் வாங்கலாம்!" என்று சொல்லிக் கொண்டே செக்கை தன் கையில் எடுத்துக் கொண்டாள்.

"அதெல்லாம் ஒன்றும் கிடையாது. நான் என் விஞ் ஞானசாலையை தனியாக அமைத்துக் கொள்ள யோசித் துக்கொண்டிருக்கிறேன்!" என்று கூறிக் கொண்டே மெதுவாக அவளிடமிருந்து செக்கை வாங்கிக் கொண்

டார். மீண்டும் "அடுத்த மாதத்திலிருந்து முழுச் சம்பளத்தையும் உன்னிடம் கொடுக்கப் போவதில்லை. உன் மாதச் செலவுக்காக முந்நூறு ரூபாய் கொடுத்து விடுகிறேன். மற்ற பணத்தையெல்லாம் கோபிநாத்திடம் கொடுத்து வைக்கப் போகிறேன்!" என்றார். கோபத்துடன் சாலினி உடனே எழுந்து நின்றாள். "இதென்ன எனக்கு ஜீவனாம்சமா?" என்று கூவினாள்.

"நீ எப்படி வேண்டுமானாலும் நினைத்துக் கொள்!" என்றார் அசோக் குமார்.

சாலினிக்கு அதற்குமேல் அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. 'விர்' ரென்று அவ்விடத்தை விட்டு வெளியே சென்றாள்.

# 26

கோபிநாத் மருந்து வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்தான். "கோபி! சாலினி எங்கே சென்றாள்?" என்றார் அசோக்குமார். கோபிநாத் வெளியே சென்று பார்த்தான். சாலினி காரில் புறப்பட்டு சென்று கொண்டிருந்தாள். திறந்திருந்த 'கேட்'டை மூடிவிட்டு கோபிநாத் உள்ளே வந்தான். சாலினி காரில் வெளியே சென்றதைத் தெரிவித்தான். அவள் வெளியே கிளம்பி சென்று விட்டாளென்று தெரியும், கோபிநாத்—எனக்குத் தெரியும்! அவள் நடவடிக்கைகள் ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை. அவள் செயல்கள் ஒவ்வொன்றும் என்னை வருத்துகின்றன. அவளிடம் அளவில்லாத வெறுப்புக் கொள்ளும்படியாகச் செய்து கொள்கிறாள்......!" என்று கூறிக்கொண்டே

களைப்புடன் படுக்கையில் சாய்ந்து கொண்டார். சீசாவி லிருந்து மருந்தை கண்ணாடிப் பாத்திரத்தில் விட்டு அசோக் குமாரிடம் கொடுத்துக் கொண்டே "என்ன நடந்தது, எஜமான்!'' என்றான் கோபிநாத். மனக்குறைகளை யாரி டமாவது சொல்லிக்கொண்டால் தான் பாரம் சற்று நீங் குவதைப் போல் நமக்குத் தோன்றுகிறது. அந்தரங்க மானவர்களிடம் சொல்லி ஆற்றிக் கொள்வது அதற்கு மருந்தைப் போல் உதவுகிறது.

சாதாரணமாக இந்தமாதிரி விஷயங்களை அசோக் குமார் கோபிநாத்திடம் சொல்வதில்லை. ஆனால் இன்று எல்லாவற்றையும் சொல்லிவிட விரும்பினார்.

"கோபி! எனக்கும் சாலினிக்கும் உள்ள தொடர்பு நாளுக்கு நாள் விட்டுக்கொண்டே வருகிறது. ஏன் இப்படி நடந்துகொண்டு வருகிறதென்று எனக்குத் தெரிய வில்லை. இன்று எனக்கு பத்தாயிரம் பவுன் இனாம் வந்தது. அதைக் கண்டதும்; அதை எப்படி எப்படி யெல்லாம் செலவழிக்கலா மென்பதைப்பற்றி ஒரு திட்டம் தயாரிக்க ஆரம்பித்தாள். ஆனால், நான் ஒரு பைசாகூட கொடுக்கப் போவதில்லை யென்று சொல்லிவிட்டேன். அதுவுமன்றி, அடுத்த மாதத்திலிருந்து அவள் செலவிற்காக முந்நூறு ரூபாய்தான் கொடுக்கப் போகிறேனென்றும் சொல்லி விட்டேன். ஆகையால் அவளுக்கு ரொம்ப கோபம். உடனே எழுந்து சென்றுவிட்டாள். இவ்வளவுதான் விஷ யம்!'' என்று சொல்லிவிட்டு ஏதோ யோசிக்க ஆரம்பித் தார்.

"இப்பொழுது எஜமானி அம்மாள் தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறார். ஆனால் இன்றில்லாவிட்டால் என்றாவது ஒருநாள் நல்வழிக்கு வந்து விடுவாரென்று தான் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்!'' என்றான் கோபிநாத்.

"அப்படி எனக்குத் தோன்றவில்லை. அப்படியே மாறுதல் ஏற்பட்டாலும், இவ்வளவு ஆட்ட பாட்டங்களுக்குப் பிறகு இவளிடம் யாருக்கு அநுதாபம் ஏற்படும்?" என்று நிராசையான மனதுடன் கூறினர்.

"அதனலென்ன, எஜமான்! தவருன வழியில் சென்றவர்கள் திருந்தி விட்டால், பிறகு அந்தத் தவறை நாம் மறந்து விடவேண்டும்!" என்று கூறிக்கொண்டே கோபிநாத் தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

சாலினி காரில் ஏறிக்கொண்டு சென்ருளேயொழிய, தான் எங்கே போய்க் கொண்டிருக்கிருே மென்று கூட அவள் யோசிக்கவில்லை. "இனிமேல் 'க்ளப்' செலவையெல்லாம் எப்படி நடத்துவது? முந்நூறு ரூபாய் எப்படிப் போதும்? எப்பொழுது பார்த்தாலும், யார் உதவி செய்து கொண்டே யிருப்பார்கள்?" என்றெல்லாம் யோசித்து சென்றுகொண்டிருந்தாள்.

இந்த விசாரங்களெல்லாம் அவளை உமேச் சந்தரின் வீட்டிற்கு முன் கொண்டுபோய் நிறுத்தியது. இதற்குமுன் இரண்டு மூன்று தடவை உமேச் சந்தர் வீட்டிற்கு வந்திருக்கிருள். அதனல் புதிதாக அறிமுகமானவர்கள் வீட்டிற்குச் செல்லும்போது ஏற்படும் சங்கோஜம் அவளுக்குண்டாக வில்லை. சாலினி உள்ளே சென்று பார்த்தவுடன் அங்கிருக்கும் மாறுதலைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். பிராந்தி புட்டிகளும், சோடா பாட்டில்களும் இருக்கும் இடத்தில் இப்பொழுது நல்ல புத்தகங்கள் ஒரு மூட்டை அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பாரிஸ் அழகிகளின் படங்கள் மாட்டியிருந்த சுவரில், இப்போது தலைவர்களின் படங்களும், தெய்வங்களின் படங்களும் அலங்கரித்துக் கொண்டிருந்தன. இவைகளை யெல்லாம்

பார்த்துவிட்டு சாலினி ஆச்சரியத்துடன் உமேச் சந்தரைப் பார்த்தாள். அவள் பார்வையிலிருந்து அவள் மனதை உமேச் சந்தர் அறிந்துகொண்டார்.

"என்ன, மிஸ்ஸஸ், குமார்! இன்று வழிதவறி வந்து விட்டீர்கள்!" என்று உமேச் சந்தர் அவளைக் கேட்டார்.

"முதலில் இங்கு ஏற்பட்டிருக்கும் மாறுதல்களுக்கு காரணமென்னவென்று சொல்லுங்கள்! எதற்காக இந்த ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கிறீர்கள்?" என்றாள் சாலினி. அவள் இவ்விதம் பேசிக்கொண்டிருந்தாளே யொழிய அவள் மனம் 'இந்த சமயத்தில் உமேச் சந்தர் உதவி செய்வாரா? அவரிடம் எல்லா விஷயங்களையும் சொல்லலாமா?' என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தது.

"இந்த பன்னிரெண்டு மணி வண்டிக்கு என் தந்தை வரப்போகிறார். அவருக்காகத் தான் இந்த ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கிறேன். இரண்டு, மூன்று தினங்கள் இங்கு அவர் தங்குவார்: அவர் இருக்கும் வரை நான் 'க்ளப்'பிற்குக்கூட வர முடியாது!" என்று கூறிக்கொண்டே கடிகாரத்தைப் பார்த்தார். "இன்னும் அரை மணிதான் இருக்கிறது. உங்களுக்கு என்ன தெரிவிக்க வேண்டுமென்பதைச் சொல்லுங்கள்!" என்று கூறினார் உமேச் சந்தர்.

"அரைமணியில் என்ன செய்ய முடியும்?" என்றாள் சாலினி. தான் சொல்லப்போகும் விஷயத்தைப்பற்றி ஒரு விதமாக முடிவு செய்து கொண்டிருந்தாள்.

"அரைமணியில் எத்தனையோ பெரிய பெரிய காரியங்கள் நடக்கின்றன. அரைமணி நேரத்தில் தான் விச்வ விஜய நெப்போலியனுக்கு 'வாடர்லூ' மைதானத்திலிருந்து முறியடிக்கப்பட்டு ஓடும்படி நேர்ந்தது!"

"இன்று, பாருங்கள்! அவருடைய ஆராய்ச்சிக்காக பத்தாயிரம் பவுனுக்கு 'செக்' ஒன்று வந்தது. அதிலிருந்து, மோட்டாருக்குத் தங்களிடமிருந்து கடன்வாங்கிய பணத்தை கொடுத்து விடலாமென்று நான் எண்ணியிருந்தேன். ஆனால் அவர் ஒரு பைசாகூட கொடுக்கப் போவதில்லையென்று சொல்லி விட்டார். அதுவுமன்றி, அடுத்த மாதத்திலிருந்து என் செலவிற்காக முந்நூறு ரூபாய்தான் கொடுக்கப் போகிறாராம்!" என்று கூறி சாலினி பெருமூச்செறிந்தாள்.

"இது ரொம்ப அநியாயம்! குறைந்த பட்சம் பாதியாவது கொடுப்பதுதான் சட்டரீதியானது!"

"அதில் பாதி கிடைக்கும்படியாக உங்களால் உதவி செய்ய முடியுமா?"

"அப்படியானல், நீங்கள் ஹைக் கோர்ட்டில் அப்பீல் செய்கிறீர்களா?"

"வேண்டாம், வேண்டாம்! வேறு வழியில் நீங்கள் உதவி செய்யவேண்டும். தாங்கள் என்னை மாதம் அறுநூறு ரூபாய்க்கு அந்தரங்க காரியதரிசி வேலைக்கு நியமித்திருப்பதாக ஒரு பொய் உத்யோக உத்திரவுப் பத்திரம் எழுதிக் கொடுங்கள். இந்த உதவியைத்தான் நான் தங்களிடம் எதிர்பார்க்கிறேன்!"

இதைக் கேட்ட உமேச் சுந்தர் சற்று பயப்பட்டார். ஆகட்டும் என்று சொல்லமுடியாமலும் மாட்டேனென்று சொல்லமுடியாமலும் விழித்தார். அவர் மனதை சாலினி தெரிந்துகொண்டாள்.

"இதில் யோசிக்க வேண்டிய விஷயமேயில்லை. இவையெல்லாம் பொய் ஏற்பாடுகளென்பதை நானும் உங்

களுக்கு எழுதிக் கொடுத்துவிடுகிறேன். இப்படிச் செய்தால் அவர் வழிக்கு வருவாரென்று நான் நினைக்கிறேன். எல்லாப் பணத்தையும் என் கையில் கொடுத்துவிடுவார்!'' என்று உமேச் சந்தருக்கு விஷயத்தை விளக்கினுள்.

"சரி, இரண்டு கடிதங்களையும் 'டைப்' அடியுங்கள்!'' என்ருர் உமேச் சந்தர்.

சாலினி அருகிலிருந்த 'டைப் ரைட்டிங்' மிஷினில் இரண்டு காகிதத்தையும் டைப் அடித்துக் கொண்டாள். இருவரும் அதில் கையெழுத்திட்டனர். சாலினி தன் பொய் உத்திரவுப் பத்திரத்தை எடுத்துக்கொண்டு கிளம்பினுள். உமேச் சந்தர் ஸ்டேஷன் பக்கம் கிளம்பினுர்.

கோபிநாத் சமையல் செய்து முடித்துவிட்டு தன் அறையில் உட்கார்ந்திருந்தான். அசோக் குமார் சிறிய தூக்கமொன்று தூங்கிவிட்டு எழுந்து உட்கார்ந்திருந்தார். அந்த சமயம் சாலினி உள்ளே வந்தாள். அவர் அறை வழியாகத் தன்னறைக்குச் சென்ருள். அவள் அறைக்குச் செல்வதற்கு வேறு வழியாகவும் செல்லலாம். ஆனுல், வேண்டுமென்றேதான் இந்த வழியாக வந்தாள்.

அவள் எங்கே, எதற்காகச் சென்றிருந்தாளென்று அசோக் குமார் கேட்பாரென்று சாலினி நினைத்திருந்தாள். அதற்கு என்ன பதில் சொல்வ தென்பதையும் யோசித்து வைத்திருந்தாள். ஆனுல், அசோக் குமார் ஒன்றுமே பேசவில்லை. இதனுல் அவளுக்கு உள்ளுக்குள் சற்று வெட்கமாயிருந்தது. மீண்டும் அசோக் குமார் படுத்திருக்கும் அறைக்கு வந்தாள்.

"நான் எங்கே போயிருந்தேனென்று உங்களுக்குத் தெரியுமா?''

"தெரியாது! தெரிந்துகொள்ளவும் நான் விரும்பவில்லை!"

"ஆனால், நீங்கள் தெரிந்துகொள்ள விரும்பாவிட்டாலும் அதை நான் சொல்வதுதான் என் கடமை!"

"நீ கடமையை அறிந்து கொண்டிருப்பதைப்பற்றி ரொம்ப சந்தோஷம்!"

"நான் ஓரிடத்தில் உத்யோகத்திற்கு அமர்ந்திருக்கிறேன்!"

"உத்யோகத்தில் அமர்ந்திருக்கிறாயா? எதற்காக?"

"எதற்காகவென்றால், பணத்திற்காகத்தான்! நீங்கள் கொடுக்கப் போகும் பணம் என் செலவிற்குப் போதாது!" இவ்வாறு கூறிக்கொண்டே உமேச் சந்தர் கையெழுத்திட்ட அந்தக் கடிதத்தை அசோக் குமாரிடம் நீட்டினாள். அசோக் குமார் படித்துவிட்டு அவளிடம் திருப்பித்தந்தார்.

"சாலினி! நீ இப்படிப்பட்டவளென்று நான் நினைக்கவில்லை!"

"முன்பு, நீங்கள் செய்த பிரசங்கம் வெறும் வேஷப் பேச்சு என்று நான்கூட நினைக்கவில்லை!"

"மேல்நாட்டு நாகரிகத்தில் மூழ்கி அப்போது நான் பேசினாலுங்கூட, நான் பாரதநாட்டில் பிறந்தவன். பாரதத் தாயின் புனிதமான எண்ணங்களும், உத்தமமான குணங்களும் என் ரத்தத்தில் கலந்தோடுகின்றன. விபரீத நாகரிகத்தை உதறி எறிய நான் விரும்புகிறேன்!"

"வெகுநாட் கழித்துத் தங்கள் உண்மை ஸ்வரூபத்தை வெளிக்காட்டுகிறீர்கள்!"

"அதை நீ எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்! இப்போதும் நான் உனக்கு என்ன சொல்கிறேனென்றால், எப்போது மனிதன் இருப்பதை வைத்துக்கொண்டு சந்தோஷமா யிருக்க முயல்கிறானோ அப்போதுதான் அவனுக்கும் சுகம் ஏற்படுகிறது...!"

"இதெல்லாம் எனக்கு அவசியமில்லை!"

"இன்றில்லாவிட்டால் என்றாவது ஒருநாள் அவசியம் ஏற்பட்டுவிடும்!"

"நல்லது, அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்! எனக்கு நேரமாகிவிட்டது. உமேச் சந்தர் 'க்ளப்' பிற்குச் செல்வதற்கு முன் நான் அங்கு சென்றுவிடவேண்டும்!" என்று கூறிக்கொண்டே சாலினி எழுந்தாள்.

"மிஸ்டர், உமேச் சந்தரின் அந்தரங்க காரியதரிசியிடம் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பணத்தாசை உனக்குப் பிடித்துவிட்டதா? அப்படியானால் பணக்குவியலின் நடுவில் உன்னை வைக்க எனக்குத் தெரியும். ஆனால், அப்போதும் உன் ஆவல் அடங்காது. ஒரு வேசை தன் சரீரத்தை விற்றுத் தங்கமாகச் சேர்க்கிறாள்; பணத்திலேயே புரள்கிறாள். ஆனால், தங்கமாளிகையிலிருக்கும் அவளுக்கு அமைதி, சாந்தி ஏற்படுகிறதா? இல்லை! தன் கடமையை அறிந்து நடப்பதில்தான், ஆறுதல், சாந்தி சுகமெல்லாம் கிடைக்கின்றன. பணத்தினால் இவைகளை விலைக்கு வாங்க முடியாது. பணம் மனிதனை தீய வழிகளில் இழுத்துச் செல்கிறது. ஆதலால், சாலினி! பணத்தினால் கிடைக்காத சாந்தியை அடையாத நீ, பின்னால் வருந்தப் போகிறாய்!"

"சரி! சொல்லி முடித்துவிட்டீர்களா? ரொம்ப சந்தோஷம்!" என்று கரகோஷம் செய்து கொண்டே அவ்

விடத்தை விட்டுக் கிளம்பினுள். 'இது இரண்டாவது பிர சங்கம்!' என்று கூறிக்கொண்டே அவள் காரில் ஏறிக் கொண்டாள். அவ்வார்த்தைகள் அசோக் குமாரின் காதில் ஒலித்துக்கொண்டே யிருந்தன.

# 27

தாரக்நாத் கிராமத்திலிருந்து திரும்பி வந்துவிட்டார். அவர் முகத்தில் வருத்தமோ, அவமானமோ ஒன்றும் காணப்படவில்லை. ஜாதி-விலக்கைப்பற்றி ஏதாவது பேச வந்தால், ஒன்றுமறியாத குழந்தைகளின் காரியத்தைக் கண்டு பெற்றோர்கள் நகைப்பதுபோல், அவர்களின் அறிவீனத்தைக் கண்டு மனதிற்குள் சிரித்துக் கொள்வார்.

தன் கணவர் பிரசன்னமா யிருப்பதைக் கண்டு மாயாவும் சந்தோஷமாயிருப்பது போல் பாவனை செய்தாள்.

"ஊரில் தெரிந்தவர்களை யெல்லாம் பார்த்தீர்களா?" என்று சமையல் செய்து கொண்டே கேட்டாள் மாயா.

"எல்லோரையும் பார்த்தேன். உன்னை அழைத்துக் கொண்டு அங்கேயே வந்துவிடும்படி எல்லோரும் சொன்ஞர்கள். நான் கிராமத்தை விற்பது ஒருவருக்காவது பிடிக்கவில்லை!'' என்ருர் தாரக்நாத். இதற்குப் பிறகு தனக்கு ஞாபகம் வந்த ஒவ்வொருவர் பேராகச் சொல்லி க்ஷேம சமாசாரம் விசாரித்தாள். "அடாடா! இப்போதுதான் ஞாபகம் வந்தது. நம் ஊர் கோபிநாத்

இங்கேதான் இருக்கிறன். நீங்கள் ஊரிலில்லாத போது இரண்டு, மூன்று தடவை இங்கு வந்திருந்தான்......!'' என்றுள் மாயா.

"யார்? கோபி மிஸ்ஸரா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஆம்! அவன் தான்!''

"இங்கு எங்கே யிருக்கிறன்?''

சொல்லுவதா, வேண்டாமா, சொன்னல் சாலினி யின் ஞாபகம் அவரை வருத்தும், சொல்லாவிடில் கோபிநாத் வந்தால் கட்டாயம் எல்லாம் தெரிந்து கொள் ளப் போகிருர் என்றெல்லாம் எண்ணி மாயா குழம்பிக் கொண்டிருந்தாள். இந்த சமயத்தில் யாரோ வரும் காலடிச் சப்தம் கேட்டது. கோபிநாத் உள்ளே வந்தான்.

"கோபி! உனக்கு ஆயிசு நூறு! இப்போதுதான் உன்னைப்பற்றி பேசிக் கொண்டிருந்தோம்!'' என்றுள் மாயா.

"எஜமான் இன்றுதான் வந்தாரா?'' என்று கேட்டுக் கொண்டே தாரக்நாத்தை நமஸ்கரித்தான்.

"ஆமாம்! இன்றுதான் வந்தேன். இப்போது தான் சாப்பிட்டுவிட்டு எழுந்திருக்கிறேன்,'' என்ருர் தாரக்நாத்.

"நீங்களில்லாத போது இரண்டு தடவை இங்கே வந்தேன். முக்ய காரியமாக கிராமத்திற்குச் சென்றிருப் பதாகக் கூறினர்கள். சென்ற காரியம் கைகூடிற்ரு?'' என்ருன் கோபி. முதலில் அவர் ஒன்றும் சொல்ல விரும்ப

வில்லை. ஆனால் கோபிநாத் கேட்டவுடன் அவரால் சொல்லாமலிருக்க முடியவில்லை.

"கிராமம், வீடு, நில புலன்கள் எல்லாவற்றையும் விற்பதற்காகப் போயிருந்தேன். எல்லாவற்றையும் விற்று விட்டேன். மொத்தம் எல்லாம் சேர்ந்து ஐம்பதினயிரம் ரூபாய் வரைக்கும் சேகரித்து விட்டேன்!'' என்றார் தாரக்நாத்.

"அப்படி யென்ன உங்களுக்கு பண முடை ஏற்பட்டு விட்டது?'' என்று அவர் மனதை அறிந்து கொள்வதற் காக கோபிநாத் கேட்டான். பம்பாயில் சம்பாதித்த பணம் குறைந்தது இன்னும் ஐம்பதினயிரமாவது இருக்கு மென்று கோபிநாத்துக்குத் தெரியும்.

"நான் பிராயச்சித்தம் செய்துகொள்ளப் போகி றேன், கோபி! அதற்கு இன்னும் இரண்டு லட்சம் ரூபாய் வேண்டியிருக்கும்!''

"பிராயச்சித்தம் செய்துகொள்ளும்படியாக நீங்கள் என்ன பாபம் செய்தீர்கள், எஜமான்?''

"பாபமா? செய்திருக்கிறேன், கோபி! நல்ல முறை யில் பெண்ணை வளர்க்காமல் மேல் நாட்டுப் படிப்பைக் கொடுத்து அவளை கெடுத்துவிட்டேன், கோபி! அதுவும் ஒரு பாபம் தானே? மற்றவர்களும் என் போல் வறண்ட அந்தப் படிப்பில் மோகங் கொள்ளாமல், நல்ல வழியில் செல்ல, என் அனுபவத்தைக் கொண்டு ஒரு காரியம் செய்யப் போகிறேன்.

ஒருவேளை நீ சாலினியைப் பார்த்திருக்க மாட்டாய். பார்த்திருந்தால் கூட ரொம்ப சிறியவளா யிருந்தி ருப்பாள்!''

கோபிநாத் பதில் சொல்வதற்குள் மாயா, "கோபி இப்போது சாலினியின் வீட்டில்தான் வேலை செய்து கொண்டிருக்கிறுன்!" என்ருள்.

"ஓஹோ! அங்கேதான் வேலை செய்து கொண்டிருக் கிருயா? சாலினி எப்படி யிருக்கிருள்!" என்ருர் தாரக் நாத்.

"இருக்கிருள்!" என்ருன் கோபி. அவன் முகத்தி லிருந்தும் வார்த்தையிலிருந்தும் விஷயத்தைப் புரிந்து கொண்டு விட்டார் தாரக்நாத். "அவள் விஷயம் எனக் குத் தெரியும், கோபி!" என்று வருத்தத்துடன் கூறினர். சற்று நேரத்திற்கெல்லாம் கோபிநாத் எழுந்து சென்று விட்டான். தாரக்நாத் ஏதோ எழுத உட்கார்ந்தார்.

## 28

சிறிது நாட்களில் அசோக் குமாருக்கு உடம்பு சரியாகி விட்டது. அதிகாலையில் உலாவச் செல்வார். பகலில் கொஞ்சம் படிப்பார். மறுபடியும் மாலையில் உலாவச் செல்வார். எப்போதும் தரையை நோக்கிக்கொண்டே செல்வார். வழியில் சந்திக்கும் தெரிந்த மனிதர்கள் 'அவர் விஞ்ஞானி, எந்தத் தத்துவத்தையாவது அல்லது ஏதேனும் வேறு விஷயத்தைப்பற்றியாவது யோசித்துக்கொண்டே செல்கிருர்' என்று எண்ணிக்கொள்வார்கள். உண்மை யில் அவர் மனம் இப்போது விஞ்ஞானத்திலேயே ஈடுபட வில்லை. ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய மனநிம்மதி

யும் அவரிடமில்லை. ஒருநாள் அவர் தன் விஞ்ஞானசாலையில் உட்கார்ந்து கொண்டு மாணவர்களுக்கு 'லெக்சர்' கொடுத்துக் கொண்டிருந்தார். கனமான பொருளை இழக்கும் சக்தியைப் பற்றி அவர் பேசிக்கொண்டிருந்தார். ஆனல், ஏதோ தெரியவில்லை, வழக்கம் போல் 'லெக்சர்' சுவாரசியமாயில்லை. மாணவர்கள் அடிக்கடி கொட்டாவி விடத் தொடங்கினர். அசோக் குமாரின் உடம்பும் ஒரு மாதிரியாயிருந்தது. மணியடிக்க பதினைந்து நிமிஷங்கள் தானிருந்தது. இருந்தாற் போலிருந்து அவர் 'லெக்சர்' வேறுவிதமாக மாறியது. "குறிப்பிட்ட ஓர் இடத்தை அடைவதற்குப் பல (வழி) மார்க்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வழியிலும் புதிது புதிதாக தடங்கல்கள் ஏற்பட்டு விடுகின்றன. எந்தத் தடங்கல்களில் நாம் வெற்றி பெறக் கூடுமோ அந்த வழியே சென்று நம் காரியத்தைச் சாதித்துக் கொள்ளவேண்டும். தற்கால விஞ்ஞான சாஸ்திர முறையிலிருந்து ஐரோப்பியர்கள் ஏதேனும் உண்மையைக் கண்டுபிடித்து வெளியிட விரும்புகிறார்கள். ஆனல், நாம் அந்த உண்மைகளை பாரத நாட்டின் எந்த உபாயத்தைக் கொண்டாவது கண்டுபிடிக்க முடியும். வாகனமொன்றுமில்லாமல் காற்றில் பறக்கும்படியாகத் தங்கள் சரீரத்தை, தங்கள் அறிவின் திறமையால் செய்துகொண்டிருக்கிறார்கள்.

அங்கு 'டெலிவிஷன்' மூலம் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ளவைகள் காணப்படுகின்றன. அதே மாதிரி இங்கும் நாமே தூரதிருஷ்டியைக் காணும்படியான வழிகள் அநேகமிருக்கின்றன. ஐரோப்பா ஒவ்வொரு விஷயத்திற்கும் அநேக இயந்திரங்களை செய்கிறது. பாரதமக்கள் ஒவ்வொன்றிற்கும் இயந்திரங்கள் செய்யாமல் தானே தன் சரீரத்தில் ஒரு சக்தியைப் பரவச் செய்கிறார்கள். வழிகள் வெவ்வேறாயிருந்த போதிலும் லட்

சியம் ஒன்றுதான். நாம் இதுவரை நம் நாகரிகத்தை—சாமர்த்தியத்தை—சக்தியைப் பாழாக்கிக் கொண்டு வந்திருக்கிறோம். பிறரைப் பார்த்து அவர்கள் போகும் வழியே போய்க் கொண்டிருந்தால் நாம் ஒருநாளும் முன்னேற மாட்டோம்!''

வகுப்பில் நிசப்தம் குடிகொண்டிருந்தது. மாறுபட்ட லெக்சரைக் கேட்டு மாணவர்கள் ஆச்சரியப்பட்டனர். ஏன் இந்த விஷயத்தை இம்மாணவர்களிடம் சொல்லி விட்டோமென்று அசோக் குமார்கூட ஆச்சரியப்பட்டார். மீண்டும், "நீங்கனெல்லோரும், டிக்ரிக்காக, வேலைக்காகப் படிக்கிறீர்கள். ஆதலால், இந்த விஷயங்களில் அதிக சிரத்தை வைக்க மாட்டீர்கள்......!'' இன்னும் ஏதோ சொல்ல விரும்பினர். அதற்குள் மணியடித்து விட்டது. மாணவர்கள் ஒவ்வொருவராக எழுந்து சென்றனர்.

## 29

சாலினிக்கு சுதந்திரம் இன்னும் அதிகமாகக் கிடைத்து விட்டது. அசோக் குமாரின் பற்றுதலற்ற தன்மையும் உமேச் சந்தரின் சிநேகமும் சாலினியை வேகமாக அழிவின் பக்கம் இழுத்து சென்று கொண்டிருந்தன. பகலில் உமேச் சந்தரின் வீட்டிலிருப்பாள், இரவு க்ளப்பில்! கடன் ஏறிக்கொண்டே வந்தது. ஜனங்களின் மதிப்பிலிருந்து தான் குறைந்துகொண்டு வருவதை அவள் அறிந்

திருந்தாள். ஆனல், நேரான பாதையொன்றும் அவளுக்குத் தெரியவில்லே.

ஒரு நாள் உமேச் சந்தருக்கு உடம்பு சரியாயில்லே. டாக்டரை அழைத்து வரும்படி ஆள் அனுப்பினர். உடம்பு சரியில்லாமலிருக்கும் உமேச் சந்தரருகில் உட்கார்ந்திருக்க சாலினிக்குப் பிடிக்கவில்லே. சற்று நேரங் கழித்து திரும்பி வந்து விடுவதாகச் சொல்லிவிட்டு வீட்டிற்குச் சென்று விட்டாள். அவள் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் டாக்டர் வந்தார். உமேச் சந்தரின் உடம்பைப் பார்த்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்து மருந்து தயாரிக்க ஆரம்பித்தார்.

"என்ன உடம்பு, டாக்டர்?" என்ருர் உமேச் சந்தர்.

"என்ன உடம்பா? ஒவ்வொரு இரவும் சாலினியுடன் விழித்துக் கொண்டிருந்ததன் பலன் இது. கெட்ட பெயரைத் தவிர அவளால் உனக்கொன்றும் பிரயோசனமில்லே. அனுவசியமாய் அவளுக்காகப் பணம் செலவழிக்கிருய். கடைசியில் உன் உடம்பும் கெட்டுப் போகிறது?"

"அப்படியானல் நான் என்ன செய்வது?"

"என்ன செய்வது? அவளுக்காக எப்போது பணம் செலவழிக்கிருயோ, அப்போது தைரியமாக, 'ப்ரொபஸரை விட்டு விட்டு என்னுடனேயே வந்து இருந்துவிடு,' என்று சொல்லேன்!"

"அவள் கலியாண மானவளாயிற்றே!"

"இப்படி யெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தால் ஒன்றும் லாபமில்லே. ப்ரொபஸர் ஒரு பைசா கூட

உனக்குக் கொடுக்கப் போவதில்லை. இவளிடம் உனக்குக் கொடுக்க ஒன்றுமில்லை! இதற்கெல்லாம் மனோரமா தேவலை. இவ்வளவு அழகாயில்லாவிட்டாலும் தன் சிநேகிதர்களுக்குத் தொந்திரவு கொடுப்பதில்லை!"

"சரி! சொல்லித்தான் பார்க்கிறேன்!"

"அட பைத்தியம், உனக்கு உலகம் தெரியவில்லை. நீ சொன்னவுடன் 'ஆகா' யென்று சொல்லிவிடுவாளா?"

"உண்மையாகவே என்னிடம் அவளுக்குப் பிரியமிருந்தால்......?"

"கலியாணம் செய்து கொண்டவரிடமே பிரியத்தைக் காணோம், நீ எந்த மூலை?"

"இருக்கட்டும்! எனக்கு உடம்பு கொஞ்சம் சரியானவுடன் எல்லா ஏற்பாடும் செய்து விடுகிறேன்!"

"நானயிருந்தால் இப்படி சும்மா உட்கார்ந்திருக்க மாட்டேன்!" என்று கூறி தன் கைப்பெட்டியை எடுத்துக்கொண்டு கிளம்பினர். "சரி! நான் நாளைக்கு மறுபடியும் வந்து பார்க்கிறேன்!" என்று விடை பெற்றுக் கொண்டார்.

"நல்லது!" என்று மெல்லிய குரலில் உமேச் சந்தர் கூறினர்.

ஒரு வியாதிக்கு மருந்து கொடுத்துவிட்டு, இன்னொரு நோயைக் கிளப்பிவிட்டுச் சென்றுவிட்டார் டாக்டர்.

# 30

அசோக் குமார் விஞ்ஞான சாலையில் அமர்ந்து தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவருடன் எம். எஸ். ஸி. வகுப்பு மாணவர்களும் அவ்வறையில் தங்கள் தங்கள் வேலையில் ஈடுபட்டிருந்தனர். சில சமயம் அவர் மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பார். சில சமயம் அவர்கள் இவரை சந்தேகம் கேட்பார்கள். அசோக் குமாரின் மேஜையருகில் ஒரு மாணவன் வந்து, "ஸார்! சரியான முறைப்படிதான் நான் ஒன்றை சோதனை செய்தேன். ஆனால், அதில் வரவேண்டிய விடை எனக்குக் கிடைக்கவில்லை!" என்றான். "கட்டாயம் அதில் தவறு ஏதேனுமிருக்கும். இல்லாவிடில் சரியாக வராமலிருக்காது!" என்று அவனைப் பார்த்துக்கொண்டே சொன்னார். "கொஞ்சம் நீங்கள் வந்து பாருங்கள். எனக்கு அதில் பிழையொன்றும் தெரியவில்லை!" என்றான் அம்மாணவன். "சரி! வந்து பார்க்கிறேன்!" என்று கூறிக்கொண்டு அவன் மேஜை யருகில் சென்றார். இரு கைகளையும் கன்னத்தில் வைத்துக்கொண்டு மேஜையில் சாய்ந்தவாறே அதை உற்றுக் கவனிக்கத் தொடங்கினார். அதைப் பார்த்துக்கொண்டே, "எவ்வளவு நேரமாக இந்த திராவகத்தை சூடாக்கிக் கொண்டிருக்கிறாய்?" என்றார். "இருபது நிமிஷங்களிருக்கலாம்!" என்றான் மாணவன்.

"அப்படியானல்......!" இப்படி அசோக் குமார் பேச ஆரம்பிக்கு முன் திராவகம் வைத்திருந்த பாத்திரம் படாரென்று வெடித்தது! எல்லா மாணவர்களும் ஓடி வந்தனர். ப்ரொபஸரை இரண்டு மாணவர்கள் தூக்கி சாய்வு நாற்காலியில் படுக்க வைத்தனர். அவர் முகத்திலும் உடையிலும் திராவகம் வாரித் தெளித்திருந்தது. அவர் கண்களில் திராவகம் பட்டிருக்காமலிருக்க வேண்டுமேயென்று எல்லா மாணவர்களும் பயந்து கொண்டிருந்தனர்.

இந்த சமாசாரம் கொஞ்ச நேரத்திற் கெல்லாம் காலேஜ் முழுதும் பரவிவிட்டது. மற்ற ப்ரொபஸர்கள், பிரின்ஸ்பால் எல்லோரும் வந்துவிட்டனர். வெளியே மாணவர்கள் ஒரே கூட்டமாகக் கூடியிருந்தனர். ஒரு ப்ரொபஸர் கைநாடியைப் பார்த்தார். இன்னொருவர் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகச் சொன்னர். மற்ருெருவர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படியாகக் கூறினர். சற்று நேரத்திற்கெல்லாம் அசோக் குமார் கண் விழித்துப் பார்த்தார்.

"ஹலோ, மிஸ்டர் அசோக் குமார்! உடம்பு எப்படியிருக்கிறது?" என்று பிரின்ஸ்பால் கேட்டார்.

"எரிச்சல் ரொம்ப ஜாஸ்தியாயிருக்கிறது. நல்ல வேளே! கண்களில் படவில்லை!" என்ருர் அசோக் குமார்.

"முகத்தில் ஏற்பட்டிருக்கும் வடுக்கள் மறையுமா?" என்று வேதனையுடன் ஒரு ப்ரொபஸர் கேட்டார்.

"அவர் பிழைத்ததே நாங்கள் செய்த புண்ணியந்தான்!" என்று மாணவர்களில் ஒருவன் கூறினன்.

"உங்கள் மனைவிக்கு சொல்லி அனுப்பட்டுமா?" என்று கேட்டார் பிரின்ஸ்பால்,

"வேண்டாம்! என்னை ஆஸ்பத்திரியில் கொண்டு விட்டு விடுங்கள்!" என்றார் அசோக் குமார். காலேஜ் மணியடித்து விட்டது. மற்ற ப்ரொபஸர்களும், மாணவர்களும் அவ்விடத்தைவிட்டு செல்ல ஆரம்பித்தனர். பிரின்ஸ்பால் அசோக் குமாரை தன் காரில் ஏற்றிக்கொண்டு சர்க்கார் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். டாக்டர்கள் அவரை பரிட்சை செய்து பார்த்தனர். கூடியசீக்கிரம் ரணங்கள் ஆறிவிடுமென்றும், கவலைக்கு இடமில்லையென்றும் எல்லா டாக்டர்களும் ஒருமுகமாகக் கூறினார்கள். ஆஸ்பத்திரியில் ஓர் அறையில் அசோக் குமாரைப் படுக்கவைத்தனர்.

சாயந்திர நேரம். பகலில் வெய்யிலினால் வறுபட்ட ஜனங்கள் வெளிக்கிளம்பினர். மெல்லிய உடை தரித்துக் கொண்டு ஸ்திரீகள் சமுத்திரக் கரையை நோக்கி சென்று கொண்டிருந்தனர். 'மலபார் க்ளப்'பில் மெம்பர்கள் வர ஆரம்பித்தனர். சாலினியும், உமேச் சந்தரும் நந்தவனத்தில் உலவிக் கொண்டிருந்தனர். இந்த சமயத்தில் டாக்டர் காரில் வந்தார். இவர்களைக் கண்டதும் காரை நிறுத்திக் கொண்டு அதில் உட்கார்ந்தபடியே, "மிஸ்ஸஸ், குமார்! நீங்கள் கேள்விப்பட்டீர்களா?" என்று கேட்டார்.

"என்ன விஷயம்? எதைக் கேட்கிறீர்கள்?" என்றாள் சாலினி.

"உங்களுக்கொன்றும் தெரியாதா? அக்னிதிராவகம் பட்டு அசோக் குமாரின் முகமெல்லாம் வெந்துபோய் விட்டது. நல்ல வேளை! கண்களில் படவில்லை!"

"ஓஹோ! எனக்குத் தெரியாது. அவர் எங்கேயிருக்கிறார்? முகத்தில் ஏற்படும் வடு இனிமேல் மறையாதே?"

"மறையாதென்றுதான் நினைக்கிறேன்!" என்று கூறிவிட்டு மோட்டாரை ஓட்டிக்கொண்டு சென்றார்.

"உமேச் சந்தர்! நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று சொல்லிக்கொண்டே தன் காரில் ஏறிக்கொண்டாள். உமேச் சந்தர் மெதுவாக, "என்ன சாலினி தேவி! இப்போது நீங்கள் அசோக் குமாரை நேசிக்க முடியுமா?" என்ருர்.

"இப்போது தஇள சீக்கிரமே தளர்ந்துவிடும்; மிஸ்டர் உமேச்!" என்று கூறிவிட்டு ஆஸ்பத்திரியை நோக்கி காரைச் செலுத்தினுள்.

## 31

அசோக் குமாரின் முகத்தில் மருந்து போடப்பட்டிருந்தது. கோபிநாத் அவர் அருகில் உட்கார்ந்து விசிறிக்கொண்டிருந்தான். இன்னும் எரிச்சல் குறையவில்லை. இருந்தபோதிலும் அவருக்கு அவ்வளவு கஷ்டமாயில்லை. சாலினிக்கு இவ்விஷயம் தெரியாதா, தெரிந்துதான் வராமலிருக்கிருளா என்ற எண்ணம் அவரை வருத்தியது.

மனதிலிருந்ததை அடக்கமுடியாமல், "கோபிநாத்! சாலினிக்கு இவ்விஷயம் தெரியாதா?" என்று கேட்டார்.

"ஒருவேளை தெரிந்திருக்காது எஜமான்! ஏனென்ருல் எனக்கு இந்த செய்தி வந்தபோது எஜமானியம்மாள் 'க்ளப்'பிற்குச் சென்றுவிட்டார்கள்! சமாசாரம் தெரிந்ததும் கட்டாயம் வருவார்கள்!" என்ருன் கோபிநாத்,

"அவள் வரவே வேண்டாம்! முகத்தில்தான் எரிச்சல் ஏற்பட்டிருக்கிறது. அவள் வந்தால் மனதிலும் எரிச்சலைக் கிளப்பிவிடுவாள்!'' என்றார் அசோக் குமார்.

இதற்குள் சாலினி அவ்வறையில் நுழைந்தாள். அவள் முகத்தில் வேதனைக் குறியொன்றும் காணப்படவில்லை. அனுதாபமான வார்த்தைகளொன்றும் அவளிடமிருந்து கிளம்பவில்லை. கோபிநாத் அங்கிருந்து உதவி செய்வதுகூட அவளுக்குப் பிடிக்கவில்லை. அவரிடம் பேசு முன் கோபிநாத்தை வெளியே அனுப்பிவிட வேண்டுமென்று, "கோபி! கொஞ்சம் என் காரை சுத்தம் செய்!'' என்றாள். கோபிநாத் அசோக் குமாரைப் பார்த்தான். அவர் இவனைப் பார்த்தார். ஆனால் அவர் ஒன்றும் சொல்லாமலிருக்கவே அவ்விடத்தை விட்டுச் சென்றான். சாலினி பேச ஆரம்பித்தாள். "தங்களுக்குத் திராவகம் பட்டுவிட்டதைப்பற்றி இப்போதுதான் 'க்ளப்'பில் டாக்டர் சொன்னார்!'' என்றாள்.

"ஆமாம்! திராவகம் பட்டுவிட்டது. ஆனால், கெடுதலொன்றும் ஏற்பட்டுவிடவில்லை. கண்களில் படாமலிருந்ததற்குச் சந்தோஷப்படவேண்டும்!''

"முகமெல்லாம் விகாரமாகி விட்டது! ரூபம் குரூபமாகி விட்டது. ஆனால், உங்களுக்குக் கெடுதலொன்றும் ஏற்பட்டு விட்டதாகத் தெரியவில்லை!''

"பூர்வ ஜன்ம பாபத்தின் பலன் இது; கோபிநாத் இப்படித்தான் சொல்கிறான்!'' என்று இந்த விஷயங்களில் மிகவும் நம்பிக்கையுடையவரைப்போல் கூறினார் அசோக் குமார்.

"பூர்வ ஜன்ம பாபத்தின் பலனில்லை, இந்த ஜன்மத்தின் பாபங்களுக்காக கடவுளால் அளிக்கப்பட்ட தண்டனை!''

இப்படி சாலினி சொல்லிவிட்டாளே யொழிய அவள் வார்த்தையிலிருக்கும் விஷத்தை கொஞ்சமும் கவனிக்க வில்லை.

"என்ன பாபத்திற்காக இந்த தண்டனை?"

"தாங்கள் என் மனதை புண்படுத்தினீர்கள். கடவுள் உங்கள் முகத்தை புண்படுத்திவிட்டார்!" என்றுள் சாலினி. இதைக் கேட்ட அசோக் குமாருக்கு அவளைப் பார்க்கவும் பிடிக்கவில்லை. அவள் கல் நெஞ்சைக் கண்டு வியந்தார்.

"என் கஷ்டசமயத்தில் உனக்கு என்மீது இவ்வளவு தானு அனுதாபம்? என் தண்டனையைக் கண்டு சந்தோஷப்படுவதுதான் உன் பெண் தன்மைக்கழகா?" என்றுர் அவர்.

"மாதம் முந்நூறு ரூபாய் சம்பளத்திலிருக்கும் அடியாளிடம் இன்னும் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?" என்றுள் சாலினி.

அசோக் குமார் இதற்குப் பதில் சொல்ல வாயெடுத்தார். அதற்குள் கோபிநாத் உள்ளே வந்துவிட்டான். அவனெதிரில் இந்தமாதிரி சம்பாஷணையை நடத்த அவருக்குப் பிடிக்கவில்லை.

"என், கோபிநாத்! காரை சுத்தம் செய்து விட்டாயா?" என்றுள் சாலினி. "செய்து விட்டேனம்மா!" என்றுன் கோபிநாத். "சரி! நான் சென்று வருகிறேன்!" என்று கூறிவிட்டு அவள் சென்றுவிட்டாள். அசோக் குமாரின் மனதில் புயல் வீசிக் கொண்டிருந்தது. அவர் முகபாவத்திலிருந்தே சாலினியின் வார்த்தையினுல் அவர் மனம் பாதிக்கப்பட்டிருக்கிறதென்று கோபிநாத் அறிந்து கொண்டான்.

# 32

**வ**லி நீங்கியதும் அசோக் குமார் ஆஸ்பத்திரியை விட்டு வீட்டிற்குவந்துவிட்டார். முதல்நாள் அவரைப் பார்த்து விட்டுப் போனபிறகு சாலினி அவரை மறுபடியும் பார்க்கவே செல்லவில்லை. நான்காவதுநாள் மாலை அவர் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு வந்தார். அவர் முகத்தில் வடுக்கள் நிறைய காணப்பட்டன. அவருக்கு நேர்ந்த இந்த ஆபத்தை பத்திரிகைகளி லெல்லாம் பிரசுரித்திருந்தது. அனுதாபச் செய்திகள் வந்து குவிந்தன.

இங்கு உமேச் சந்தர் சாலினியை நாலு விதத்திலும் தொந்திரவு செய்ய ஆரம்பித்தார். ஒருசமயம், தான் காருக்காக கொடுத்தப் பணத்தைக் கொடுக்கும்படிச் சொல்வார். இன்னொரு சமயம் வடுக்கள் நிறைந்த அசோக் குமாரின் முகத்தைக் குறித்து நையாண்டி செய்வார். அசோக் குமாரை விவாகரத்து செய்துவிட்டு தன்னுடன் வந்திருப்பதாகச் சொல்லிவிட்டால் கடன் கொடுத்த பணத்தைக் கேட்கவில்லை யென்று பயமுறுத்தினர்.

இன்னும் பதினைந்து தினங்களுக்குள் ரத்து செய்து விடுவதாக சாலினி அவருக்கு வாக்குறுதி கொடுத்தாள். அதன் பேரில்தான் அவர் அவளைச் சற்று நிம்மதியாயிருக்கும்படி விட்டார்.

அன்றுமாலை சாலினி வீட்டிற்கு வந்ததும் அசோக் குமார் ஆஸ்பத்திரியிலிருந்து வந்துவிட்டதை அறிந்தாள். தனக்கு அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்குப் பதில் எழுதிக்கொண்டிருந்தார் அசோக் குமார். "ஓஹோ! உடம்பு சொஸ்தமாகி வீட்டிற்கு வந்துவிட்டீர்களா?" என்றாள் சாலினி.

"ஆம்! தொந்திரவு கொடுக்க வந்துவிட்டேன். இவ்வளவு சீக்கிரம் 'க்ளப்'பிலிருந்து வருவதற்கு என்ன காரணம்?"

"காரணம் எதிரிலேயே காணப்படுகிறது!"

"எனக்குத் தெரியவில்லையே!"

"இதோ, தெரியப்படுத்துகிறேன்," என்று கூறிக் கொண்டே உள்ளே சென்று ஒரு கண்ணாடியைக் கொண்டு வந்தாள்.

"இதன் மூலம் காரணம் விளங்கும்!" என்று சொல்லிக் கொண்டே கண்ணாடியை அவர் கையில் கொடுத்தாள். அவர் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது சாலினி மீண்டும் சொல்லத் தொடங்கினாள். "வெகு நாட்களுக்குப் பிறகு உங்கள் உண்மை ஸ்வரூபம் வெளிவந்திருக்கிறது. உங்கள் இதயத்தைப் போலவே உங்கள் முகமும் மாறிவிட்டது. இப்படிப்பட்ட உங்களை நான் நேசிக்க முடியுமா? உங்களைப் பார்ப்பவர்கள் 'இவள் எதைக் கண்டு இவரை விவாகம் செய்து கொண்டா'ளென்று என்னைக் காரி உமிழ்வார்கள். உங்களிடம் எனக்குக் கொஞ்சங்கூட பிரியமேயில்லை!" என்றாள். அவள் பேச்சை அதிகமாக அசோக்குமார் லட்சியம் செய்யவில்லை. இந்த மாதிரி

அவள் பேசிப்பேசி அவருக்குப் பழக்கமாகிப் போய்விட்டது. இருந்தும் அவர் மனதிற்குள் கொஞ்சம் வருத்தப்பட்டுக் கொண்டார். ஒரு கடிதத்தைப் படித்துக்கொண்டே "முகம் விகாரப் பட்டுப் போனாலும், நீ கலியாணம் செய்து கொண்டபோது இருந்த மாதிரிதானே இப்போதும் இதயம் இருக்கிறது. அதை நேசியேன்!'' என்றார். அவள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு மௌனமாயிருக்க அவருக்குப் பிடிக்கவில்லை.

"அப்படியே நான் பிரியமாயிருக்க முயன்றாலும் நான் நாலு பேருடன் பழகுகிறவள். உங்களைப்போல் ஓர் அறையிலேயே உட்கார்ந்து கொண்டிருக்க என்னால் முடியாது. என் சிநேகிதர்களுக்கு உங்களை அறிமுகப் படுத்துவதென்றால் எனக்கு ரொம்ப அவமானமாயிருக்கிறது. என் சிநேகிதர்கள் மத்தியில் நான் பெருமையாயிருக்க ஆசைப்படுகிறேன். ஆனால், எனக்கு உங்களால் பெருமை ஏது?''

"அப்டியானால், நான் ஒன்றிற்கும் பிரயோசனமில்லை என்பது உன் அபிப்பிராயமாகும்!''

"சந்தேகமென்ன? பத்தாயிரம் பவுன் உங்களிடமில்லாவிட்டால் நீங்கள் எதற்குப் பிரயோசனம்?''

"அப்படிச் சொல்! உனக்குப் பணம்தான் பிரதானம்! இப்பொழுது நான் எல்லாப் பணத்தையும் உன்னிடம் கொடுத்துவிட்டால் என் முகம் அழகாய்விடும், என் இதயம் கருணை நிரம்பியதாய்விடும்; என்னால் உனக்குப் பெருமையும் ஏற்பட்டுவிடும். உன் குணந்தான் என்ன கொடூரமானது! இந்த அழகிய சரீரத்திற்குள் ஆலகால விஷம் நிறைந்திருக்கிற தென்று நான் நினைக்கவில்லை; சாலினி!

உன்னைக் கலியாணம் செய்துகொண்டதே தவறு. அந்தத் தவறைச் செய்து விட்டு ஜன்மம் முழுவதும் அவதிப்பட வேண்டியதுதான்!"

"ஏன்! அந்தத் தவறை விவாகரத்தின் மூலம் திருத்திக் கொள்ளலாம்!" என்று மெல்ல தன் மனதிலிருந்ததை வெளியிட்டாள் சாலினி.

"விவாகரத்து செய்வது எனக்கு அவமானமாகத் தோன்றியது. இல்லாவிடில், எத்தனையோ தினங்களுக்கு முன்பே அதைச் செய்திருப்பேன். இப்பொழுது நீ சொல்ல வேண்டிய அவசியங்கூட ஏற்பட்டிருக்காது! தெரிந்ததா!"

"அதில் அவமானமென்ன? ஒருவருக்கொருவர் பிடிக்காவிட்டால் ரத்து செய்து கொள்வதில் என்ன தவறு? நான் சொல்லிவிடுகிறேன்: இன்னும் பதினைந்து தினங்களுக்குள் பணவிஷயத்தில் எனக்கு சம உரிமை கொடுக்காவிட்டால் நான் விவாக ரத்து செய்துவிடப் போகிறேன்!"

"சாலினி! நீ மேல்நாட்டு நாகரிகத்தில் மூழ்கி அழிந்து போகிறாய்! இந்த விபரீத குணங்கள் உனக்கு எங்கிருந்து தான் வந்ததோ; எனக்குத் தெரியவில்லை!"

உயர்ந்த லட்சியங்கள் கொண்ட பாரத நாட்டில் பிறந்த நீ படுகுழியில் விழுந்துகொண்டிருக்கிறாய். உன் நடவடிக்கைகளைக் கவனித்தால் மனிதனுக்கு வெறுப்புத் தான் ஏற்படும்!" என்று அசோக்குமார் ஆத்திரத்துடன் கூறினார். கோபத்தால் அவர் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.

"என்னிடம் ஒருவருக்கும் வெறுப்பு ஏற்படாது. உங்களிடம்தான் வெறுப்பு ஏற்படும். ஒரு விஷயத்திலல்ல,

ஆயிரம் விஷயத்தில்!'' என்று சொல்லிக்கொண்டே அவ்விடத்தை விட்டு சாலினி வெளியே சென்ருள். அசோக்குமார் மனதிற்குள் யோசிக்கத் தொடங்கினர். "பண விஷயத்தில் சம உரிமை கொடு, இல்லாவிடில் விவாகத்தை ரத்து செய்துவிடு. இவையெல்லாம் பத்திரிகையில் பிரசுரமாகும். இதனுல் அவமானம், அதை சகித்துக்கொள்ள வேண்டும். அல்லது, பணத்தை யெல்லாம் அவளிடம் கொடுத்துவிட வேண்டும். அவள் ஆட்டத்திற்கு ஈடுபட வேண்டும். தினம் வீட்டில் அமர்க்களமாய்த்தானிருக்கும்! ஆனல், இப்படி யெல்லாம் ஏன் செய்யவேண்டும்? மனிதனுக்கு என்றும் சாவு உண்டு. அதனுல், என்ருே ஒருநாள் இறக்கப்போகிற நாம் இன்றே உயிர் துறந்தாலென்ன? இந்தத் தொல்லைகளிலிருந்து விடுதலையடையலாம்!''

பிறகு மனதில் ஒரு விதமாக தீர்மானித்துக்கொண்டு காகிதங்களை யெல்லாம் ஓரிடத்தில் வைத்துவிட்டு ஏதோ எழுதத் தொடங்கினர். எழுதி முடித்ததும் அதைத் தன் தலைகணிக்கடியில் வைத்துவிட்டு காரில் ஏறிக்கொண்டு எங்கோ புறப்பட்டார்.

## 33

அன்று பௌர்ணமி. பால்போல் நிலவு பொழிந்துகொண்டிருந்தது. சந்திரனின் குளிர்ந்த கிரணங்கள் பட்டு கடல் அலைகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. இந்த சமயத்தில் அசோக் குமார் காரை வீதியில் நிறுத்திவிட்டு ஜன நடமாட்டமில்லாத, மின்சார தீபங்களில்லாத

வழியாகச் சென்று சமுத்திரக் கரையை அடைந்தார். நில வொளியில் அவ்விடம் மிக்க ரமணீயமாகக் காணப்பட்டது. எங்கிருந்தோ காற்றில் சுகந்தம் மிதந்து வந்தது. இந்தக் காட்சியில் லயித்திருந்த அசோக்குமார் தன் முடிவை நாடி இங்கு வந்திருக்கிறோமென்பதையே மறந்துவிட்டார். திடீரென்று அவருக்குத் தன் நிலைமை ஞாபகம் வந்தது. "நான் இயற்கை யழகைக் கண்டு களிப்பதற்கா இங்கு வந்தேன், இல்லை; என் உயிரை மாய்த்துக் கொள்ளவே இங்கு வந்திருக்கிறேன்!"

இவ்வாறு யோசித்துக் கொண்டே மேலே நோக்கினார். ஒருவேளை கடவுளை தியானித்தாரோ, என்னவோ! மீண்டும் கடலை நோக்கினார். அலைகள் கரையில் வந்து மோதிக் கொண்டிருந்தன. ஆழமான சமுத்திரத்தில் விழ வந்த அவர் சிந்தனை சமுத்திரத்தில் விழுந்து விட்டார். தன் மனதிற்குள்ளேயே சொல்லிக் கொள்ள ஆரம்பித்தார். "சாலினி! இந்த சந்திரனைப் போல் உன் கணவனும் அழகாயிருக்க வேண்டுமென்று நீ விரும்புகிறாய்! ஆனால், சந்திரனுள் காணும் களங்கம் உன் கண்களுக்குத் தெரியவில்லை. என் வடுக்கள் நிறைந்த முகத்தைக் கண்டு நீ வெறுக்கிறாய். ஆனால், என் இதயத்தின் தன்மையை நீ அறிந்து கொள்ளவில்லை! ஹே, சந்திரனே! நீ உண்மையிலேயே அழகாய்த்தான் இருக்கிறாய்! இப் பெருங் கடலில் கொந்தளிப்பை உண்டாக்குவதற்குரிய சக்தி உன்னிட மிருக்கிறது. உன் அழகில் கொஞ்சம் நானும் அடைய விரும்புகிறேன். என்னையும் உன்னைப்போல் கவர்ச்சிகரமானவனாக உன்னால் செய்ய முடியாதா? உன் அழகைப் பெற உன்னிடம் நான் யாசிக்கிறேன். என்னிடம் என்ன மாறுதல் ஏற்பட்டு விட்டது! இந்த அர்த்த ராத்திரியில் உயிர் துறக்க வந்தவன் ஏதேதோ யோசித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேனே!

ஆனால், நான் என் தற்கொலை செய்து கொள்ளவேண்டும்! ஒரு ஸ்திரீ தன்னை நேசிக்க வில்லை யென்பதற்காக உயிர் விடுவதா? ஓர் அல்ப விஷயத்திற்காக உயிர் விட மனித ஜென்மம் அவ்வளவு மலிவானதா? மடத்தனமாக நடந்து கொள்ளும் ஒரு பெண்ணின் தொந்திரவிற்காக தன்னையே பலி யிட்டுக்கொள்வதா? தற்கொலை செய்து கொள்வது கோழைத்தனம், முட்டாள்தனம்! எனக்கு கைகளிருக்கின்றன, ஆண்டவன் அறிவைக் கொடுத்திருக்கிறான். விஞ்ஞான சாஸ்திரத்துடன் யுத்தம் செய்துகொண்டிருக்கிறேன். ஆராய்ச்சியின் மூலம் சந்திரனின் கவர்ச்சியை இழக்க கண்டு பிடிக்கப் போகிறேன்! ஆனால் சந்திரனிலிருந்து அழகைக் கவர முடியுமா? "சற்றுநேரம் சிந்தனை செய்தார். சிறிது நேரத்திற்கெல்லாம்! ஏன் முடியாது! முயற்சி செய்து தான் பார்க்கலாமே!" என்று கூறிக் கொண்டே மோட்டாரை நோக்கிச்சென்றார். "கட்டாயம் அதிலிருந்து சக்தியை இழுத்துவிடலாம்!" என்று தன்னையுமறியாமல் வாய்விட்டுக் கூறிக்கொண்டே காரில் ஏறிக் கொண்டார். அரைத் தூக்கத்திலெழுந்த நந்தவனக் காவல் காரன் அசோக்குமாரின் கடைசி வார்த்தையைக் கேட்டு, "யாரடா அது? யாரை இழுத்துவிடலாம்!" என்று கூவினான். அவன் சப்தத்தின் எதிரொலியைத் தவிர வேறொன்றும் அவனுக்குக் கிடைக்கவில்லை.

# 34

சமுத்திரக்கரையிலிருந்து அசோக் குமார் நேராக தன் பங்களாவை அடைந்தார். தலைகணிக்கடியில் முன்பு வைத்துவிட்டுப்போன கடிதத்தை எடுத்து ஒருமுறை படித்தார். பிறகு அதைக்கிழித்தெறிந்தார். மணி மூன்று தானிருக்கும். சாலினி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். கோபிநாத்தின் அறையிலிருந்து சப்தம் ஒன்றும் வரவில்லை. அவனும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பான் போலிருக்கிறது! அசோக் குமார் தூங்க முயன்றார். ஆனால், தூக்கம் அவரை நெருங்கவேயில்லை. தான் செய்யப் போகும் புது ஆராய்ச்சியைப் பற்றியே அவர் மனம் சிந்தித்துக்கொண்டிருந்தது. சந்திரனின் வசீகர சக்தியை ஆகர்ஷிப்பதெப்படி யென்ற யோசனை அவரைத் தூங்க வொட்டாமற் செய்தது. சட்டென்று படுக்கையை விட்டெழுந்து, உடை தரித்துக்கொண்டு கோபிநாத்தின் அறையை நோக்கிச் சென்றார்.

தூங்கிக்கொண்டிருந்த கோபிநாத் அசோக் குமாரின் குரல் கேட்டு விழித்தெழுந்தான். ஒரு முறை ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரங்களையும், சந்திரனையும் பார்த்துவிட்டு அசோக் குமாரை நோக்கினன். கோபிநாத் படுக்கையை விட்டெழுந்து கொண்டே, “இப்பொழுது மணி நான்குதானே இருக்கும், எஜமான்! நீங்கள் இரவு பூராவும் தூங்கவில்லையா?” என்றான்.

"ஆம்; கோபிநாத்! நான் இன்று கொஞ்சங்கூட தூங்கவில்லை! ஆனால், நான் விழித்துக்கொண்டிருப்பதற்குப் பலன் இல்லாமற் போகவில்லை. இன்றிலிருந்து புதிய ஆராய்ச்சியொன்று தொடங்கப் போகிறேன். பிறர் அதைப்பற்றி கற்பனைகூடச் செய்திருக்க மாட்டார்கள். ஆதலால் சில விஷயங்களை உன்னிடம் சொல்லவேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் இப்பொழுது இங்கு வந்தேன்!"

"என்ன விஷயங்கள், எஜமான்!"

"ஒரு வேளை வேலை மிகுதியால் கொஞ்சநாள் வீட்டிற்கு வர முடியாமலிருந்தாலுமிருக்கும். இரவும், பகலும் விஞ்ஞான சாலையிலேயே இருப்பேன். அதனால் சாப்பாட்டை அங்கு கொண்டு வந்துவிடு. இன்னும் ஒரு விஷயமிருக்கிறது......!" என்று கூறிவிட்டு சற்றுத் தயங்கினார். கோபிநாத்திடம் அதைச் சொல்வதா, வேண்டாமாவென்று யோசித்தார். அதற்குள் கோபிநாத் "அதென்ன, எஜமான்?" என்று கேட்டுவிட்டான்.

"ஒன்றுமில்லை! இதையெல்லாம் சாலினியிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவளாகக் கேட்டால் ஏதோ ஆராய்ச்சி செய்கிறாரென்று சொன்னால் போதுமானது!"

"நல்லது அப்படியே சொல்கிறேன். நீங்கள் பல் விளக்கிவிட்டு வாருங்கள். நான் அதற்குள் டீ தயாரித்து வைக்கிறேன்!"

"இப்பொழுது அதற்கெல்லாம் நேரமில்லை, கோபிநாத்! என்முன் ஒரு பெரிய பரிட்சை இருக்கிறது. அதில் வெற்றி கிடைக்கும் வரை எனக்கு நிம்மதியேயிராது!" இவ்வாறு கூறிக்கொண்டே அவ்விடத்தைவிட்டுக் கிளம்

பினர். அவர் பேச்சைக் கேட்ட கோபிநாத் மிக்க கவலை யுடன், "ஓய்வெடுத்துக் கொள்ளும்படி டாக்டர்கள் ஆயிரம் முறை சொல்லிவிட்டார்கள். நீங்கள் ஒன்றையும் கவனிக்கமாட்டேனென்கிறீர்கள்!" என்றான்.

"ஓய்வா! வாழ்க்கையில் ஓய்வேதற்கு? உழைப்பே ஜீவனின் ஆதாரம். ஓய்வு, வாழ்வு இவ்விரண்டும் தனித் தனி விஷயங்கள்!" என்று கூறிவிட்டு அசோக் குமார் சென்றுவிட்டார். அவர் சென்ற பிறகு கோபிநாத் அவ் வறையைப் பெருக்க ஆரம்பித்தான். ஆனால் அவன் செவி களில் அசோக் குமாரின் வார்த்தைகளே ஒலித்துக்கொண் டிருந்தன. அவருடைய கபடமற்ற தன்மையும், இனிமை யான வார்த்தைகளும் அவனைக் கவர்ந்தன. ஒரு பக்த னுக்கு எப்படி பகவானை அர்ச்சிப்பதில் சாந்தியும், சுக மும் ஏற்படுகிறதோ அதேபோல் அசோக் குமாருக்கு சேவை செய்யும் கோபிநாத்துக்கும் இந்த பணிவிடைகள் மூலம் சாந்தியும், சுகமும் ஏற்பட்டிருந்தது. அவன் பெருக் கிக் கொண்டே இவ்வாறு யோசித்துக் கொண்டிருந்தான். "நம் எஜமான் எவ்வளவு நல்லவர்! எவ்வளவு சம்பாதிக் கிறார்? அயல் தேசங்களிலிருந்து பை, பையாகப் பணம் வந்துகொண்டிருக்கிறது! ஆனால், அவர் எதையாவது லட்சியம் செய்கிறாரா? உலகத்தில் எல்லோரும் அவரைக் கொண்டாடுகிறார்கள். அப்படியிருந்தும், அவர் எவ்வளவு அடக்கமாயிருக்கிறார்! அவர் பணக்காரர்; ஆனால், பண ஆசையே அவரிடமில்லை. அவர் ஞானவான்; ஆனால், அறிவாளியென்கிற அகங்காரம் அவரிடமில்லை. தேவனைப் போன்றவர். மற்ற படித்த பெரிய மனிதர்களைப் போன்ற வரல்ல! இந்த சந்தோஷத்தையெல்லாம் பார்க்கும்படி கடவுள் பெரிய எஜமானை உயிருடன் வைக்கவில்லை!"

# 35

**கோ**வில் மணி 'கண கண'வென்று ஒலித்துக்கொண்டிருந்தது. ஜனங்கள் அவசர அவசரமாக கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தனர். இந்த சமயம் அசோக் குமார் காலேஜ் பிரின்ஸ்பால் பங்களாவில் உட்கார்ந்திருந்தார். ஏதோ ஒரு காரணத்தைக் கொண்டுதான் அவர் இங்கு வந்திருந்தார். ஆனல், அவர் மனம் சந்திர லோகத்தையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. இதற்குள் பிரின்ஸ்பால் அவ்விடம் வந்தார்.

"என்ன, மிஸ்டர், அசோக் குமார்! இன்று என்ன இவ்வளவு சீக்கிரம் இங்கு தவறி வந்து விட்டீர்கள்?" என்று புன்முறுவலுடன் அசோக் குமாரை வரவேற்ருர்.

"புதிதாக ஆராய்ச்சியொன்று தொடங்கப் போகிறேன். அதற்கு எனக்கு நிறைய அவகாசம் வேண்டும். காலேஜில் பாடமும் சொல்லிக் கொடுத்துக்கொண்டு அதையும் செய்ய என்னல் முடியாது. அதைத் தங்களிடம் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்!" என்ருர் அசோக் குமார்.

"அப்படியானல் தாங்கள், தங்கள் ஆராய்ச்சியை வேறு எங்காவது போய் செய்ய விரும்புகிறீர்களா?"

"இல்லை, இல்லை! அதற்குத் தனிமைவேண்டும். காலேஜி லிருந்தால் அந்த வசதி கிடைக்காது. வேறொன்றுமில்லை!"

"காலேஜில் உங்களுக்கு வேண்டிய வசதிகளெல்லாம் செய்து தருகிறேன். அதைப்பற்றி நீங்கள் ஒன்றும் யோசிக்கவேண்டாம். இங்கு நீங்கள் வேலையிலிருக்கும் போது, தங்கள் ஆராய்ச்சியின் பலனை பிற காலேஜுக்கு கொடுக்க, என் விரும்புகிறீர்களென்று எனக்குத் தெரிய வில்லை; மிஸ்டர் அசோக் குமார்!"

"இந்த ஆராய்ச்சியில் ஒருவேளை வெற்றி பெற்றால் அதை நான் வெளியிடப் போவதில்லை. அதனால், அனுவசிய மாக என் சம்பளம் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று யோசிக்கிறேன்!"

"சரி, நல்லது! இது ஒன்றும் பெரிய விஷயமல்ல! இன்றிலிருந்து தங்கள் வேலையை ஆரம்பியுங்கள். அது முடியும்வரை நான் தங்களுக்குப் பதிலாக பாடம் நடத்திக் கொண்டிருக்கிறேன்!"

அசோக் குமார் பிரின்ஸ்பாலுக்கு தன் நன்றியறிதலை தெரிவித்துவிட்டு நேரே விஞ்ஞானசாலையை அடைந்தார். அங்கிருந்த அவசியமான இயந்திரங்களையெல்லாம் எடுத்து பழுது பார்த்தார். பிறகு தலையைக் குனிந்துகொண்டு யோசிக்கத் தொடங்கினார். சந்திரமண்டலம் பூமியிலிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கிறது? அதன் கிரணங்களை எந்த சக்தியைக்கொண்டு ஆகர்ஷிக்கக்கூடும்?

இவ்வாறு ஒவ்வொன்றாக அவர் மனதில் யோசனை ஓடிற்று. ஒரு காகிதத்தில் சில புத்தகங்களின் பெயர்களை எழுதிவிட்டு மணியடித்தார். உடனே காலேஜ் சேவகன் அவ்விடம் வந்தான். இந்தச் சீட்டைக் கொண்டுபோய்

புத்தகாலயத்தில் கொடுத்து அவர்கள் கொடுக்கும் புத்தகத்தை இங்கு கொண்டு வந்துவை!'' என்று அந்த சீட்டைக் கொடுத்துக் கொண்டே சொன்னர்.

மணி பத்து அடித்துவிட்டது. அசோக் குமார் தன் காரில் ஏறிக்கொண்டு 'விக்டோரியா கார்டன்' பக்கம் சென்ருர். இவர் போனதுமே பூந்தோட்டத் தலைவரை எதிரே சந்தித்தார்.

"நீங்கள்தான் மானேஜரா?''

"ஆம்! நான்தான்: மிஸ்டர் அசோக் குமார்!''

"என்னை நீங்கள் அறிந்திருப்பதைக் கண்டு மிக்க சந்தோஷிக்கிறேன். ஒரு காரியமாக உங்களிடம் வந்திருக்கிறேன். கொஞ்சம் அதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும்!''

"உங்களுக்கு உதவி செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன்! உத்திரவு கொடுங்கள்!''

"சந்திர வெளிச்சத்தில் வளரும், மலரும் செடி கொடிகள் எனக்கு இப்பொழுது தேவை. உங்கள் தோட்டத்தில் அவைகள் இருக்கின்றனவா!''

"செடி கொடிகள் வளர்வதற்கு எத்தனையோ சாதனங்கள் வேண்டியிருக்கின்றன. நமக்கு எப்படி சூரிய உஷ்ணம் தேவையாயிருக்கிறதோ அதே போல் அவைகளுக்கும் குளிர்ந்த சந்திர கிரணம் வேண்டியிருக்கிறது. சந்திரனைக் கண்ட மாத்திரத்தில் மலரும் செடிகள் இங்கு எத்தனையோ இருக்கின்றன!''

"அவைகள் பூந்தொட்டிகளில் இருக்கின்றனவா?''

"ஆமாம்! தொட்டிகளில் தான் இருக்கின்றன. உங்களுக்கு அனுப்ப லகுவாயிருக்கும்!"

"தயவு செய்து அத் தொட்டிகளை காலேஜிற்கு அனுப்பிவையுங்கள்! நான் சென்று வருகிறேன்!"

"கட்டாயம் அனுப்பிவைக்கிறேன்!"

மானேஜரிடம் விடைபெற்றுக் கொண்டு அசோக் குமார் சென்றுவிட்டார். தன் வெற்றியில் அவருக்குப் பூரண நம்பிக்கையிருந்தது. பாதிக்குமேல் தன் காரியம் கைகூடி விட்டது போல் அவருக்குத் தோன்றியது. வீட்டிற்கு வந்தார். கோபிநாத் முன் வராந்தாவில் உட்கார்ந்து ஹுக்கா குடித்துக் கொண்டிருந்தான். சாலினியைக் காணவில்லை. அசோக் குமார் உள்ளே சென்று கொண்டே, "எனக்குப் பசியேயில்லை, கோபி! நான் இப்போது சாப்பிடப் போவதில்லை. சாயங்காலங்கூட சாப்பிடுவதற்கு நான் வரமுடியாதென்று நினைக்கிறேன்!" என்றார்.

"உங்களால் முடியா விட்டால் நீங்கள் வரவேண்டாம், எஜமான்! நானே சாப்பாட்டை அங்கு கொண்டு வந்து விடுகிறேன்!" என்று கோபிநாத் அன்புடன் கூறினன்.

"பிரமாதமாக, நான் சாப்பிடப் போகும் சாப்பாட்டிற்கு நீ அத்தனை தூரம் நடந்து வரவேண்டாம். வேண்டுமானல் பக்கத்திலிருக்கும் ஹோட்டலிலிருந்து வரவழைத்துக்கொள்கிறேன்!" என்று கூறினர் அசோக் குமார்.

"நான் இப்பொழுது சமையல் செய்து வைத்திருக்கிறேன். பிடித்தது ஏதாவது கொஞ்சம் சாப்பிடுங்கள்!"

என்று கூறிக்கொண்டே சாப்பாடு எடுத்துவரச் சென்ருன். அவன் வற்புறுத்துதலே அவரால் தட்ட முடியவில்லே. உடைகளே கழற்றிவிட்டு சாப்பிட உட்கார்ந்தார். சாப்பிட்டுக் கொண்டே, "சாலினி எங்கே போயிருக்கிருள்?" என்ருர். "ஒருவேளே தன் தாயாரிடம் பணம் வாங்கி வருவதற்குச் சென்றிருக்கிருர்களோ, என்னவோ!" என்ருன் கோபிநாத்.

"அவளுடைய பெற்ருேர்கள் இங்கேயா இருக்கிருர்கள்? இந்த ஊரை விட்டே போய்விட்டதாகக் கூறிஞளே?"

"அவர்கள் எங்கும் போகவில்லே, எஜமான்! இங்குதான் இருக்கிருர்கள்!"

"என்ன பொய், பார் கோபி! அனுவசியமாக இப்படி யெல்லாம் பேசுவது இந்தப் படிப்பின் லட்சணம் போலிருக்கிறது! பெண்ணுகப் பிறந்தவர்கள் இப்படிக் கூட இருப்பார்களா?"

"இன்னும் எவ்வளவோ பொய்கள் இருக்கின்றனவே, எஜமான்! எத்தனேயோ படித்த பிள்ளேகள், தங்களுடைய படிக்காத கர்நாடகப் பெற்ருேர்களே வேலேக்காரர்களென்று சொல்லிக் கொள்ளுகிருர்கள். இந்தக் காலத்தின் கொடுமை இது!"

"அவர்கள் எங்கே யிருக்கிருர்கள், கோபி?"

"போஸ்டாபீசுக் கருகே பாய் தூனியில் இருக்கிருர்கள். அவர்கள் ரொம்ப நல்ல மனிதர்கள். ரொம்ப நாளாகவே அவர்களே எனக்குத் தெரியும். நான் அவர்களே இங்கு அழைத்து வருகிறேன். நீங்கள் அவர்களேப் பரிச்சயம் செய்துகொள்ளுங்கள்!"

"நானே அவர்களைப் பார்க்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். நீ இங்கு அழைத்துக்கொண்டு வர வேண்டாம். முதலில் நானே போய் அவர்களைப் பார்க்கிறேன்!'' என்றார் அசோக் குமார். அவர் உடனே அவர்களைப் பார்க்க விரும்பவில்லை. இருந்தாலும் கோபிநாத்தின் மனத் திருப்திக்காக அவ்வாறு கூறினர். அசோக் குமாரின் வார்த்தைகள் கோபிநாத்தின் முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்தன.

## 36

தாரக்நாத் தான் மேற்கொண்டிருக்கும் யோசனையை முன்னிட்டு தன் சொத்துக்களையெல்லாம் விற்று ஒருலட்சம் சேர்த்துவிட்டார். இவ்விவரங்களை கேள்வியுற்ற அவர்கள் ஜாதித் தலைவர்களுக்கு பண ஆசை பிடித்துக்கொண்டது. "இவ்வளவு பணமும் நம் ஜாதிக்குள்ளேயே இருக்கும்படிச் செய்யவேண்டும். அதற்கு நாமே ட்ரஸ்டியாயிருந்து பணத்தைக் கையாளவேண்டும்'' என்றெல்லாம் யோசித்தார்கள். பிறகு, எல்லோருமாகச் சேர்ந்து தாரக்நாத் வீட்டிற்குச் செல்லக் கிளம்பினர். ஜாதியைவிட்டு விலக்கியவரின் வீட்டிற்குச் செல்ல ஒருவரும் கூசவில்லை. பணம் அவர்களை அப்படிப் பிடித்திழுத்தது. இவர்களெல்லோரும் வரப்போவதை அறிந்து தாரக்நாத் வரவேற்பதற்கான ஏற்பாடுகள் செய்திருந்தார். ஒவ்வொருவராக வந்து அமர்ந்தனர். இதற்குள் மணி மூன்று அடித்துவிட்டது. டீ, டிபன் எல்லாம் எல்லோருக்கும்

கொணர்ந்து வைத்தனர். வாயைத் திறவாமல் எல்லோரும் சாப்பிட்டு முடித்தனர். பிற்கு, வெற்றிலைப் போட்டுக்கொண்டனர். ஜாதித் தலைவரின் கட்டாயத்தின் பேரில் அவர் சொற்படி எல்லோரும் ஆடினர். நடுவில் ஏதோ முண முணப்பு சப்தம் கேட்டது. ஆனால், தலைவரின் மிரட்டல் அதை அடக்கிவிட்டது.

"தாரக்நாத்ஜி! நீங்கள் பிராயச்சித்தம் செய்து கொண்டால் நாங்கள் உங்களை ஜாதியில் சேர்த்துக்கொள்கிறோம். இதை சொல்வதற்காகத்தான் இங்கு நாங்கள் வந்திருக்கிறோம்!" என்று ஒரு வயோதிகர் தன் பொக்கை வாயைத் திறந்து கூறினார். இன்னொரு மூலையிலிருந்து, "இதில் பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டிய அவசியமென்ன இருக்கிறது? தன் தவறை உணர்ந்து கொள்வதே போதுமானது!" என்று ஒரு குரல் எழுந்தது.

"ஆமாம்; அதுதான் சரி! பெண் செய்த தவறுக்கு இவர் என்ன செய்வார்? அவளை ஜாதியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றால் தான் விதிப்படி பிராயச்சித்தம் செய்யவேண்டும். தாரக்நாத்திற்கு அவசியமில்லை!" என்று இன்னொருவர் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

"இந்தமாதிரி விஷயங்களுக்கெல்லாம் ஜாதியைவிட்டு விலக்கிக் கொண்டிருந்தோமானால், சிறிது நாளில், நம் ஜாதி இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிடும். அதுவுமின்றி இந்த விஷயத்தில் தாரக்நாத்தின் பேரில் தவறு ஒன்றுமில்லை. அவர் பெண்ணின் பிடிவாதத்தின் பேரில் நடந்த காரியமது. பெண் செய்த தவறுக்காக தகப்பனைத் தண்டிக்கக் கூடாது. இது ரொம்ப அநியாயம்!" என்றான் மற்றொருவன்.

"ஆம், தம்பி! நன்றாகச் சொன்னாய்! மேலே என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று இந்த நாடகத்தில் நடிக்க வந்த ஒருவன், பலதரம் ஒத்திகை செய்த விஷயத்தை ஒப்பிப்பது போல் கூறினான்.

"நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களென்று சொல்லுங்கள், தாரக்நாத்ஜி!" என்றார் ஒருவர். அவர் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு எல்லோரும் கப் சிப்பென்று உட்கார்ந்திருந்தனர். மாயாவும் திரை மறைவிலிருந்த வாறே கவனமாகக் கேட்கத் தொடங்கினாள். தாரக்நாத் பேசத்தொடங்கினார், "நீங்கள் சொன்னவைகளையெல்லாம் கேட்டு மிக்க சந்தோஷம். ஆனால், ஜாதியில் எனக்குப் பற்றுதலுமில்லை; துவேஷமுமில்லை, மறுபடியும் ஜாதியில் சேர்ந்து கொள்வதில் எனக்குச் சந்தோஷமுமில்லை; ஜாதியை விட்டு விலகியிருப்பதினால் துக்கமுமில்லை! ஜாதி-சேவைக்கு மாத்திரமன்றி பொது நன்மைக்குரிய ஒரு வழியில் செல்ல நான் தீர்மானித்து விட்டேன். சாலினி போன்ற நூற்றுக்கணக்கான பெண்கள் மேல்நாட்டு படிப்பில் மோகங்கொண்டு தங்களை அதற்கு பலி கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். நம் நாட்டு ஸ்திரீகளின் பெண்மைக் குணம் நாளுக்கு நாள் ஹீனம் அடைந்துவருகிறது. ஸ்திரீகளுடைய வாழ்க்கையின் லட்சியங்கள் சின்ன பின்னமாகிக் கொண்டிருக்கின்றன. அவர்களை நேரான பாதைக்குத் திருப்ப முயற்சிக்கப் போகிறேன். பேச்சுடன் நில்லாமல் அதைக் காரியத்திலும் காண்பிக்கப் போகிறேன். அதற்காக என் சொத்தையெல்லாம் செலவழிக்கவும் நான் தயாராயிருக்கிறேன்!"

"நீங்கள் செய்யப் போகும் விஷயம் ரொம்ப நல்லது தான். ஆனால் நம் ஜாதி ஆசாமி ஒருவரை ட்ரஸ்டியாக ஏற்பாடு செய்யுங்கள். அவர் உங்கள் கட்டளைப்படி நடந்து கொள்வார்!" என்றார் ஜாதித் தலைவர்.

"ட்ரஸ்டி ஏற்படுத்தும்படியாக பணம் மீராது. இதற்காக ஒரு வேளை இன்னும் பணம் வசூலிக்கும்படி யாக நேர்ந்தாலும் நேரலாம். என்னிடமிருக்கும் பணம் போதாது.

கட்டிடத்திற்கே ஒரு லட்சம் செலவாகும். பதினைந்தா யிரம் அல்லது, இருபதினாயிரத்திற்குச் சாமான்கள் வாங்க வேண்டியிருக்கும். இன்னும் வித்யாசாலையின் உபாத்தி யாயினிகளுக்கு ஏழெட்டாயிரம் சம்பளம் கொடுக்க வேண்டும். இப்பொழுதே மாணவிகளின் சம்பளத்தி லிருந்து வரும்படி எதிர்பார்க்கமுடியாது. இதற்கு வேறே ஏற்பாடு செய்யவேண்டும். இவ்வளவிற்கும் என்னிடம் இப்பொழுது ஒரு லட்சம்தான் இருக்கிறது!" என்றார் தாரக்நாத்.

"தாங்கள் பணத்தைக் கொடுங்கள்! மற்ற ஏற்பாடு களை ட்ரஸ்டி செய்துகொள்வார். நாங்கள் சந்தா கொடுக் கிறோம். இதனால் நம் ஜாதிக்கும் நல்ல பெயருண்டு!" என்று ஒருவர் தன் வலையை விரித்தார். இதில் தாரக்நாத் கட்டாயம் அகப்பட்டுவிடுவாரென்று எல்லோரும் எண் ணினர். ஆனால், தாரக்நாத், "பணத்தையெல்லாம் வித்யா சாலையின் பேரில் பாங்கில் போட்டிருக்கிறேன். அதுவு மன்றி கட்டிடம் கட்டுவதை கண்ட்ராக்டிற்கு விட் டாகி விட்டது. சாமான்களெல்லாம் தயாராகிவிட்டது. இன்று அல்லது நாளைக்குள் வேலை ஆரம்பமாகிவிடும்!" என்றார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் வந்தவர்களின் மனக்கோட்டைகளெல்லாம் தகர்ந்து வீழ்ந்தன.

"அப்படியானால், உங்கள் பணம் நம் ஜாதிக்கு உப யோகப்படாதா?" என்றார் ஒரு கிழவர் பெருமூச்சு விட்டுக்கொண்டே.

"அது லோகோபகாரமாகத்தான் செலவழிக்கப் படப்போகிறது!'' என்று தாரக்நாத் சுருக்கமாகப் பதில் அளித்தார்.

"உங்களை ஜாதியில் சேர்த்துக் கொள்வதற்கில்லை!'' இது அவர்களுடைய கடைசி தீர்மானம்.

"ஜாதியில் சேர்த்துக்கொள்ளும்படி உங்களை நான் எப்பொழுது வேண்டிக் கொண்டேன்?'' என்று அவர்களுக்குச் சரியான பதில் கொடுத்தார் தாரக்நாத்

"இங்கு வந்து டீயும், பலகாரங்களும் சாப்பிட்டதற்கு கங்காதீர்த்தம் அருந்த வேண்டும்! பூணூலை மாற்ற வேண்டும்!''

"நான் கூட இப்பொழுது இந்த அறையை அலம்ப வேண்டும்!'' தங்கள் காரியம் கைகூடாமற் போகவே ஆத்திரத்துடன் அவ்வறையைவிட்டு ஒவ்வொருவராக வெளியே சென்றனர். அவர்களின் சுயநல அலைகள் தாரக்நாத்தின் தியாகப் பாறையில் மோதி சிதறி மறைந்தன. இந்த யாகத்தில் ராட்சசர்களைப்போல் அவர்கள் ஏதேனும் தொந்திரவு செய்வார்களோ, என்னவோவென்று தாரக்நாத் கவலை கொண்டார்.

# 37

நான்கு தினங்களாக அசோக் குமார் விஞ்ஞான சாலையை விட்டு வெளியே வரவில்லை. இரவிலும் விழித்துக்கொண்டிருக்கிறார். பகலில் புத்தகம் படிப்பது, அல்லது வேறு ஏதாவது சோதனை செய்த வண்ணமிருக்கிறார். கோபிநாத் சாப்பாடு கொண்டுவந்தால் பெயரளவில் சாப்பிடுவதாக பாவனை செய்கிறார்.

இன்று அசோக் குமார் சந்திரனின் சக்தியைப் பெறுவதற்கு புதிய முறையைக் கையாண்டார். அதில் வெற்றி நிச்சயம் கிடைக்குமென்று அவருக்கு நம்பிக்கையிருந்தது. இருந்தும், அவர் மனதில் ஏதோவொருவிதமான வேதனை எழுந்து கொண்டிருந்தது. குமுதினி போன்ற, இரவில் புஷ்பிக்கும் புஷ்பங்களிலிருந்து ஓர் இயந்திரத்தின்மூலம் அதிலிருக்கும் நீர் இழுக்கப்படுகின்றது. அந்தப் புஷ்பங்களின்மேல் சந்திர வெளிச்சம் இயந்திரங்களின்மூலம் ஒருங்கே வீசிக்கொண்டிருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக புஷ்பங்களிலிருந்து இழுக்கப்படும் நீர் ஒரு பாத்திரத்தில் வந்து விழுகிறது. சந்திரகிரணம் மறுபடியும் இந்நீரில் பிரயோகிக்கப்படுகிறது. அந்த குளிர்ந்த நீர் அலையைப் போல் எழுகிறது. அநேக கண்ணாடிப் பாத்திரங்கள், கண்ணாடிக் குழாய்கள் மூலமாக அந்த நீர் வெளிப்பட்டு கடைசியில் ஒரு சிறிய பாத்திரத்தில் சொட்டு, சொட்டாக சொட்டிக் கொண்டிருக்கிறது. இரவு ஒரு மணியாகிவிட்டது.

கடைசி பாத்திரத்தில் ஜலத்தைப்போன்ற சிறிய துளிகள் சேர்ந்திருந்தன. அசோக் குமார் அந்தப் பாத்திரத்தை எடுத்துவிட்டு அதே இடத்தில் வேருெரு பாத்திரத்தை வைத்தார்.

"இது அமிருதமா, அல்லது விஷமா? சக்தியைக் கொடுக்கக்கூடியதா, அல்லது அழிவை அளிக்கக்கூடியதா? இதை எப்படி அறிவது? சந்தேகமில்லாமல் சந்திரனின் சக்தியினுடைய சாரம்தான் இது. இதை முதலில் யாருக்குக் கொடுத்து பார்ப்பது? குரங்கிருந்தால் கொடுத்துப் பார்க்கலாம். ஆனுல், இந்த நேரத்தில் குரங்கிற்கு எங்கு போவது? ஒருவேளை இது விஷமாயிருந்தால் நான் இறந்து விடுவேன். ஆனுல், நானே ஒரு நாள் சாவை நாடிச் சென்றிருக்கிறேன். அவ்விதம் இறக்க முடியா விட்டாலும், இதைக் குடித்தால் இறந்துவிடலாம்!"

இவ்விதமாக கையில் அந்தப் பாத்திரத்தை வைத்துக் கொண்டு அசோக் குமார் யோசித்தவண்ண மிருந்தார். சற்று நேரம்வரை குடிப்பதா, வேண்டாமாவென்று யோசனை செய்து கொண்டிருந்தார். பிறகு ஒரு தீர்மானத்திற்கு வந்தார். அந்தப் பாத்திரத்தை கீழே வைத்துவிட்டு மேஜையருகில் சென்று ஓர் உயில் எழுதி முடித்தார். பிறகு அந்தப் பாத்திரத்தை எடுத்து அதிலிருந்த நீரைக் குடித்தார். சற்று நேரத்திற்கெல்லாம் அசோக் குமார் தன் உடலிற்குள் ஏதோவொருவிதமான வலி எழுவதை உணர்ந்தார். அவ்வலியும் சிறிது நேரத்திற்கெல்லாம் நீங்கியது.

"எப்படியிருந்த போதிலும் இது விஷமல்ல; வெறும் ஜலமுமல்ல. ஏனென்ருல், இது உடலில் வலியை உண்டாக்குகிறது!" என்று கூறிக்கொண்டே எழுந்தார். மின்சார வெளிச்சத்தில் தன் முகத்தை கண்ணுடியில்

பார்த்துக்கொண்டார். அவர் முகம் முற்றிலும் மாறுதல் அடைந்திருந்தது. கண்ணுடியில் தெரியும் தன் பிரதிபிம்பத்தின் அழகைக் கண்டு திடுக்கிட்டார். அவர் முகத்திலிருந்த புண்பட்ட காய வடுக்கள் காணப்படவில்லை. அடிக்கடி தன் முகத்தைத் தடவிப் பார்த்துக்கொண்டார். உண்மையிலேயே தான் மாறிவிட்டோமென்பதை உணர்ந்ததும் சந்தோஷப் பெருக்கில் தன்னையுமறியாமல் வாய்விட்டு "நான் இந்தப் பூமிக்கு நவீன சந்திரன்!" என்று கூறிக்கொண்டார். தன் உருவத்தை கண்ணுடியில் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

பொழுது புலரும் நேரமாகிக்கொண்டே வந்தது. சந்திரனின் பிரகாசம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து கொண்டு வந்தது. நட்சத்திரங்கள் ஒன்றன் பின் ஒன்ருக மறைந்து கொண்டிருந்தன.

அசோக் குமார் தன் உடலில் முன் மாதிரியே ஒரு வலி எழுவதை உணர்ந்தார். "இதென்ன மறுபடியும் அதே மாதிரி வலி!" என்று கூறிக்கொண்டே எழுந்து கண்ணுடியில் தன் உருவத்தைப் பார்த்துக்கொண்டார். கொஞ்சங் கொஞ்சமாக அவர் பழய உருவம் வரத்தொடங்கியது. ரணத்தினுல் ஏற்பட்ட வடுக்கள் அவர் முகத்தில் முன்போலவே காணப்பட்டன. வானவெளியில் சந்திரன் உள்ளவரைதான் அந்த புதிய திரவபதார்த்தத்திற்கு சக்தி உண்டென்று அசோக் குமார் அறிந்துகொண்டார். இதனுல் அவர் நிராசை அடையவில்லை. அவர் மனமும் தளர்ந்துபோகவில்லை. இம்மாதிரி பூரணமடையாத வெற்றியைக் கண்டு அவர் உத்ஸாகம் குன்றிப்போகவில்லை. பிறகு ஜன்னல் கதவுகளை மூடிவிட்டு படுக்கையில் படுத்தார். நித்ரா தேவி அவரைத் தன் வசமாக்கிக் கொண்டாள்.

## 38

தாரக்நாத், கண்ட்ராக்டர் ருஸ்தம்ஜீயுடன் கட்டிடத்தை மேற் பார்வை பார்த்துக்கொண்டிருந்தார். ஏறக் குறைய கட்டிடம் முடியும் தருவாயிலிருந்தது. இன்னும் பத்துப் பதினைந்து நாள் வேலைதான் பாக்கி. விசாலமான இம்மாளிகையைக் கண்டு சந்தோஷப்படுவதற்குப் பதிலாக அவர் வருத்தப்பட்டார். கீழே குனிந்துகொண்டு சற்று நேரம் யோசித்தார். பிறகு நீண்ட பெருமூச் சொன்று விட்டுக்கொண்டே மேல் தளத்தை நோக்கினார். அவர் துயரத்தின் காரணம் ருஸ்தம்ஜீக்குப் புரியவில்லை. பணத்தைப்பற்றிக் கவலைப்படுகிறாரோவென்று எண்ணுவதற்குமில்லை. ஏனெனில் பூரா பணமும் அவரிடம் கொடுத்துவிட்டார். தாரக்நாத்திடம் அவர் மிக்க அன்பு கொண்டவர். இருவர் அபிப்பிராயங்களும் ஒரே மாதிரியானவை. அவர் கவலைக்குக் காரணம் என்னவாயிருக்குமென்று சிறிது நேரம் யோசித்துப் பார்த்தார். ஆனால், அவருக்கொன்றும் விளங்கவில்லை. அவர் மனதிலிருப்பதை அவரால் அறிந்துகொள்ளாமலிருக்க முடியவில்லை.

"தினந்தோறும் இம்மாளிகையைப் பார்த்து சந்தோஷப் படுவீர்கள். இன்று இதைப் பார்த்ததும் கவலையுடனிருக்கிறீர்களே, என்ன விஷயம், தாரக்நாத் பாபு?" என்றார்.

"நானொன்றும் கவலைப்படவில்லையே!" என்று தன் மனதிலிருந்ததை மறைத்துக்கொண்டு கூறினார் தாரக்நாத்.

"நீங்கள் சொல்வதில் எனக்கு நம்பிக்கையில்லை. உங்கள் மனதில் ஏதோ கவலையிருக்கிறது, அதைச் சொல்லுங்கள். எந்த விஷயத்தில் குறைவு ஏற்படுகிறதோ, அதை நான் முடித்துத் தருகிறேன். தங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று நான் ஆவலுடையவனாயிருக்கிறேன்!" ருஸ்தம்ஜீயின் இவ்வார்த்தைகள் தாரக்நாத்திற்கு ஆறுதல் அளித்தன. அவர் தன் மனதிலிருந்ததைச் சொல்ல ஆரம்பித்தார். "ருஸ்தம்ஜீ! இந்தக் கட்டிடம் வசிப்பதற்காகவோ, அல்லது கடை வைப்பதற்காகவோ கட்டப்படவில்லையென்று உங்களுக்குத் தெரியும். இதில் வித்யாசாலையொன்று ஏற்படுத்தப் போகிறேன். இந்நாள் படிப்பு பிள்ளைகளுக்கு எவ்விதமானதாயிருந்த போதிலும் பெண்களுக்கு விஷத்திற்குச் சமானமானதென்று என் அனுபவத்தில் ஏற்பட்டுவிட்டது. என்னிடமிருந்த எல்லாப் பணத்தையும் இதில் போட்டுவிட்டேன். ஆனால், இன்னும் வித்யாசாலைக்கு எவ்வளவோ தேவைகள் இருக்கின்றன. புத்தகாலயம் ஏற்படுத்த வேண்டும்; முக்கியமான மர சாமான்கள் வாங்க வேண்டும்: ஆசிரியைகளுக்கு சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதெல்லாம் எப்படி பூர்த்தியாகுமென்பதுதான் என் கவலை. இந்தக் கட்டிடம் பூர்த்தி ஆக, ஆக எனக்கு இந்தக் கவலைகள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. ஆனால், முன்பு நான் ஒரு யோசனை கூட செய்திருந்தேன்......!" என்று சொல்லிவிட்டு தாரக்நாத் நிறுத்தினார்.

"என்ன யோசித்திருந்தீர்கள்?" என்று கேட்டார் ருஸ்தம்ஜீ.

"பம்பாய் ஏழை நகரமல்ல: பணம் வசூல் செய்து காரியத்தை முடிக்கலா மென்று எண்ணி யிருந்தேன். ஆனுல், சில ஜனங்கள், நான் சுய காரியத்தை உத்தேசித்து இதை ஆரம்பிக்கிறேனென்றும், இன்னும் தங்களுக்குத் தோன்றியதையெல்லாம் கூறிக்கொண்டு திரிய ஆரம்பித்தனர். அதற்குப் பிறகு அந்த யோசனையைக் கைவிட்டு விட்டேன். இப்பொழுது என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்!" என்ருர் தாரக்நாத். பரிட்சை எழுதிக் கொண்டிருக்கும் மாணவனுக்கு ஒரு கேள்விக்காவது விடை வராதிருக்கும் போது அவன் மனம் எப்படி யிருக்குமோ அதே நிலைமையில் தாரக்நாத்தின் மனம் குழம்பிக் கொண்டிருந்தது.

"இன்னும் எவ்வளவு ரூபாய் வேண்டியிருக்கும்?" என்று கேட்டார் ருஸ்தம்ஜீ.

"முக்கியமான மர சாமான்களைத் தவிர குறைந்தபட்சம் புத்தகத்திற்காக ஐயாயிரம் ரூபாய் வேண்டியிருக்கும். மாதா மாதம் சம்பளத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படியாயிருக்கும். இன்னும் சில்லறைச் சிலவுகள் ஏதாவது இருந்துகொண்டிருக்கும்!"

"நல்லது! நீங்கள் கவலைப்படாதீர்கள். இதையெல்லாம் நான் செய்துவிடுறேன். ஆசிரியைகளை நியமியுங்கள். மற்றவைகளுக்கெல்லாம் ஆர்டர் கொடுங்கள்!" தாரக்நாத்தின் முகம் மலர்ந்தது. ருஸ்தம்ஜீயின் வார்த்தைகள் அவர் மனதில் ஒரு வேகத்தைக் கொடுத்தன. அவர் ஆனந்தத்துடன் வீட்டிற்குச் சென்ருர்.

ருஸ்தம்ஜீ கண்ட்ராக்டில் லட்சக்கணக்காக சம்பாதித்திருந்தார். ஆனல், கடவுள். அவருக்கு சந்தானப் பாக்கியத்தை அளிக்கவில்லை. தன் சாமர்த்தியத்தினுல்

ஏழ்மையிலிருந்து லட்சாதிபதியானர். இந்தப் பணத்தை யெல்லாம் நல்வழியில் எப்படி செலவழிப்ப தென்று வெகு நாட்களாக யோசித்துக் கொண்டிருந்தார். இந்த சமயத்தில் தாரக்நாத்தின் சேவையில் தானும் பங்கெடுத் துக் கொள்வது அவருக்கு மிகவும் திருப்தியா யிருந்தது. சாலினியின் மூலம் தாரக்நாத் அடைந்த அனுபவத்தைப் போல ருஸ்தம்ஜீ தன் மனைவியின்மூலம் அடைந்திருந்தார்.

# 39

இரவு சந்திரனின் ஒளிக்காக பத்துப் பன்னிரண்டு தினங்கள் வரை அசோக் குமார் காத்துக்கொண்டிருக்கும்படியாயிற்று. இதன் நடுவில் சாலினியைத் திருத்துவதெப்படி என்று யோசித்து ஒரு வழியைக் கண்டு பிடித்தார். புதிது, புதிதாக ஸூட், ஹாட் முதலிய சாமான்களெல்லாம் வாங்கி விஞ்ஞானசாலையில் வைத்துக் கொண்டார்.

இந்த இரண்டு வாரங்களுக்குப் பிறகு அவர் தன் பங்களாவிற்குச் சென்றார். ஏனெனில், முக்கியமாக கோபிநாத்துக்கு ஒரு செய்தி சொல்ல வேண்டி யிருந்தது.

பத்து மணிகூட அடித்திருக்காது. கோபிநாத் சாப்பாடு தயாரித்து அதை அசோக் குமாரிடம் எடுத்துச் செல்வதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். இதற்குள் அசோக் குமாரின் கார் வந்து நின்றது. அவர் இறங்கி

உள்ளே வந்தார். கோபிநாத்தைப் பார்த்ததும், "சாப்பாடு தயாராகிவிட்டதா, கோபி?" என்று கேட்டார்.

"தயாராகிவிட்டது, எஜமான்! இப்பொழுதுதான் காலேஜிற்குப் புறப்படக் கிளம்பினேன். நீங்களும் வந்துவிட்டீர்கள்!" என்றான் கோபிநாத்.

"சரி! இனிமேல் நீ காலேஜிற்கு சாப்பாடு எடுத்துக் கொண்டு வரவேண்டாம். நானே வந்து சாப்பிட்டு விட்டுப் போகிறேன்!" என்று கூறிவிட்டு உடைகளைக் களையத் தொடங்கினார். கோபிநாத் ஸ்நானத்திற்குத் தயார் செய்யப் போய்விட்டான். சாலினி மேஜை யருகில் உட்கார்ந்துகொண்டு ஏதோ எழுதிக்கொண்டிருந்தாள். அசோக் குமாரைக் கண்டதும் அதை மறைத்து வைத்தாள். அசோக் குமார் அதைப் பார்த்தும் பாராதவர் போலிருந்து விட்டார்.

"ஓஹோ! நீங்கள் வந்துவிட்டீர்களா? இத்தனை நாள் எங்கே யிருந்தீர்கள்?" என்றாள் சாலினி.

"ஒரு மனைவியைத் தேடுவதில் முனைந்திருந்தேன்!" என்றார் அசோக் குமார்.

"சரிதான்! கிடைத்துவிட்டாளா?"

"இன்னும் கொஞ்ச நாட்களில் வந்துவிடுவாள். அவளும் உன்னைப்போல் அழகா யிருப்பாள்!"

"உங்கள் முகத்தைப் பார்த்து உங்களைக் கலியாணம் செய்துகொள்ள சம்மதித்துவிட்டாளா?"

"சம்மதிக்காமலென்ன? அதற்காக நான் இன்னொரு முகத்தை எங்கிருந்து கொண்டு வருவேன்?"

"நல்லது! பேஷாகத் தேடிக்கொள்ளுங்கள்! ஆனால், என் கலியாணத்தைப்பற்றி என்ன யோசித்திருக்கிறீர்கள்?"

"நீ உன்னிஷ்டப்படி செய்துகொள்ளலாம். உனக்குப் பிடித்தமான புருஷனை நீ தேடிக் கொள்வதற்கு உனக்குப் பூரண சுதந்திரம் உண்டு. அதில் உனக்கு வெற்றி கிட்டும் வரை நீ இங்கு இருக்கலாம். உனக்கு மாதா மாதம் மூன்னூறு ரூபாய் கிடைத்துக் கொண்டிருக்கும்!"

அசோக் குமாரிடமிருந்து இந்த மாதிரியான பதிலை சாலினி எதிர்பார்க்கவில்லை. இந்த மாறுதல் அவரிடம் எப்படி ஏற்பட்டதென்று யோசிக்கத் தொடங்கினாள். அசோக் குமார் எந்த ஸ்திரீயின் வலையிலோ கட்டாயம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாரென்று சாலினி நிச்சயம் செய்துகொண்டாள். அசோக் குமார் ஸ்நானம் செய்ய சென்றுவிட்டார். சாலினி தான் மறைத்து வைத்திருந்த காகிதத்தை எடுத்துக் கிழித்தெறிந்தாள்.

அசோக் குமார் சாப்பிட்டுக்கொண்டே கோபிநாத்திடம் "கோபி! இன்று அல்லது நாளைக்கு என் சிநேகிதன் நவீன்சந்தர் வருவான். அவன் இங்கு கொஞ்ச நாட்கள் தங்குவான். அவனை ஒன்றும் நீ கேட்கவேண்டாம். என் சாவியை அவனிடம் கொடுத்து விடுவேன். இஷ்டப்பட்ட போது வருவான், போவான். அவனை ஒன்றும் தடை செய்யாதே. ஏனென்றால், அவன் முன் கோபக்காரன்!" என்று கூறினார். அவர் சொல்வதற்கிணங்கி கோபிநாத்தும் தலையை ஆட்டினான்.

* * *

பால்போல் எங்கும் நிலவு பொழிந்து கொண்டிருந்தது. புதிதாக வாங்கிய விலையுயர்ந்த உடைகளை அசோக் குமார் அணிந்து கொண்டிருந்தார். பழய வஸ்துக்கள்

ஏதேனும் தன் உடம்பில் இருக்கிறதாவென்று கவனமாகப் பார்த்துக் கொண்டார். பிறகு ஓர் அலமாரியைத் திறந்து அதிலிருந்து இரண்டு மூன்று சீசாக்களை எடுத்தார். ஒரு பாத்திரத்தில் அந்த சீசாக்களிலிருந்த திரவ பதார்த்தத்தை விட்டு கலக்கிக் குடித்தார். அதைக் குடித்த சற்று நேரத்திற்கெல்லாம் சந்திரனைப் போன்ற தேஜஸுடன் அசோக் குமார் விளங்கினர். தன் அழகிய உருவத்தைக் கண்ணாடியில் கண்டு ஆனந்தித்த பிறகு அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தார்.

அருகிலிருந்த மோட்டார் கம்பெனிக்குச் சென்றார். ஒரு பெரிய பிரபுவைப் போன்ற சுந்திர புருஷனொருவர் வருவதைக் கண்டு கம்பெனி மானேஜர் அவரை மிக்க மரியாதையுடன் வரவேற்றார்.

"உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் மானேஜர்.

"எனக்கு உயர்ந்த கார் ஒன்று வேண்டும். கொஞ்ச நாள் வாடகைக்கு கொடுக்க வேண்டும். உங்களால் கொடுத்து உதவ முடியுமா?" என்றார் அசோக் குமார்.

"மன்னிக்கவேண்டும்! உங்களை யாரென்று எங்களுக்குத் தெரியாது. அதனல் வாடகைக்குக் கொடுப்பதென்பது முடியாத காரியம். ஆனல், தகுந்த ஜாமீனின் பேரில் கொடுக்கப்படும்!" என்று மானேஜர் வெகு விநயத்துடன் கூறினர்.

"எனக்கு இங்கு தெரிந்தவர்கள் யார் இருக்கிறார்கள்? சரி; அதைப்பற்றி யென்ன? நான் காரின் முழுத்தொகையையுமே கொடுத்து விடுகிறேன்!" என்றார் அசோக் குமார். மானேஜருடன் அசோக் குமார் தனக்குப் பிடித்தமான காரை தேர்ந்தெடுப்பதற்காகச் சென்றார். சிறிய

அழகான காரொன்றைப் பொறுக்கினர். பணத்தை மானேஜரிடம் கொடுத்துவிட்டு, வீதியில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருந்த காரை நோக்கிச் சென்றார். மானேஜரும் அவரைத் தொடர்ந்து மரியாதைக்காகச் சென்றார்.

“மானேஜர் ஸார்! இன்னும் பதினைந்து தினங்கள் நான் இங்கு இருப்பேன். அதுவரை இந்தக் காரை ஒருவருக்கும் கொடுக்கவேண்டாம். இரவு காரைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்!” என்று அசோக் குமார் மானேஜரிடம் கூறினர். அவர் வேண்டுகோளை மானேஜர் ஏற்றுக்கொண்டார். அசோக் குமார் காரில் ஏறிக்கொண்டார். கார் ‘மலபார் க்ளப்’பை நோக்கிச் சென்றது.

# 40

அசோக் குமார் தன் புதிய உருவத்தில், புதிய காரில் ‘மலபார் க்ளப்’பை அடைந்தார். சாலினியின் காரருகிலேயே தன் காரை நிறுத்திவிட்டு ‘க்ளப்’ சேவகனுடன் காரியதரிசியின் அறைக்குச் சென்றார். அவரை உட்காரக்கூடச் சொல்லாமல் தன்னை மறந்து அவர் அழகிய தோற்றத்தை காரியதரிசி சற்றுநேரம் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு தன்னை சமாளித்துக் கொண்டு, “நீங்கள் யார்? இப்படி உட்கார்ந்து கொள்ளுங்கள்!” என்றார்.

“நான் கொஞ்சநாளைக்கு இந்த ‘க்ளப்’பில் மெம்பராயிருக்க விரும்புகிறேன். நான் கல்கத்தாவிலிருந்து வந்தி

ருக்கிறேன். ஜர்மனிக்குச் செல்வதாகத் தீர்மானம் பண்ணி யிருக்கிறேன். பம்பாயில் எனக்குக் கொஞ்சம் வேலையிருக் கிறது. ஆகையால், இங்கு பதினைந்து இருபது தினங்கள் தங்கும்படியாயிருக்கும். பொழுதுபோவதற்காக இந்த 'க்ளப்'பில் சேர விரும்புகிறேன்!'' என்றார் அசோக் குமார்.

"ரொம்ப சந்தோஷம்!'' என்று கூறினார் காரியதரிசி.

"சந்தா எவ்வளவு?'' என்று கூறிக்கொண்டே தன் பணப்பையைத் திறந்தார் அசோக் குமார்.

"சேருவதற்கு முதலில் இருபத்தைந்து ரூபாய், பிறகு மாதச் சந்தா பத்து ரூபாய்! தங்கள் பெயர் என்ன?'' என்று கூறிக்கொண்டே ரசீது நோட்டை எடுத்தார். அசோக் குமார் பணத்தை யெண்ணி மேஜைமேல் வைத்து விட்டு "என் பெயர் நவீன் சந்தர்!'' என்றார்.

ரசீதை நவீன் சந்தரிடம் கொடுத்துவிட்டு, "வாருங் கள்! உங்களை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தி வைக் கிறேன்!'' என்றார் காரியதரிசி. இருவரும் கிளம்பினர். ஒவ் வொரு இடமாகச் சென்று அறிமுகமான பிறகு, சாலினி, உமேச் சந்தர், டாக்டர், மனோரமா இவர்கள் இருக்கு மிடம் வந்தார்கள். அவர்களெல்லோரும் 'பிரிட்ஜ்' என்னும் ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். காரியதரிசி நவீன் சந் தரை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். "இன்று மிஸ்டர், நவீன் சந்தர் நம் க்ளப்பில் அங்கத்தினராகச் சேர்ந் திருக்கிறார். அவர் ஜர்மனிக்குச் செல்லப்போகிறார். ஏதோ காரியத்தை முன்னிட்டு இங்கு தங்கும்படி நேர்ந்திருக் கிறது. பொழுதுபோவதற்காக சிறிதுநாள் இந்த க்ளப்பில் மெம்பராகி யிருக்கிறார். தங்கள் சிநேகிதத்தால் அவர் சந் தோஷமடைவாரென்று நினைக்கிறேன்!'' என்று கூறினார். பிறகு நவீன் சந்தர், காரியதரிசியுடன் 'க்ளப்' 'கபே'

முதலியவைகளைப் பார்க்கச் சென்றார். நவீன் சந்தரை இமைகொட்டாமல் சாலினியும், மனோரமாவும் பார்த்துக் கொண்டிருந்தனர். கண்ணிலிருந்து மறையும்வரை இரு வரும் அவரைப் பார்த்துக்கொண்டேயிருந்தனர்.

"சாலினி தேவி, ஆட்டத்தைக் கவனியுங்கள்!" என்று உமேச் சந்தர், அவள் கவனத்தைத் திருப்புவதற் காகக் கூறினார்.

"இருங்கள், மிஸ்டர் உமேச் சந்தர்!" என்று அந்தப் பக்கமாகவே பார்த்துக்கொண்டு சாலினி சொன்னாள்.

"தி ஸ்ப்பேட்ஸ்!" என்று உமேச் சந்தர் தன் ஆட் டத்தை ஆடிக்கொண்டிருந்தார்.

"மனோரமா! ஆட்டத்தைப் பாருங்கள்!" என்று டாக்டர் மெல்ல சிரித்துக்கொண்டே கூறினார்.

"நான் அழகிய வஸ்துவைப் பார்த்துக் கொண்டிருக் கிறேன், டாக்டர்! 'நோ, பிட்'," என்று கூறிக்கொண்டே ஆடத் தொடங்கினாள். சாலினி ஆட்டத்தைவிட்டு எழுந்து நின்றாள். "இதோ வந்து விட்டேன்!" என்று கூறிக் கொண்டே நவீன் சந்தர் சென்ற பக்கமாக போக ஆரம் பித்தாள்.

"இதோ வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போவ தன் அர்த்தம் எனக்குத் தெரியும். புது மீனைப் பார்த்து விட்டீர்கள். இனி அதைப் பிடிக்க வேண்டியதுதானே?" என்றார் உமேச் சந்தர்.

"சரி! அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்!" என்று சாலினி அழுத்தம் திருத்தமாகக் கூறினாள். இதற்

குள் நவீன் சந்தர் அவ்வறைக்குள் நுழைந்தார். காரியதரிசியும் அவருடன் வந்தார். "என்ன? ஆட்டம் முடிந்துவிட்டதா?'' என்ருர் காரியதரிசி. டாக்டர் அவருக்குப் பதிலளித்தார். பிறகு, காரியதரிசி ஒவ்வொருவராக நவீன்சந்தருக்கு அறிமுகப்படுத்திவிட்டு தன் அறையை நோக்கிச் சென்ருர். அவர் சென்ற பிறகு நவீன் சந்தர் அவர்களுடன் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். டாக்டருக்கும், உமேச் சந்தருக்கும் அங்கு இருக்கப்பிடிக்கவில்லை. மெல்ல ஏதேனும் சாக்கு வைத்துக்கொண்டு சென்றுவிடப் பார்த்தார்கள். நவீன் சந்தர் இதையெல்லாம் அறிந்து கொள்ளாமலில்லை. அவர் உமேச் சந்தரைப் பார்த்து, "எல்லோரும் 'கபே'க்கு செல்வோம், வாருங்கள்! இன்று நான் உங்களுக்கு ஒரு 'பார்ட்டி' கொடுக்கலாமென்று இருக்கிறேன்!'' என்று புன்முறுவலுடன் கூறினர்.

"இல்லை; அது கூடாது! உங்களை வரவேற்பதற்காக நாங்கள்தான் உங்களுக்குக் கொடுக்கவேண்டும்!'' என்று உமேச் சந்தர் ஜம்பமாகக் கூறினர்.

"அது நாளைக்கு நடக்கட்டும்! இன்று என் மரியாதையை ஏற்றுக்கொள்ளுங்கள்!''என்று கூறிக்கொண்டே எழுந்து நின்ருர். பிறகு எல்லோரும் 'கபே'க்குச் சென்றனர். "உங்களுக்கெல்லோருக்கும் என்ன பிடிக்குமென்று சொல்லுங்கள்!'' என்று நவீன் சந்தர் அவர்களைக் கேட்டார். கடைசியில் 'சேம்பயன்' கொண்டுவரும்படி சொல்லினர். ஒரு புட்டி 'சேம்பயன்' இன்னும் மற்ற சிற்றுண்டிகளும் கொண்டுவந்து வைக்கப்பட்டன. நவீன் சந்தர் தனக்காக சோடா மாத்திரம் வரவழைத்துக் கொண்டார்.

"ஏன்? நீங்கள் குடிக்கமாட்டீர்களா?'' என்று சாலினி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"குடிக்காமலென்ன! எனக்குக் குடிக்கும் வழக்க முண்டு: ஆனால், இன்று குடிப்பதற்கில்லை. ஏனென்றால், ஒரு கம்பெனியுடன் நாற்பதினாயிரம் பவுன்களுக்கு வியாபாரம் செய்யவேண்டியிருக்கிறது. கையெழுத்து வாங்கிக் கொள்ளும் சமயம் அவர்கள், நான் சுய அறிவிலிருக்கிறேனா, அல்லது போதையிலிருக்கிறேனா வென்று கட்டாயம் பார்ப்பார்கள். அதனால்தான் இன்று நான் அருந்தவில்லை!'' என்று நவீன் சந்தர் நாசூக்காய்ச் சொல்லிவிட்டு தப்பித்துக் கொண்டார்.

"நாற்பதினாயிரம் பவுன்! உங்கள் வியாபாரம் ரொம்ப பெரியதாயிருக்கும் போல் தோன்றுகிறது!'' என்று, அசோக் குமாருக்கு கிடைத்த பத்தாயிரம் பவுனைப்பற்றி சிந்தித்தவண்ணம் சாலினி நவீன் சந்தரைக் கேட்டாள்.

"ஆமாம்! பெரியதென்று சொல்வதற்கில்லா விட்டாலும் சிறியதுமில்லை! என் தகப்பனார் இறந்தபிறகு எல்லா பாரமும் என் தலையில் விழுந்துவிட்டது. ஒரு வாழ்க்கைத் துணைவியை தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூட எனக்கு அவகாச மில்லையென்றால் நீங்களே பார்த்துக் கொள்ளுங்களேன்!'' என்றார் நவீன் சந்தர். எல்லோரும் 'சேம்பயன்' புட்டியைக் காலி செய்தனர். உமேச் சந்தர் நன்றாக குடித்துவிட்டு மனதிற்குள் ஏதோ யோசித்தவண்ணம் மெல்ல சிரித்தார். இதைப் பார்த்த நவீன் சந்தரால் என்ன வென்று கேட்காமலிருக்க முடியவில்லை. "என்ன விஷயம், உமேச் பாபு?'' என்றார். அவர் கல்கத்தா வாசியென்பதைக் காட்டிக் கொள்ளும் பொருட்டே வேண்டுமென்று 'பாபு' வென்ற வார்த்தையை சேர்த்துக் கொண்டார்.

"நவீன்! நீங்கள் உண்மையிலேயே பெரிய வியாபாரி தான். இதில் சந்தேகமில்லை. தாங்கள் தங்கள் விவரங்களை, நான் வியக்கத்தக்கும் விதத்தில் அழகாகச் சொல்லி

விட்டீர்கள். நீங்கள் பெரிய பிரபு; தந்தையின் மரணத்திற்குப் பிறகு நீங்களே உங்களுக்கு எஜமான்; ஒரு மனைவியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்களென்று நீங்கள் சொல்லியதிலிருந்து தெரிகிறது. ஆனால், பாவம்! சாலினியும், மனோரமாவும் கலியாணமானவர்கள்!'' என்று விஷமச் சிரிப்புடன் கூறிக்கொண்டே உமேச் சந்தர் சாலினியையும் மனோரமாவையும் பார்த்தார்.

உமேச் சந்தரின் கடைசி வார்த்தை சாலினிக்கும், மனோரமாவிற்கும் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை.

"நவீன் பாபுவிடத்தில்தான் எல்லாம் பொருந்தி யிருக்கிறது. அழகு, பணம், நாகரிகம், நல்ல குணம் எல்லாம் அமைந்திருக்கிறது!'' என்று உமேச் சந்தரைப் பார்த்துக் கொண்டே சாலினி கூறினாள்.

"மிஸ்ஸஸ், அசோக் குமார்! இன்னும் ஸ்திரீகளுக்கு நவீன் பாபு காந்தக் கல்லைப் போன்றவர் என்பதை நீங்கள் சொல்ல மறந்து விட்டீர்கள்!'' என்று டாக்டர் சொல்லிவிட்டு உமேச் சந்தரைப் பார்த்து சிரித்துவிட்டார்.

"ஆனால், டாக்டர்! புருஷர்களுக்கு நவீன் பாபு 'கொய்னா'வைப் போன்றவர் என்பதை மறந்துவிட்டீர்களே!'' என்று மனோரமா கூறவே நவீன் சந்தர், சாலினி இருவரும் சிரித்துவிட்டனர். டாக்டரின் முகம் சிவந்தது.

வார்த்தை மேலும் வளராமலிருப்பதற்காக நவீன் சந்தர் நடுவில் குறுக்கிட்டார். "வீணாக ஏன் என்னைப் புகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள், நான் உண்மையிலேயே ஒரு வியாபாரிதான். வேறொன்றுமில்லை!'' என்றார்.

"இந்தக் கேள்விகளி லெல்லாம் என்ன இருக்கிறது? நல்லது! நீங்கள் எங்கே தங்கி யிருக்கிறீர்கள்?'' என்று

சாலினி நவீன்சந்தரைக் கேட்டாள். டாக்டர் நடுவில் குறுக்கிட்டு, "ஆம், ஆம்! இந்தக் கேள்வி கட்டாயம் கேட்கவேண்டியதுதான். கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்ருர்.

"தாஜ் ஹோட்டலில் தங்கி யிருக்கிறேன்!" என்று நவீன் சந்தர் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே கூறினர்.

"உங்களுக் கொன்றும் தடை யில்லாவிட்டால் நான் என் காரில் தங்களைக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்!" என்று சாலினி கூறினள். முன்னதாகவே நவீன் சந்தருடன் அவள் சென்றுவிட விரும்பினள்.

"ஓஹோ! உங்கள் காரிலா?" என்று உமேச் சந்தர் 'உங்கள்' என்னும் வார்த்தையை அழுத்தி தன்னிடம் கடன் வாங்கியிருப்பதை அவளுக்கு ஞாபகப் படுத்தினர்.

"நான் புதிதாக ஒன்று வாங்கி யிருக்கிறேன். வெளியே நிற்கிறது!" என்று கூறிக்கொண்டே எழுந்து கடியாரத்தைப் பார்த்துவிட்டு, "மன்னிக்க வேண்டும்! இன்று அதிக நேரம் தங்குவதற்கில்லை, நாளைக்கு மறுபடியும் இங்கு வந்து உங்களை யெல்லாம் சந்திக்கிறேன்!" என்று கூறி வெளியே சென்றுவிட்டார்.

"சாலினி தேவி! தியேட்டருக்குச் செல்வோமா?" என்று உமேச் சந்தர் அவள் மனதை யறிந்து கொள்ளாதவர் போல் வெகு நயமாக வழக்கம் போல் கேட்டார்.

"இல்லை, மிஸ்டர், உமேச்! மன்னித்துக் கொள்ளுங்கள்: இன்று எனக்கு சீக்கிரம் தூக்கம் வந்துவிட்டது!" என்று கூறிவிட்டு கிளம்பினள். வெளியே வந்த சாலினியின் கண்கள் நவீன் சந்தரைத் தேடின. ஆனல் அவர் சென்றுவிட்டார்.

# 41

இரண்டாவது நாள் சற்று சீக்கிரமே நவீன் சந்தர் க்ளப்பை யடைந்து விட்டார். எங்கும் நிலவு வீசிக் கொண்டிருந்தது. சாலினி அவர் வரவை எதிர்பார்த்து காரருகில் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தாள். அவர் வந்ததும் அவருக்கு வணக்கம் செலுத்தினுள். அவரும் பதிலுக்கு 'ஹாட்'டைத் தூக்கி புன்முறுவல் செய்தார்.

"மிஸ்டர் உமேச் இன்னும் வரவில்லையா?" என்று கேட்டார் நவீன் சந்தர்.

"இன்னும் வரவில்லை. ஒரு வேளை இப்பொழுது தான் பறப்பட்டுக் கொண்டிருப்பார். வாருங்கள்! சற்று தோட்டத்தில் உலாவிக் கொண்டிருப்போம். நிலவு எவ்வளவு ரம்யமா யிருக்கிறது, பாருங்கள்!" என்று அவரை அழைத்தாள். அவரை தனிமையில் அழைத்துச் செல்ல வேண்டுமென்பது அவள் எண்ணம். அதை நவீன் சந்தர் அறிந்து கொண்டார்.

மெல்லிய ஜார்ஜெட் மேலாடை அடிக்கடி அவள் தோளிலிருந்து நழுவி விழுவதைக் கண்டு நவீன் சந்தர் அவள் அந்தரங்கத்தை தெரிந்து கொண்டார்.

"சாலினி தேவி! இன்று என் காரியதரிசியிடமிருந்து தந்தி வந்திருக்கிறது; ஒரு வேளை அவள் என்னுடன் ஜர்மனிக்கு வர முடியாதோ, என்னவோ!"

"உங்கள் காரியதரிசி ஒரு ஸ்திரீயா?"

"ஆம்! ரொம்ப நல்லவள். மாதம் நூற்றிப் பன்னி ரெண்டு ரூபாய் கொடுக்கிறேன். ஐரோப்பாவிலுள்ள எல்லா பாஷைகளும் அவளுக்குத் தெரியும். அவள் பிரஞ்சு மாது!"

"என்றாவது ஒரு நாள் அவளே எஜமானியானாலும் ஆகிவிடுவாளல்லவா?"

இதற்குப் பதில், நவீன் சந்தர்! பெரிதாகச் சிரித்தார்.

"மிஸ்டர், நவீன்! என் வார்த்தை உண்மையா னாலும் ஆகலாம். ஏனென்றால், எனக்கு ஓர் ஆங்கில நாவலில் அதன் ஆசிரியை ஓர் இடத்தில் எழுதியிருப்பது ஞாபகம் வருகிறது. அது என்னவென்றால்—அழகும், வாலிபமும், பணமும் சேர்ந்திருக்கும் ஒருவருக்கு மனைவி யின் அவசியம் கட்டாயம் ஏற்பட்டுவிடுகிறதென்பது அனுபவ ஞானம் பெற்ற உண்மை! என்று அதில் கண்டி ருந்தது!" என்றாள் சாலினி.

"ஆமாம். நான் கூட படித்திருக்கிறேன். அது உண்மைதான்!" என்று உற்சாகமற்ற குரலில் சொல்லி வைத்தார்.

"நீங்கள் ஏன் இன்னும் கலியாணம் செய்துகொள்ள வில்லை?"

"மிஸ்ஸஸ், குமார்! ஏன் செய்துகொள்ளவில்லை யென்றால், என் கற்பனைக்குத் தக்கபடி கிடைக்காததினால் தான்! அது சரி! எனக்கு நீங்கள் ஒரு விஷயம் சொல்வீர் களா?"

அவளை சிக்க வைப்பதற்கான உபாயம் இது.

"கட்டாயம் முடிந்தால் சொல்கிறேன்!" என்ருள் சாலினி. ஆனல், தானே தயாராயிருப்பதை அவளால் சொல்ல முடியவில்லை.

"தங்கள் கணவர் மிஸ்டர், அசோக்குமார் யாரென்று நான் அறியலாமா?"

"அதனலென்ன! நான் டாக்டர் அசோக் குமார் டி. எஸ். ஸி. அவர்களின் ரிஜிஸ்டர்ட் மனைவி!" என்று வெறுப்புடன் அசோக் குமாரிடம் தனக்கிருக்கும் வெறுப்பைக் காட்டிக் கொண்டு சாலினி கூறினள்.

"நீங்கள் ரொம்ப அதிர்ஷ்டசாலி! உலகமெல்லாம் அவர் மகிமையைக் கண்டு தலை வணங்குகிறது. நீங்கள் அந்த உத்தமரை மணந்து கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறீர்கள். நான் அவரைப் பூஜிக்கத் தயாரா யிருக்கிறேன்!"

"அவர் விஞ்ஞானத்தில் வெற்றியடைந்தவரா யிருக்கலாம். ஆனல், இந்த விஷயம் வேறு. ஒரு கணவனுக்கு வேண்டிய ஆகர்ஷண சக்தி அவரிடம் கிடையாது. உலகத்தின் கண்களுக்கு நான் கலியாணமானவள் தான். ஆனல், என்னைப் பொறுத்தவரை நான் கலியாணமாகாதவள் போல் தான் இருந்து வருகிறேன்!" என்று கூறினள் சாலினி. இந்த வார்த்தை நவீன் சந்தரின் எண்ணத்தை மாற்றி விடுமென்று சாலினி நம்பி யிருந்தாள்.

"எப்படி யிருந்த போதிலும் புருஷனுடன் ஒன்று பட்டு வாழ்வதுதான் ஸ்திரீகளுக்கு அழகு! வாழ்க்கையை ஓர் ஓட்டத்தில் செல்லும்படி விடவேண்டும்......!" என்று நவீன் சந்தர் சொல்லி முடிப்பதற்குள் சாலினி பேசத் தொடங்கினள்.

"ஆனல், இந்த மாதிரி யெல்லா மிருப்பதற்கு புருஷனிடம் கொஞ்சம் வசீகர சக்தியும் இருக்கவேண்டும்! வடுக்கள் நிறைந்த அந்த முகமும், உணர்ச்சியற்ற குரலும், பணத்தாசை பிடித்த மனமுமுள்ள அவரை எப்படி நேசிக்கக்கூடும்? உண்மையைச் சொல்லுகிறேன், நவீன்! எனக்கு அவரிடம் கொஞ்சங் கூடப் பிரியமே யில்லை!" இதைக் கேட்ட நவீன் சந்தரின் முகம் சற்று வாடியது அவர் மனதில் ஆயிரம் எண்ணங்கள் எழுந்தன. இருந்தும் அவர் தன் வேஷத்தை எண்ணி பேசாமலிருந்தார். அசோக் குமாரை தூஷிப்பது நவீன் சந்தருக்குப் பிடிக்கவில்லை யென்பதை சாலினி அறிந்து கொண்டாள். மேலும், அந்த விஷயத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருக்க விரும்பாமல் சாலினி வேறு விஷயத்தில் நவீன் சந்தரின் மனதைத் திருப்ப விரும்பினள். "ஒரு வேளை அவர்கள் இன்று வரவில்லையோ, என்னவோ! நாம் சினிமாவிற்கு செல்வோம், வாருங்கள்!" என்று அவரை அழைத்தாள்.

நவீன் சந்தர் தன் கடிகாரத்தைப் பார்த்தார். பிறகு அவளுடன் காரில் சினிமாக் கொட்டகைக்கு வந்து சேர்ந்தார். அன்று 'டாக்டர் ஜீகலும், மிஸ்டர் ஹாயிட்டு'ம் என்னும் படம் நடைபெறப் போவதாக விளம்பர நோட்டீஸிலிருந்து தெரிய வந்தது. இருவரும் ஒரு 'பெட்டி'யில் உட்கார்ந்து கொண்டனர்! சினிமாவும் ஆரம்பித்தது.

ரூபத்திலே மாறுதல் ஏற்பட்ட பொழுது, டாக்டராக நடிப்பவரின் விகாரத் தோற்றத்தைக் கண்ட சாலினி, மெல்லிய குரலில் "கீர்த்தியினல் சூழப்பட்ட அசோக் குமாரின் உண்மை ஸ்வரூபம் இது தான்!" என்றுள்.

கீழே, டாக்டர், உமேச் சந்தர், மனோரமா முதலியோர்களும் உட்கார்ந்திருந்தனர். சினிமாவில் நடிக்கும்

ஸ்திரீ "டாக்டர், வாருங்கள்! டாக்டர், வாருங்கள்!" என்று விஷய வாசனை கொண்டு பேசும் பொழுது உமேச் சந்தர் தன்னையும் அறியாமல், "டாக்டர்! சாலினியின் உண்மை குணம் இதுதான்!" என்ருர்.

'இன்ட்ரவல்' விட்டவுடன் சாலினியும் நவீன்சந்தரும் சினிமாவை விட்டுச் சென்றுவிட்டனர். ஆட்டம் முடிந்த பிறகு டாக்டர், உமேச் சந்தர், மனோரமா முதலியவர்கள் வெளியே வந்துகொண்டிருந்தனர். அப்பொழுது உமேச் சந்தர், "இன்னும் இரண்டொரு தினங்களுக்குள்ளேயே அசோக் குமாரை விவாக ரத்து செய்துவிட்டு என்னை ரகசியமாக கலியாணம் செய்து கொள்கிறதாகச் சாலினி எனக்கு உறுதி மொழி கொடுத்திருந்தாள். ஆனல், நவீன் சந்தர் வந்த பிறகு அந்த எண்ணத்தை மாற்றிவிட்டாள் போலிருக்கிறது!" என்ருர்.

"ஸ்த்ரீகளின் எண்ணங்களும், குளிர் காலக் காற்றும் வெகு சீக்கிரத்தில் மாறிவிடுகிறது. முதலில் ஒரு வியாபாரியுடன் அவளுக்கு கலியாணம் நடக்க ஏற்பாடாகியிருந்தது. ஆனல், அதைத் தடுத்து ப்ரொபஸரை மணந்து கொண்டாள். பிறகு அவரை வெறுத்து உங்களைப் பிடித்தாள். இப்பொழுது நவீன் சந்தரின் மேல் வலையை வீசியிருக்கிருள்!" என்று டாக்டர் ஒவ்வொன்ருக விவரித்தார்.

"அவளுக்கு ஒருவரிடமும் அந்தரங்கம் கிடையாது. எல்லாம் ஒரே ஆட்டந்தான்!" என்று கூறி உமேச் சந்தர் பெருமூச்செறிந்தார்.

"சரி! அதை விட்டுத் தள்ளுங்கள்!" என்ருள் மனோரமா.

"விட்டுத் தள்ளுவதா, மனோரமா? காருக்காக மூவாயிரம் ரூபாய், இன்னும் மற்ற செலவுக்காக ஆருயிரம் ரூபாய் என்னிடம் கடன் வாங்கியிருக்கிருள்! இதெல்

லாம் எந்த தெய்வத்துக்குப் பிரீதி! நான் நாளைக்கு அசோக் குமாரிடம் சென்று எல்லா விஷயத்தையும் சொல்லிவிடுகிறேன்?" என்று ஆத்திரப்பட்டுக் கொண்டார் உமேச் சந்தர். பிறகு எல்லோரும் தத்தம் வீட்டிற்குக் கிளம்பிச் சென்றனர்.

# 42

விஞ்ஞானசாலையில் உட்கார்ந்துகொண்டு அசோக் குமார் தன் அலுவலைக் கவனித்துக் கொண்டிருந்தார். வெளியே யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. அசோக் குமார் தன் இருப்பிடத்தில் உட்கார்ந்து கொண்டே வந்திருப்பவரை உள்ளே வரும்படிச் சொன்னார். உமேச் சந்தர் மெதுவாக வந்து அசோக் குமார் நாற்காலியினருகில் நின்று கொண்டார். நவீன் சந்தர் ரூபத்தில் 'க்ளப்பில்' உமேச் சந்தரிடம் பழகிவிட்டபடியால் அவரைப் பார்த்ததும் தன்னையுமறியாமல், ஹலோ, மிஸ்டர், உமேச்!" என்று சொல்வதற்கிருந்தார். நல்ல வேளை! அவருக்குத் தன் நிலைமை ஞாபகம் வந்துவிட்டது. உடனே நிறுத்திக்கொண்டார். "என்ன விஷயம்? சொல்லுங்கள்!" என்றார்.

"உங்களுக்குத் தொந்திரவு கொடுக்கிறேன், மன்னித்துக்கொள்ளுங்கள்!" என்று தான் சொல்லப்போகும் விஷயத்திற்கு இப்போதே அடிகோலிக்கொண்டு கூறினார்.

"நல்லது! உங்கள் பெயர் என்ன?"

"என் பெயர் உமேச் சந்தர்!"

"மிஸ்டர், உமேச்! நான் சமூகத்தில் நெருங்கிப் பழகாததால் என்னிடம் அதிகமாக ஒருவரும் வருகிறதில்லையென்று எனக்குத் தெரியும். ஆனால், எனக்கு சமூகத்தில் பழகுவதற்கு அவகாசமே கிடைப்பதில்லை. நீங்கள் கட்டாயம் ஏதேனும் முக்கியமான விஷயத்திற்குத்தான் வந்திருப்பீர்கள்! ஆம்; உங்கள் பெயரை எங்கேயோ படித்திருக்கிற ஞாபகம் வருகிறது!" என்று கூறிவிட்டு எங்கே படித்தோமென்று யோசனை செய்கிறதைப்போல் பாவனை செய்தார்.

"ஆம், ஆம்! ஞாபகம் வந்துவிட்டது! சாலினி உங்களிடம்தான் அந்தரங்க காரியதரிசியா யிருக்கிறளோ?"

"இல்லை; ப்ரொபஸர்! அது வெறும் ஏமாற்றம்! சாலினியின் தந்திரங்களில் ஒன்று! அதற்குத்தான் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வந்திருக்கிறேன்!" என்று கூறிவிட்டு, அந்த இன்னொரு கடிதத்தை - இவைகளெல்லாம் வெறும் பொய்யென்று சாலினி எழுதிக் கொடுத்த கடிதத்தை - அசோக் குமாரிடம் கொடுத்தார். "இந்த மாதிரி எழுதித் தங்களை ஏமாற்ற எண்ணினுள்!" என்றார் உமேச் சந்தர். அசோக் குமார் அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தார். சாலினியின் கையெழுத்தை தெரிந்து கொண்டார்.

"நீங்களும் சாலினியும் சேர்ந்துகொண்டு என்னை ஏமாற்ற சூழ்ச்சி செய்தீர்களென்று சொல்லுங்கள்!" என்று அந்தக் கடிதத்தை உமேச் சந்தரிடம் கொடுத்துக் கொண்டே அசோக் குமார் கூறினர்.

"அவள் செய்த கட்டாயத்தின் மேல் இப்படி செய்யும்படியாயிற்று!" என்று அபராதியைப் போல் தலை குனிந்த வண்ணம் உமேச் சந்தர் கூறினர்.

"அவளுடைய கட்டாயத்திற்காக செய்தீர்களானல் இன்று வரை அதற்குக் கட்டுப்பட்டே யிருந்தீர்களா? இது உங்கள் ஆண்மைக்கு அழகா?"

"ஆம்! நான் மிகவும் தவறுதான் செய்துவிட்டேன்!"

"தவறு உங்களுடையதுதான். ஆனல், அதன் பலன் என் மனதிற்கு, என் வீட்டிற்கு, என் வாழ்க்கைக்கு என் னென்ன செய்திருக்கிறதென்பதை நீங்கள் அறிவீர்களா? உங்களைப் போன்ற படித்த மனிதர்களுக்கு இது தானு தொழில்?" என்று கோபத்துடன் அசோக் குமார் கூறினர். அவர் கண்களில் தீப்பொறிகள் பறந்தன.

"ஆனல், அவள் என்னை நேசிப்பதாகக் கூறி என்னை மயக்கிவிட்டாள்!"

"உங்களையா?"

"ஆம்! என்னைத்தான்!"

"மிஸ்டர், உமேச்! இதுவரை நீங்கள் ஒரு தூர்த்தனென்று மாத்திரம் நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போது நீங்கள் ஒரு அடிமுட்டாளென்பதையும் தெரிந்து கொண்டேன். உங்களிடமிருந்து அவள் பொய்ப் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்ட பிறகும் அவளுடைய பொய்ப் பிரேமையை உங்களால் அறிந்துகொள்ள முடியவில்லையா?"

"அறிந்துகொள்ள முடியவில்லையே! காதல் கண்களை மறைத்துவிடுகிறது!"

"இல்லை; காதல் கண்களை மறைக்காது. காமம்தான் கண்களை மறைக்கும். காதல், காமம் இவ்விரண்டையும்

ஒன்ருக எண்ணுவது தவறு. அவள் என்னை மணந்து கொண்டாள். ஆனல், அவளிடம் அன்பில்லை, உமேச்! காதல் கூட மாதம் அறுநூறு ரூபாய்க்கு விற்கப்படு கிறதா?"

"அந்த அறுநூறு மாத்திரமில்லை, ப்ரொபஸர்! இன்னும் ஏழாயிரம் ரூபாய் என்னிடமிருந்து கடன் வாங்கி யிருக்கிருள்!"

"அவள் கேட்கும் போதெல்லாம் பணம் கொடுத்து வந்தால் தங்களை நேசிப்பாளென்ரு கொடுத்துவந்தீர்கள்?"

"அதுவுமன்றி தங்களை விவாகரத்து செய்துவிடு கிறேனென்று வேறு சொல்லியிருந்தாள்!"

"பின் என்ன? அதற்கு நான் தயாராயிருக்கிறேன். ஒரு பெண்ணின் அந்தரங்க அன்புதான் எனக்குத் தேவை. சாலினியின் வெளிப்பகட்டு எனக்கு வேண்டாம். அவள் ஏன் இப்போது உங்களை கலியாணம் செய்துகொள்ளக் கூடாது? அவள் உங்களையாவது காதலித்தால் நான் மிக வும் சந்தோஷங் கொள்வேன்!"

"அதுதான் இல்லை! என்னையும் அவள் அந்தரங்கமாக நேசிக்கவில்லை. என்னையும் கலியாணம் செய்து கொள்ள மாட்டாள். ஏனென்ருல் இப்போது ஒரு புது சிநேகம் பிடித்திருக்கிருள். நவீன் சந்தர் என்னும் புது க்ளப் அங் கத்தினரொருவரை தன் வலையில் இழுக்க முயன்றுகொண் டிருக்கிருள். நவீன் சந்தர் அழகானவர், கனவான், ரசிக புருஷன்.

"எந்த சந்திரனைப் பற்றியும் என்னிடம் புகார்செய்ய வேண்டாம், உமேச் சந்தர்! எனக்கு சாலினியைத் தெரி யும். அவளுடைய சுபாவத்தை நான் அறியாதவனல்ல.

ஒருநாள் அந்த நவீன் சந்தரும் அவள் நாடகத்தை அறிந்து கொள்வான்!''

"ஆனல் உங்களுக்கு இதனல் எவ்வளவு அவமானம்...!'' உமேச் சந்தர் சொல்லி முடிப்பதற்குள் அசோக் குமார் பேசத்தொடங்கினர். "எனக்கு அவமானமா? மிஸ்டர், உமேச் இந்த எண்ணம் உங்களுக்கு கொஞ்சநாட்களுக்கு முன் தோன்றியதா? பணத்தின் உதவியைக் கொண்டு என் மன நிம்மதியைக் குலேக்க நீங்கள்கூட யோசிக்கவில்லேயா? ஒரு புருஷனிடமிருந்து அவன் மனேவியை அபகரிக்க கொஞ்சமா முயற்சி செய்திருக்கிறீர்கள்? இன்று நவீன்சந்தர் எந்த புதுக்காரியத்தைச் செய்து கொண்டிருக்கிருன்? நாம் நம் கடமைகளே மறந்து விடுகிருேம். சுயகாரியத்தை உத்தேசித்து அனுவசியமான விவகாரங்களுக்கெல்லாம் போட்டியிட்டுத் திரிகிருேம். முதலில், சாலினி உங்களேச் சேர்ந்தவளென்று எண்ணிக்கொண்டீர்கள். பிறகு, கடன் தொல்லேயில் சிக்க வைத்து விவாகக் கட்டை விலக்க எண்ணினீர்கள். இன்று நீங்கள் எனக்கு எச்சரிக்கை செய்கிறீர்கள். பழிவாங்கும் எண்ணத்துடன் எனக்கு உபதேசம் செய்கிறீர்கள். இவைகளெல்லாம் என் சக்திக்கு மேற்பட்ட விஷயங்களென்று எனக்குத் தெரியும். உமேச்! தானுக எற்படாத அன்பை பலவந்தமாகப் பெற நான் விரும்பவில்லே. சமுத்திரத்தில் வந்து சேரும் நதியைப்போன்ற அன்பைத் தான் நான் விரும்புகிறேன், தெரிந்ததா?''

எதற்காக உமேச் சந்தர் வந்தாரோ, அந்த எண்ணம் பூர்த்தியாகவில்லே. ஆனல், அசோக் குமாரின் மொழிகள் அவருடைய உள்ளத்தில் ஒரு விழிப்பைக் கொடுத்தன. அவர் மனேவியின் ஞாபகம் எழுந்தது. இவ்வளவு நாட்களாக படிக்கிறேனென்ற சாக்கில் பிறந்த வீட்டிலேயே

விட்டு வைத்திருந்தார். முதலில் அவளை அழைத்துவர தீர்மானித்துக் கொண்டார். தன் அழிவிற்குத் தானே குழி தோண்டிக் கொண்டிருப்பதையும் உணர்ந்தார். மனதிற்குள்ளேயே திட சங்கல்பம் செய்துகொண்டு வீட்டிற்குச் சென்றார்.

# 43

தாரக்நாத் ஏற்படுத்தியிருந்த 'வித்யாசாலைக்கு' ருஸ்தம்ஜீ தன் சம்பாத்தியத்தையெல்லாம் அர்ப்பணம் செய்து விட்டாரென்று தெரிந்ததும், ஜனங்கள் அந்த வித்யாசாலை எங்கிருக்கிறது? அதன் நோக்கமென்ன என்று அறிய விரும்பினர்.

முப்பது லட்சம் ரூபாய் சாதாரண விஷயமல்ல.

சமாசாரப் பத்திரிகைகளிலெல்லாம் ருஸ்தம்ஜீயைப் புகழ்ந்து எழுதப்பட்டிருந்தன. அவர்களும் தாரக்நாத்திடமிருந்து எல்லா விவரங்களையும் அறிய ஆவல்கொண்டனர். பத்திரிகை நிருபர்கள் தாரக்நாத்தை சூழ்ந்துகொண்டனர். இவர்கள் ருஸ்தம்ஜீயையும் விடவில்லை. வித்யாசாலையின் படம் பத்திரிகைகளை அலங்கரித்தது. அந்த ஸ்தாபனத்தின் லட்சியம், அதன் நடவடிக்கைகள் அதைப்பற்றிய புகழுரைகள் முதலியன தொடர்ச்சியாகப் பத்திரிகைகளில் வந்து கொண்டிருந்தன. தேசத்தின் பெரிய மனிதர்களிடமிருந்தெல்லாம் செய்திகளும், வாழ்த்துத் தந்திகளும் வந்த

வண்ணமிருந்தன. இதனுடைய பலன் ஏறக்குறைய மூந்நூறு மாணவிகள் வித்யாசாலையில் சேர மனுப் போட்டிருந்தனர்.

பாபு தாரக்நாத்தும், ருஸ்தம்ஜீயும் வித்யாசாலையின் ஓர் ஆபீஸ் அறையில் உட்கார்ந்து ஏதோ யோசித்துக் கொண்டிருந்தனர். அதற்கடுத்த அறையில் சில ஸ்திரீ களும், மாணவிகளும் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண் டிருந்தனர். இன்றுதான் மாணவிகளை தேர்ந்தெடுக்கும் தினம் போலும்!

இதற்குள் ஒரு வேலைக்காரன் தாரக்நாத்தை சந்திக்க யாரோ வந்திருப்பதாகக் கூறினான்.

"இந்த ஜனங்கள் ஏன் இப்படி தொந்திரவு கொடுக் கிறார்கள்? பத்திரிகை நிருபர்களா யிருப்பார்களோ?" என்றார் ருஸ்தம்ஜீ.

"அவர்களும் நமக்கு நன்மைதான் செய்து கொண் டிருக்கிறார்கள், ருஸ்தம்ஜீ!" என்று தாரக்நாத் கூறிவிட்டு வந்திருப்பவரை உள்ளே அழைத்து வரும்படி உத்திர விட்டார். ஒரு மனிதர் உள்ளேவந்து பேசாமல்உட்கார்ந்து கொண்டார். தான் வந்திருக்கும் காரியத்தைப்பற்றி அவராகவே சொல்வாரென்று தாரக்நாத் எண்ணினார். ஆனால், வந்திருக்கும் மனிதர் ஜனங்களிடம் எப்படி பழகுவ தென்பதை கூட அறிந்தவரல்ல வென்று தோன்றியது. அடிக்கடி தன் கோட்டுப் பையில் கையை விட்டுக்கொண் டும், எடுத்துக்கொண்டு மிருந்தார்.

"நீங்கள் யார்? எங்கு வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். இவ்வாறு தாரக்நாத் கேட்டதும் வந்திருப்பவர் பட, படவென்று பேச ஆரம்பித்தார்.

"ஜனங்களின் கண்களில் சாமர்த்தியமாக மண்ணைத் தூவுவதற்கும் தனித் திறமை வேண்டும். அந்த மாதிரி திறமையுடன் நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்ய வில்லை. இந்த வித்யாசாலையை மூலமாக வைத்துக் கொண்டு பெண்களை வியாபாரம் செய்யப் போகிறீர்கள்: எப்படி தங்கள் பெண்ணை செய்தீர்களோ, அதே மாதிரி! நீங்கள் பணத்திற்காக உயிரை விடுகிறவர். வேறு லட்சியமோ, தியாகமோ உங்களுக்குக் கிடையாது. ஒரு பார்சியின் பணத்தைக்கூட நீங்கள் கையாள்வதாகக் கேள்விப்படுகிறேன். இதையும் சொல்லிவிடுகிறேன்: நம் ஜாதி ஆசாமி ஒருவரை ட்ரஸ்டியாக நியமித்து காரியம் செய்யாவிடில் உங்கள் குட்டுகளை யெல்லாம் வெளிப் படுத்திவிடுவேன். அதற்கு வேண்டிய துண்டுப் பிரசுரங்கள் கூட அச்சடித்து வைத்திருக்கிறோம். இன்னும் அவைகளை கொடுக்க வேண்டியதுதான் பாக்கியிருக்கிறது!" என்று கூறிக்கொண்டே ஜேபியிலிருந்து ஒரு துண்டுப் பிரசுரத்தை எடுத்து தாரக்நாத் மேஜையில் வைத்துவிட்டு அம்மனிதர் வெளியே சென்றுவிட்டார். தாரக்நாத்தும், ருஸ்தம்ஜீயும் அதைப் படிக்க ஆரம்பித்தனர். அதைப் படித்ததும் தாரக்நாத் அவமானத்தினால் குன்றினார். அதில் அவரை தூஷித்து எழுதியிருந்ததற்காக அல்ல; இதைப் படித்ததும் ருஸ்தம்ஜீ என்ன எண்ணிக் கொள்வாரோ, இந்தமாதிரி தொந்திரவுகளினால் வித்யாசாலை நடைபெறாமல் நின்றுவிடுமோ என்றெல்லாம் பயந்தார்.

ருஸ்தம்ஜீ கவலையுடன் உட்கார்ந்திருக்கும் தாரக்நாத்தைப் பார்த்தார். அந்தப் பிரசுரத்தை அவர் நம்ப வில்லை.

"தாரக்நாத் இவ்வளவு துஷ்டராக இருக்கக்கூடுமா?" என்று சிந்தித்தவண்ணம் உட்கார்ந்திருந்தார். தாரக்நாத்

மெல்லிய குரலில், "ருஸ்தம்ஜீ! இந்த வித்யாசாலை என் சுய காரியத்திற்காக ஏற்பட்டதல்ல வென்று ஜனங்கள் தெரிந்து கொள்ளும் வரை நீங்கள் வித்யாசாலைக்காக அர்ப்பணம் செய்த பணத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!" என்றார்.

"தாரக்நாத்! இதை யெல்லாம் நீங்கள் லட்சியம் செய்யலாமா? ஒரு நல்ல காரியத்திற்கு ஆயிரம் தடைகள் ஏற்படும்! அதைக் கண்டு நாம் பயப்படுவதா?" என்று கூறினர் ருஸ்தம்ஜீ. பிறகு இருவரும் எழுந்து வெளியே சென்றனர்.

# 44

சந்தியா தேவதை தன் கரிய ஆடையை போர்த்திக் கொண்டாள். க்ளப்பில் மெம்பர்கள் போகவர ஆரம்பித்தனர். சாலினி வெளியே நின்றுகொண்டு நவீன் சந்தரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். டாக்டரும், மனோரமாவும் வந்து விட்டனர். ஆனல் உமேச் சந்தர் இன்னும் வரவில்லை. ஏன் உமேச் சந்தர் வரவில்லை? இந்தக் கேள்வி சாலினியின் மனதில் எழுந்து சற்று நடுங்கச் செய்தது. "ஒரு வேளை உமேச் சந்தர் நவீன் சந்தரை கொலை செய்திருப்பாரோ என்னவோ; இல்லாவிடில், அசோக் குமாரை ஏமாற்றுவதற்காக உமேச் சந்தரின் அந்தரங்க காரியதரிசி வேலைக்கு தன்னை நியமித்திருப்பதாகத் தான் பொய்ப் பத்திரம் எழுதிக்கொடுத்த விஷயத்தைப்பற்றி நவீன் சந்தரிடம் சொல்லிவிட்டாரோ

என்னவோ? கட்டாயம் அவர் ஏதாகிலும் செய்துதான் இருப்பார்!" என்றெல்லாம் அவள் யோசனை ஓடிற்று. கோபத்தினால் அவள் முகம் சிவந்தது. அவள் உள்ளம் நடுங்கியது. தன் காரை நோக்கிச் சென்றாள். காரில் ஏற காலை வைத்திருப்பாள், அதற்குள் நவீன் சந்தரின் கார் வந்து நின்றது.

"ஹலோ, சாலினி! எங்கே புறப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?"

"ஓ! வந்துவிட்டீர்களா! இவ்வளவு நேரம் உங்களுக்காக காத்திருந்தேன். உங்களைக் காணாததால் இங்கு இருக்கப்பிடிக்காமல் புறப்பட தயாராயிருந்தேன்; நல்ல வேளை! நீங்களும் வந்து விட்டீர்கள்!"

"இன்று கொஞ்சம் நேரந்தான் ஆகிவிட்டது!"

"ஆனால் வராமலிருப்பதற்கு நேரங்கழித்து வருவது தேவலை!" என்று கூறினாள் சாலினி. இருவரும் நந்தவனத்திற்குச் சென்றனர்.

"இன்று நான் நேரங்கழித்து வருவதற்கு இதுதான் காரணம்!" என்று கூறி அசோக் குமார் சொல்ல ஆரம்பித்தார். ஜர்மனியில் சாமான்களின் விலை அதிசீக்கிரம் உயரப்போவதாக இன்று கடிதம் வந்திருக்கிறது. அதனால் நான் அதிக நாள் இங்கு தங்கியிருக்க முடியாது. எப்பொழுது புறப்பட வேண்டியிருக்குமோ, அதுவும் தெரியவில்லை. பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தேன். அதனால்தான் இவ்வளவு நேரமாகி விட்டது!"

"என்னை இங்கேயே இப்படியே விட்டுவிட்டுப் போகப்போகிறீர்களா?" என்று சாலினி கலியாணமான

ஸ்திரீ தன் கணவனைப் பார்த்துக் கேட்பதுபோல் கேட்டாள்.

"அதற்கு நான் என்ன செய்வேன், சாலினி தேவி?"

"நான் உங்களுடையவளா யிருந்தால் எவ்வளவு ஆனந்தம், எவ்வளவு பூரிப்பு, எனக்கு ஏற்பட்டிருக்குமென்று இரவெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தேன். ஆனால், நான் அதற்கெல்லாம் பிறக்கவில்லை!" என்று நாடக மேடையில் நடிக்கும் நடிகையைப் போல் சாலினி கூறினாள்.

"உங்களுக்கு மாத்திரம் கலியாணமாகாதிருந்தால் உங்கள் ஆவல்களையெல்லாம் நான் பூர்த்தி செய்து விடுவேன்!"

"எனக்கு கலியாணமாகாதிருந்தால் நானே உங்களை வலிய இழுத்து என் இதயத்தோடு அணைத்துக்கொள்வேன். அப்பொழுது உங்களை வேண்டிக்கொள்ளும்படியாகவும் இருந்திருக்காது; உங்கள் அன்பிற்காக நான் தவங்கிடக்கும்படியாகவும் நேர்ந்திருக்காது!"

"சாலினி தேவி! அசோக் குமார் உங்களை இதய பூர்வமாகக் காதலிக்கவில்லையா?"

"நவீன்! அவருக்கு என்னிடம் அன்பு ஏது? வேறு யாரிடமோ அவர் காதல் கொண்டுவிட்டார். இரவும் பகலும் அங்கேயே இருக்கிறார். வசிப்பதற்கு வீடும், உண்பதற்கு உணவும்தான் அவரைக் கலியாணம் செய்துகொண்டதற்கு எனக்குக் கிடைத்த வெகுமதிகள். உலகம் அவரை பெரிய மேதாவி, மகான் என்றெல்லாம் நினைக்கிறது. ஆனால் அவருடைய துர்நடத்தைகள் எனக்குத்தான் தெரியும்!"

இதைக் கேட்ட நவீன் சந்தரின் முகம் கோபத்தால் சிவந்தது. அவள் பேச்சைக் கேட்டு நவீன்சந்தருக்கு அவளிடம் சொல்லொணாத வெறுப்பு ஏற்பட்டது. ஆனால் தன்னை சீக்கிரம் சமாளித்துக்கொண்டு, "இது ரொம்ப அநியாயம் தான்!" என்று மெல்லிய குரலில் கூறினார்.

"என்னைக் காப்பாற்றுவதற்குத்தான் கடவுள் உங்களை அனுப்பியிருக்கிறார். இல்லாவிடில், இத்தனைநாள் நான் தற்கொலை செய்து கொண்டிருப்பேன். எனக்கு நீங்கள் அடைக்கலம் அளிக்காவிட்டால் கட்டாயம் விஷத்தைத் தின்றுதான் உயிர்விடப் போகிறேன்!"

"சாலினி! அழகிய முகத்தைவிட மாசற்ற இதயத்திற்குத் தான் நான் அதிக மதிப்புக் கொடுப்பேன். அது ஆணா யிருந்தாலும் சரிதான், பெண்ணா யிருந்தாலும் சரிதான்!"

நவீன் சந்தரின் இந்த வார்த்தைகளினால், அவர் தன் பக்கம் வளைந்து விட்டாரென்று சாலினி எண்ணிக்கொண்டாள். இன்னும் இனிமையாகப் பேசி அவரை வசியப்படுத்தத் தீர்மானித்தாள்.

"மனிதனின் உடல் தளர்ந்து போகக்கூடும். காலமானது மனிதனின் நிமிர்ந்த முதுகை கூனச் செய்து விடுகிறது. கரிய கூந்தல் நரைக்கத் தொடங்கிவிடுகிறது. ஆனால் நவீன் சந்தர், என் இதயம் எப்பொழுதும் ஒரே மாதிரியாகத்தானிருக்கும். என் காதல் சூரியனைப்போல் அசையாதது, உண்மையானது, எப்பொழுதும் அழிவில்லாதது!"

"ஆனால், நீ சொல்வதுபோல் உண்மையாகவே இதய பூர்வமாக என்னைக் காதலிப்பாயா!"

"எவ்வளவு தூரம் நான் உங்களை காதலிக்கிறே னென்று வார்த்தைகளினால் தெரிவிக்க முடியாது. நவீன்! என் அந்தரங்கத்தை வெளியிட வார்த்தைகளுக்கு சக்தி எது? என் இதயத்தை எவ்வாறு உங்களுக்கு திறந்து காட்டுவேன்!" என்று கூறிக்கொண்டே தன்னிரு கரங்களையும் நவீன் சந்தரின் தோள்மீது வைத்துக் கொண்டாள்.

"இவ்வளவு சீக்கிரம் ஒருவரையொருவர் ஸ்பரிசித்துக் கொள்வது காம விகாரமேயன்றி, உண்மையான காதலா காது. இந்தமாதிரி ப்ரேமையில் எனக்கு நம்பிக்கை கிடை யாது, சாலினி!" என்று கூறிவிட்டுத் தன் தோள்களி லிருந்துஅவள் கையை அகற்றினர்.

"நட்சத்திரங்கள் உள்ளனவா வென்று உங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். உலகில் ஒவ் வொரு வஸ்துவும் அழிந்து போகக் கூடும். ஆனல், நவீன்! என் காதல், அந்தரங்கமானது, அழிவில்லாதது, அசையாதது!"

"ஆனல், அசோக் குமாரின் முகம்போல் என் முகமும் தீப்பட்டு விகாரப்பட்டுவிட்டால்......?"

"அதற்காக என் காதல் மாருது! அந்த மாதிரி நேர்ந்துவிட்டால் என் உடலையே எரித்துக்கொள்வேன்!"

"ஒரு வேளை என் பணமெல்லாம் தொலைந்து நான் ஏழையாகி விட்டால்......?"

"என் அன்பரே! அரண்மனையிலிருக்கும்போது எவ்வளவு அன்புடனிருக்கிறேனே, அதே போல் குடிசை யிலிருக்கும்போதும் தங்களுக்காக என் உயிரைக்கொடுப் பேன்!"

"இன்னும் சகல சௌபாக்கியங்களும் நிறைந்த வேறு இடம் கிடைத்துவிட்டால், அப்பொழுது......?"

"நவீன்! சமயத்திற்குத் தக்கவாறு மாறுவது உண்மையான காதலாகாது. இதய பூர்வமான காதலை அசைக்க முடியாது, அகற்ற முடியாது. என் மனதை நீங்கள் இன்னும் அறிந்து கொள்ளவில்லை!"

"சாலினி! அந்தரங்கமான உன் அன்பை தெரிந்து கொண்டு விட்டேன். நீ சொல்வது சரிதான்! என்னுடன் ஜர்மனிக்குச் செல்ல தயாராயிரு! ஆனல், அசோக் குமார் இதைப் பொறுப்பாரா? கட்டாயம் நம்மிருவரில் யாரை யாவது ஒருவரை கொன்றுதான் விடுவார்! நம் வழியில் கட்டாயம் அவர் குறுக்கே நிற்பார்......!" என்று கூறிக் கொண்டே நவீன் சந்தர் ஏதோ யோசிப்பது போல் பாவனை செய்தார்.

"அவரொன்றும் தடை செய்ய மாட்டார். இந்த விஷயத்தில் அவர் தானே விலகி விடுவார்!" என்று சாலினி தைரியம் கூறினள்.

"சாலினி! நீ வெகுளி. உனக்கு உலகப் போக்கு ஒன்றும் தெரியவில்லை. தன்னுடைய, காதல், கீர்த்தி இவ்விரண்டிற்கும் தீங்கு ஏற்பட்டு விட்டால் மனிதன் எவ்வளவு துஷ்டனுகப் போய்விடுகிருனென்பதை நீ அறியவில்லை. நீ என்னுடன் வருவதால் ப்ரொபஸர் இரண்டையும் இழந்துவிடுகிருர். அதனல் கட்டாயம் அவர் ஏதாவது செய்வார்......!"

"அப்படியானல் என்ன செய்வது?" என்று சாலினி கவலையுடன் கேட்டாள்.

"அதற்கு ஒரே வழிதான் இருக்கிறது! அவரைக் கொன்றுவிட்டு அந்தப் பத்தாயிரம் பவுனையும் சுருட்டிக் கொள்ள வேண்டும். அதைத்தான் ஏன் விடவேண்டும்?"

"சரி, நவீன்! நான் தயாராயிருக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள்!"

"நீ அவரை முடித்து விடவேண்டும்!"

"ஆனால், போலீஸ்.........?"

"போலீஸா? அதன் வாயை நான் அடக்கிவிடுகிறேன்!" என்று நவீன் சந்தர் கூறினார். அவர் முகத்தில் சொல்ல முடியாத வெறுப்புத் தோன்றியது. அதை மறைப்பதற்காக அவர் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டார்.

## 45

ஏழெட்டு தினங்களுக்குப் பிறகு இன்றுதான் அசோக் குமார் வீட்டிற்கு வந்தார். நவீன் சந்தரின் சிநேகம் சாலினியிடம் என்ன மாறுதல் செய்திருக்கிறதென்று அறிய விரும்பினார். ஆனால், தானாக சாலினியிடம் பேச்சுக் கொடுக்க அவருக்குப் பிடிக்கவில்லை.

மணி எட்டு அடித்துவிட்டது. கோபிநாத் சமையல் செய்துகொண்டிருந்தான். சாலினி தன்னறையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். அசோக் குமார் காரிலிருந்து இறங்கி தன்னறையை நோக்கிச் சென்றார். சாலினி தன் அறையிலிருந்து அவரைத்

தொடர்ந்து வருவதை யறிந்தும் அறியாதவர் போல் உள்ளே சென்று பூட்ஸ் நாடாவை அவிழ்க்கத் தொடங்கினர்.

சாலினி வாயிற்படியில் சாய்ந்து கொண்டு புன்முறுவலுடன் "இன்று சூரியன் எங்கிருந்து இவ்வளவு சீக்கிரம் தரிசனம் தர வந்துவிட்டார்? ரொம்ப அபூர்வமாயிருக்கிறதே!" என்ருள். எதற்காக இந்த நாடகம் நடிக்கிருளென்று அசோக் குமார் அறிந்துகொண்டுவிட்டார். ஒருவேளை வழி தவறியிருக்கலாம்!" என்று சுருக்கமாகப் பதில் அளித்தார். இதற்குமேல் பேச அவருக்குப் பிடிக்கவில்லை. சாலினி அவரருகிலிருந்த சோபாவில் வந்து உட்கார்ந்து கொண்டு இனிமையான குரலில், "ஆமாம்! இப்பொழுது நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்?" என்ருள்.

"நானு? இப்பொழுது சாப்பிடப் போகிறேன்!" என்று வேறு எதற்காகவோ இந்தக் கேள்வியை சாலினி கேட்கிருளென்று தெரிந்தும் அசோக் குமார் வேண்டுமென்றே இந்த மாதிரி பதிலுரைத்தார்.

"சாப்பாட்டைப்பற்றி நான் கேட்கவில்லை! என் விஷயமாக என்ன யோசித்திருக்கிறீர்களென்றுதான் கேட்கிறேன்!" என்ருள் சாலினி. அவள் மனம் இன்னும் என்னென்ன கேள்விகள் கேட்பதென்பதைப்பற்றி தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தது.

"உனக்காக நான் எதையென்று யோசிப்பது? நீ படித்தவள்; நாகரிகமானவள் உனக்குத் தெரியாததா?

அசோக் குமாரின் இந்த வார்த்தைகளினுல் சாலினியின் முகம் கோபத்தால் சிவந்தது. ஆனுல், இந்த சமயம்

கோபத்தைக் காண்பிப்பது உசிதமல்லவென்று தன்னை அடக்கிக் கொண்டாள். நயமாகப் பேசியே தன் காரியத்தை முடித்துக்கொள்ள விரும்பினுள்.

"நாமிருவரும் சமரஸத்துடனிருக்க விரும்புகிறேன்! அதுதான் எனக்குச் சரியாகப் படுகிறது!"

"இந்த எண்ணம் நீடித்து நிற்குமா என்று தான் எனக்கு சந்தேகம் ஏற்படுகிறது!" என்று கூறிக் கொண்டே அசோக் குமார் கோட்டை கழற்றினுர்.

"எனக்கு வாழ்க்கையில், சாந்தி, சுகம் கிடைக்க வேண்டுமானுல் தங்களடியில்தான் அவைகள் கிடைக்குமென்பதை நான் இப்பொழுது அறிந்து கொண்டுவிட்டேன்!" என்று கம்மிய குரலில் கூறினுள். கண்ணீரை வரவழைக்கப் பார்த்தாள். ஆனுல், குரலைப்போல் அது சமயத்திற்கு உதவவில்லை.

"வெறும் வார்த்தையா யில்லாமல் உன் எண்ணமே உண்மையில் இவ்வாறு மாறியிருந்தால் ரொம்ப நல்லது தான்!"

"நாளையிலிருந்து நான் க்ளப்பிற்குப் போகப் போவதில்லை. எல்லோருடைய சகவாஸத்தையும் விட்டுவிடுகிறேன். உங்கள் மனதிற்கு உகந்தவாறு நடக்க முயற்சிக்கப் போகிறேன்......!" இவ்வாறு சொல்லிவிட்டு சாலினி நடுவில் நிறுத்தினுள். ஆனுல், அவள் மேலும் பேச அசோக் குமார் விரும்பவில்லை. "நீ இப்படி மாறிவிட்டால் எனக்கு ரொம்ப சந்தோஷம்தான்!" என்ருர்.

"சரி! நீங்கள் நாளை இரவு கட்டாயம் வீட்டில் இருக்க வேண்டும்!" என்று வேண்டிக்கொள்வதைப் போல் கேட்டுக்கொண்டாள் சாலினி.

"நல்லது! அப்படியே யிருக்கிறேன்!" என்றார் அசோக் குமார்.

"அப்பொழுது என்னை நீங்கள் புதுத் தோற்றத்தில் காண்பீர்கள்!" என்று கூறினாள் சாலினி.

"நானும் அந்த சமயத்திலிருந்து என் தோற்றத்தை மாற்றிக்கொள்வேன்!" என்று பதில் அளித்தார் அசோக் குமார்.

"அப்படியானால், கட்டாயம் நாளைக்கு வீட்டிலேயே யிருக்கிறேனென்று சொல்கிறீர்களா?" என்று சஞ்சலத் துடன் கேட்பது போல் பாவனை செய்தாள்.

"கட்டாயம் இருக்கிறேன்!" என்று அவளுக்கு உறுதி கூறிவிட்டு சமையலறைக்குச் சென்றார்.

ஏதேனும் ஒரு விஷயத்தை பிறரிடம் சொல்லலாமா வேண்டாமா வென்று நாம் யோசித்துக்கொண்டிருக்கும் போது அதே விஷயம் அவர்களிடமிருந்து வெளி வந்து விடுகிறது. இந்த மாதிரி வாழ்க்கையில் சில சமயம் ஏற் பட்டுவிடுகிறது. அசோக் குமார் சாப்பிட்டுக்கொண்டே, எந்த காரணத்தை வைத்துக்கொண்டு கோபிநாத்தை இரண்டு தினங்கள் வீட்டை விட்டு வெளியே அனுப்பு வது என்று யோசித்துக் கொண்டிருந்தார். இந்த சமயம் கோபிநாத்தே சொல்லத் தொடங்கினான். "பாபு தாரக்நாத் வித்யாசாலை திறந்திருக்கிறார். நாளை இரவு திறப்பு விழா நடக்கிறது. எனக்குக்கூட அங்கு கொஞ்சம் வேலை கிடைத்திருக்கிறது. அவருக்காக இரண்டு தினங்கள் சேவை செய்ய விரும்புகிறேன். நீங்கள் எனக்கு உத்திரவு கொடுக்கவேண்டும்!"

அசோக் குமாரின் பாரம் குறைந்தது. ஆனால் உடனே அவர் அனுமதி கொடுக்கவில்லை. அசோக் குமார்

"அப்படியானல், நாளையிலிருந்து வித்யாசாலை நடக்கத் தொடங்குமா?" என்ருர்.

"ஆமாம்! நாளைக்கு கல்வி மந்திரி வித்யாசாலையைத் திறந்து வைக்கப்போகிருர். விருந்துகூட உண்டு!" என்ருன் கோபிநாத்.

"நான்கூட நாளைக்கு வந்தாலும் வருவேன்!"

"நான் சாப்பாட்டைத் தயாரித்து வைத்துவிட்டே போகிறேன்!"

"நல்லது! நான் உன்னை அங்கு சந்திக்கிறேன். நீ இரண்டு தினங்கள் சென்று உன்னுலான உதவியைச் செய்!" என்று கூறிக்கொண்டே அசோக்குமார் சாப்பிட்டுவிட்டு எழுந்தார். பிறகு உடைகள் அணிந்து கொண்டு வெளியே சென்ருர்.

# 46

அவசியமான சில சாமான்கள் வாங்குவதற்காக தாரக்நாத் வெளியே சென்றிருந்தார். ருஸ்தம்ஜீ வித்யாசாலையை அலங்கரிப்பதில் ஈடுபட்டிருந்தார்.

பெண்கள் வரவேற்பு கீதத்தை ஒத்திகை செய்து கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் ஏதேனுமோர் வேலையைச் செய்தவண்ணமிருந்தனர்.

கோபிநாத்தும் கூலியாட்களிடம் வேலை வாங்கிக் கொண்டிருந்தான். இந்த சமயம் அசோக்குமாரின் கார்

வந்து நின்றது. கோபிநாத் அசோக் குமாரை அழைத்துக் கொண்டு வித்யாசாலையின் ஒவ்வொரு அறையாக காண்பித்தான். பிறகு ஓர் அச்சடித்த புத்தகத்தை எடுத்து அசோக் குமாரிடம் கொடுத்துக் கொண்டே "இந்தப் புத்தகத்தில் வித்யாசாலையின் ஏற்பாடுகளும் அதன் லட்சியங்களும் விவரிக்கப் பட்டிருக்கின்றன!" என்றான். அசோக் குமார் அதைக் கையில் வாங்கிக்கொண்டு "தாரக்நாத் பாபு இப்பொழுது இங்கே இருக்கிறாரா?" என்றார்.

"ஏதோ சில சாமான்கள் வாங்கி வருவதற்காக வெளியே சென்றிருக்கிறார்," என்றான் கோபிநாத். அசோக் குமார் தாரக்நாத்தை எதற்காக சந்திக்க விரும்புகிறாரென்று கோபிநாத் அறிய எண்ணினான். அதற்குள் அசோக் குமாரே, "சாலினியின் கல்யாணத்திற்கு தாரக்நாத்தின் சம்மதத்தைப் பெற விரும்புகிறேன். அதற்கு அவர் சம்மதிப்பாரா?" என்று தன் மனதிலிருந்ததை தெளிவாகச் சொல்லிவிட்டார்.

"எஜமான்! அவரிடம் கேட்டுத் தெரிவிக்கிறேன். ஆனால், நாளைக்கு திறப்புவிழா நடக்கப் போகிறது. அதனால், நாளைக்கு அவருடன் பேசமுடியாது. நாளை மறு நாள்தான் கேட்கமுடியும். உடனே கேட்டுவிடுகிறேன்!" என்றான் கோபிநாத்.

"இல்லை, கோபிநாத்! நீ நாளைக்கே எனக்கு தெரிவித்து விடவேண்டும்!"

"அப்படியானால், எஜமானியம்மாள் தயாராயிருக்கிறார்களா?"

"ஆம்! அப்படித்தான் தோன்றுகிறது!"

இவ்வாறு கூறிவிட்டாரே யொழிய அவர் முகத்தில் வேதனையின் சாயை படர்ந்திருந்தது. சாலினி இதை ஒத்துக்கொள்வாளா என்ற கேள்வி அடிக்கடி அவர் மனதில் எழுந்துகொண்டிருந்தது. இதற்குள் 'கோபித் தாத்தா, கோபித் தாத்தா' என்று கூப்பிட்டுக்கொண்டே நிசா அவ்வறைக்குள் நுழைந்தாள். அசோக் குமார் நிசாவைப் பார்த்தார். நிசா அசோக் குமாரைப் பார்த்தாள்.

"உங்களை எங்கேயோ பார்த்த ஞாபகமாயிருக்கிறது, அம்மணி!" என்றார் அசோக் குமார்.

"நீங்கள் ப்ரொபஸராயிருக்கும் காலேஜில்தான் நான் படித்துக் கொண்டிருந்தேன். என் பெயர் நிசா. சாலினிதேவி சௌக்கியமா யிருக்கிறாளா?" என்று நிசா சாதாரணமாக விசாரித்தாள். தன் கடைசி வார்த்தையினால் அசோக் குமாரின் மனது பாதிக்கப்படுமென்பதை அவள் எங்ஙனம் அறிவாள்?

"சௌக்கியமாயிருக்கிறாள்!" என்று கூறிவிட்டு கோபிநாத்திடம், "நான் சொன்னதை மறந்துவிடாதே கோபி!" என்று சொல்லிக்கொண்டே வெளியே கிளம்பினார்.

# 47

மறுதினம் சாலினி 'க்ளப்'பிற்குச் சீக்கிரமே சென்று விட்டாள். நவீன் சந்தரின் வரவை எதிர்பார்த்துப் பார்த்து அவள் கண்கள் பூத்துப்போயின. அவளுக்கு சற்றுக் கோபம்கூட வந்தது. ஆனால் சுயகாரியம் அதை அடக்கிவிட்டது. சந்திரன் உதயமாகி விட்டான். 'க்ளப்' நந்தவனம் புஷ்பங்களின் நறுமணத்தினால் மயக்கங்கொண்டிருந்தது. நவீன் சந்தரின் கார் வருவதை சாலினி பார்த்தாள். உடனே தன் ஆடையை சரிப்படுத்திக்கொண்டு நவீன் சந்தரின் காரை நோக்கிச் சென்றாள்.

"ரொம்ப நேரமாக என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டுக்கொண்டே காரிலிருந்து கீழே இறங்கினார். "வெகு சீக்கிரம் கிளம்பி வந்து விட்டீர்கள் போலிருக்கிறது!'' என்றார்.

இந்த மாதிரி கேள்வி அசோக் குமார் கேட்டிருந்தால் சாலினி ரொம்பக் காரமாக பதில் சொல்லியிருப்பாள். ஆனால், இந்த சமயம் அந்தமாதிரி சொல்வதற்கில்லை. நவீன் சந்தரைப் பார்த்துக்கொண்டே, "ஆமாம்! காதலர்களின் கடிகாரம் சற்று வேகமாகத்தான் ஓடுகிறது!'' என்று கூறினாள். இந்த மாதிரி வேடிக்கைகளுக்கெல்லாம் தன்னிடம் பதிலே கிடையாதென்பதைப் போல் முகத்தை வைத்துக்கொண்டார் நவீன் சந்தர்.

கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே, "எனக்கு இன்னும் நேரமாகவில்லை!" என்றார் நவீன் சந்தர்.

"நேற்றைவிட இன்று நேரங்கழித்துத்தான் வந்திருக்கிறீர்கள். சரி! மணி இன்னும் பத்துகூட அடிக்கவில்லை!" என்று அவருக்கு சமாதானமாக சாலினி கூறினாள்.

"அசோக் குமார் இன்று வீட்டிலிருப்பாரா?" என்றார் நவீன் சந்தர்.

"கட்டாயம் இருப்பார். அவ்வரைத் தங்கும்படியாகச் செய்துவிட்டு வந்திருக்கிறேன்!" என்றாள் சாலினி.

"ரொம்ப சரியாய்ப் போய்விட்டது! சரி; க்ளப்பிற்குச் செல்வோம்!" என்று கூறிக்கொண்டே மேலே நடந்தார்.

"இன்று கொஞ்சம் குடித்தாக வேண்டும். ஏனென்றால் அந்தக் காரியத்திற்கு சற்றுத் தெம்பு வேண்டும்!" என்று 'கபே'யின் பக்கம் சென்றாள். நவீன் சந்தர் அவளைப் பின்தொடர்ந்தார். அங்கே டாக்டரும், மனோரமாவும் முன்பே உட்கார்ந்து குடித்துக் கொண்டிருந்தனர்.

"வாருங்கள், மிஸ்டர், நவீன்!" என்று டாக்டர் வரவேற்றார்.

"தங்கள் சிநேகிதர் எங்கே?" என்று கேட்டார் நவீன் சந்தர். நடுவில் மனோரமா, "ஒருவேளை உமேச் சந்தர் க்ளப்பை விட்டு நின்று விட்டாரோ, என்னவோ!" என்றார்.

"ஏன்?"

"நான் சொல்வது தவருயிருந்தால் அதற்குக் காரணம் அருகிலேயே உட்கார்ந்திருக்கிருர்கள்!" என்று டாக்டர் முதலில் சாலினியையும், பிறகு நவீன் சந்தரையும் பார்த்துவிட்டுக் கூறினர். நவீன் சந்தரும் சாலினியைப் பார்த்தார்.

"ஆமாம்! எப்பொழுதும் இந்த மாதிரி ஜனங்களுக்கு இரண்டுபேர் சிநேகமாயிருப்பதைக் கண்டால் பிடிக்காது" என்ருள் சாலினி.

"ஆம், ஆம்! எப்பொழுதும் இப்படித்தான். உன் கலியாணம் சில ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனல், அது எவ்வளவு மேலான லட்சியம் கொண்டது!" என்று மனோரமா பரிகாசமாகக் கூறினள்.

"ஸேட்ஜீயை மணந்துகொண்டு, எந்த லட்சியத்தை நீ நிலை நிறுத்தினயோ, அதற்கு இதொன்றும் குறைந்து போய்விடவில்லை!" என்று சாலினி பதிலுக்கு கூறினள்.

"அர்த்தமில்லாமல் எதற்குப் பேசுகிறீர்கள்?" என்று டாக்டர் சண்டையை மேலும் வளர்க்காமல் நிறுத்துவதற்காக கூறினர்.

சாலினி குடித்து முடித்து விட்டாள். நவீன் சந்தர் அவள் கையைப் பிடித்துக்கொண்டு பூந்தோட்டத்திற்கு அழைத்துச் சென்ருர். "முக்கியமான சில விஷயங்கள் சொல்வதற்காகத்தான் உன்னை இங்கு அழைத்து வந்திருக்கிறேன். சாலினி! இன்று இரவு இரண்டரை மணிக்கு நீ இதைச் செய்யவேண்டும். அந்த சமயம் ப்ரொபஸர் நன்ருகத் தூங்கிக்கொண்டிருப்பார். நீ அந்த சமயம் ஒரு வித தயக்கமுமில்லாமல் காரியத்தை முடித்து விட வேண்டும். ஒருவேளை விழித்துக் கொண்டால்கூட அன்பா

யிருப்பதுபோல் நடித்து காரியத்தை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். சரியாக மூன்று மணிக்கு நான் அங்கு வந்து விடுவேன். ப்ரொபஸர் தற்கொலை செய்து கொண்டு விட்டாரென்ற வதந்தியைப் பரப்பிவிட வேண்டும். தெரிந்ததா?'' என்றார் நவீன் சந்தர்.

"சரி! தெரிந்து கொண்டேன்!''

"இந்தா! இதில் ஆறு ரவைகள் இருக்கின்றன!'' என்று சொல்லிக்கொண்டே நவீன் சந்தர் அவள் கையில் ஒரு ரிவால்வரைக் கொடுத்தார். ஒரு தரம் சாலினியின் கைகள் நடுங்கின.

"நீ காரியத்தை செய்து முடிப்பாயென்று நான் நம்பிக் கொண்டிருக்கலாமா?''

"நிச்சயமாக நான் செய்துமுடிப்பேன்!''

"சரி! நான் சென்று வருகிறேன். நீ காரியத்திலே கண்ணாயிரு! என்று கூறிவிட்டு காரில் ஏறிக்கொண்டு கிளம்பினார். காரை மோட்டார் கம்பெனியில் திருப்பிக் கொடுத்துவிட்டு, விஞ்ஞான சாலைக்குச் சென்று உடைகளை மாற்றிக்கொண்டு வீட்டிற்கு வந்தார். காரை 'போர்ச்' சில் நிறுத்திவிட்டு உள்ளே சென்று படுக்கையில் படுத்துக் கொண்டார். ஆனால், தூக்கம் வரவில்லை. அடிக்கடி சுவரில் மாட்டியிருக்கும் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே படுத்துக்கொண்டிருந்தார்.

# 48

நவீன்சந்தர் இல்லாமல் க்ளப்பிலிருப்பது சாலினிக்கு முள்ளிலிருப்பது போலிருந்தது. இரண்டு மணிநேரமும் இரண்டு யுகமாக அவளுக்குத் தோன்றியது. மறுபடியும் ‘கபே’யிற்குச் சென்று மது அருந்தத் தொடங்கினள். தான் செய்யப் போகும் காரியத்திற்கு அதிகமாகக் குடித்தால் தடங்கல் ஏற்பட்டுவிடுமே யென்று பயந்தாள். இந்த சமயத்தில் குடிப்பதினல் ஒரு குஷியும் அவளுக்கு ஏற்படவில்லை. கடிகாரத்தை மறுபடியும் பார்த்துக்கொண்டாள். இன்னும் ஒரு மணி நேரமிருந்தது. அவ்விடத்தை விட்டுக் கிளம்பி தன் காரில் அமர்ந்து வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

வித்யாசாலை வழியாக மோட்டார் சென்றுகொண்டிருந்தது. அங்கு விருந்து நடந்து கொண்டிருந்ததை சாலினி கவனித்தாள். தாரக்நாத், கோபிநாத் இன்னும் யாராரோ அங்குமிங்கும் சுற்றிக்கொண்டிருந்தனர். என்ன விஷயமென்று அறிய அவளுக்கு ஆவலாயிருந்தது. ஆனல், தைரியம் இடங்கொடுக்க வில்லை. கோபிநாத் இங்கிருப்பதைப் பார்த்துச் சற்று சந்தோஷங்கொண்டாள். ஆனல், மறுகணம் ஒருவேளை அசோக் குமார் இங்கு வந்திருக்கிருரோ என்னவோ வென்ற சந்தேகம் எழுந்தது.

வீதியில் நிறுத்தியிருந்த கார்களை ஒவ்வொன்றாகக் கவனித்தாள். அவைகளில் அசோக் குமாரின் கார் காணப் படவில்லை. அதற்குள் விருந்து முடிந்து ஜனங்கள் எழுந்து விட்டனர். சாலினியும் காரை ஓட்டிக்கொண்டு கிளம் பினாள்.

பங்களாவிற்குள் நுழைந்ததுமே அசோக் குமாரின் கார் நிறுத்தி யிருப்பதைக் கண்டு சாலினி சந்தோஷித் தாள். கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். வீட்டில் கோபி இல்லாததால் ரிவால்வரை மறைக்க வேண்டிய அவசியம் கூட அவளுக்கு ஏற்படவில்லை. தடைகள் ஏதுமில்லாததால் உத்ஸாஹம் அவளுக்கு உண்டாகி யிருந்தது.

மூச்சை அடக்கிக் கொண்டு அடிமேலடி வைத்து அசோக் குமாரின் அறைக்குச் சென்றாள். அவள் மன தில் சிந்தனைப் புயல் வீசியது. சற்று நேரம் பிரமித்து நின்றாள். இதற்குள் மணி மூன்றடித்து அவள் சிந்தனை யைக் கலைத்தது. நவீன் சந்தரின் கார் வருகிற சப்தம் கேட்கிறதா வென்று சற்றுக் கவனித்தாள். அவள் மனம், “இப்பொழுது நவீன் சந்தர் வந்து கொண்டிருப்பார். நான் இப்படி நின்று கொண்டிருந்தால் அவர் என்ன நினைப்பாரோ? அவர் கட்டிய கோட்டைகளெல்லாம் வீழ்ந்துவிடும். எண்ணிய எண்ணங்களெல்லாம் பாழாகி விடும்!” என்று யோசித்தது. சற்று நேரத்திற் கெல்லாம் தன்னை சமாளித்துக்கொண்டு ரிவால்வரை எடுத்து ப்ரொ பஸரை நோக்கிச் சுட்டாள்!

“ஹா!” என்று ஓர் அலறல் கேட்டது. மேலே போர்த்தி யிருந்த போர்வை அகன்றது. அசோக் குமா ரின் படுக்கையில் நவீன் சந்தரைப் பார்த்ததும், சரீரத்தில் துளி இரத்தம்கூட இல்லாதவளைப்போல் பிரமித்து, கல்லாய்

நின்ருள். சாலினி முகம் பயத்தால் வெளிரடைந்தது. நடுங்கிய குரலில், "நவீன்! நீங்களா?" என்ருள்.

"ஆம்! நான்தான்! ஐயோ......! இன்னும் கொஞ்ச நேரம்தான் நான் இருப்பேன். நான் ஒன்று உன்னைக் கேட்டுக் கொள்கிறேன். ஹா......ஐயோ!"

"நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்?"

"அதை யெல்லாம் இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்க நேரமில்லை! அந்த ரிவால்வரை என்னிடம் கொடு!"

"என்? எதற்கு?"

"நாம் இருவரும் சேர்ந்தாற் போல் இறப்பதற்குத் தான்! நீ முன்பு சொல்லவில்லையா, சாலினி! ஹா...... ஐயோ!"

"நான் உங்களிடம் ரிவால்வரைக் கொடுக்க மாட்டேன்! நான் எதற்காக சாக வேண்டும்?"

"இவ்வளவுதாஞ உன் அன்பு! இவ்வளவு நாளாக என்னை ஏமாற்றிக் கொண்டேயா வந்திருக்கிருய்?" என்று கூறிக்கொண்டே நவீன் சந்தர் 'போனின்' ரிஸீவரைக் கையிலெடுத்துக் கொண்டு, "இதோ போலீஸுக்குத் தகவல் தெரிவித்துவிடுகிறேன்!" என்ருர்.

"இப்பொழுது அதுவும் நடக்காது!" என்று சொல்லிக் கொண்டே நவீன் சந்தரின் கையிலிருந்த ரிஸீவரை சாலினி பிடுங்கிக் கொண்டாள்.

"அதைப் பிடுங்கிக் கொண்டதால் மறைத்துவிட முடியாது. என் சவத்தை என்ன செய்வாய்? ப்ரொபஸரிடம் என்ன சொல்வாய்? இரத்தத்தை மறைக்க முடியுமா?"

"ப்ரொபஸரின் மனதில் என் பேரில் நம்பிக்கை ஏற்படும் முறையில் நடந்து வந்திருக்கிறேன். அதனால் திருடனைப் போல் என் மானத்தை யழிக்க நீங்கள் வந்ததாக கூறிவிடுவேன். என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இந்தக் காரியத்தை செய்யும்படி நேர்ந்ததென்றும் சொல்லிவிடுவேன்!"

"அப்படியானால் நீ அசோக் குமாரை காதலிக்கிறாயா?"

"ஆமாம்! உண்மையாக அவரைத்தான் காதலிக்கிறேன்!"

நவீன் சந்தர் கடிகாரத்தை நோக்கினார். மெல்ல எழுந்திருக்க முயன்று கொண்டே, "நல்லது, சாலினி! நான் விடை பெற்றுக்கொள்கிறேன். இனிமேல் நீ உண்மையான பதிவிரதா சிரோமணியா யிருப்பாயென்று நினைக்கிறேன். நீ என்னுடையவளாகா விட்டாலும், அசோக் குமாரின் அந்தரங்க மனைவியாயிருந்து கொண்டிரு!" என்றார்.

சந்திரனின் ஒளி கொஞ்சம் கொஞ்சமாக மங்கிக் கொண்டு வந்தது. பொழுது விடிந்து விட்டதென்பதை அறிவிக்க எங்கிருந்தோ ஒரு கோழி 'கொக்ரகோ' வென்று கூவியது.

நவீன் சந்தரின் தோற்றம் மாறுதலடையத் தொடங்கியது. சற்று நேரத்திற்கெல்லாம் அவ்விடத்தில் அசோக் குமார் நின்றார்!

"அட! இது என்ன?" என்று ஆச்சரியத்துடனும் பயத்துடனும் சாலினி கூவினாள்.

"நான்தான் அசோக் குமார்! முன்பு நவீன் சந்தராயிருந்ததும் நான்தான்!! நவீன் சந்தரை நீ கொன்று விட்டாய்; அசோக் குமார் உயிருடனிருக்கிறான். விபரீ

தமான உன் ஆவல்களையும் எண்ணங்களையும் நவீன் சந்தருடன் புதைத்து விடு! சாலினி நீ பணத்தை விரும்பினய்; ஆள் அழகைக் கண்டு மயங்கினய்; அவ்விரண்டையும் நவீன் சந்தர் உருவத்தில் உனக்கு அளித்து விட்டேன்.

அன்புடைய இதயத்தை நீ அடைய விரும்பினல் அது அசோக் குமாரிடம்தான் கிடைக்கும்.

நீ யாரை விரும்புகிருயென்று, சொல்! அசோக் குமாரையா, அல்லது நவீன் சந்தரையா?''

சாலினி தலை குனிந்து கொண்டாள். மிகவும் மெல்லிய குரலில், "உண்மையாக நான் அசோக் குமாரைத்தான் விரும்புகிறேன். உங்களைத்தான்...!'' என்று கூறிக்கொண்டே அவர் காலில் விழுந்தாள்.

"நான் ரொம்ப தவறு செய்து விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்!'' என்ருள். அவள் கண்களிலிருந்து உஷ்ணமான கண்ணீர் பெருகி அசோக் குமாரின் கால்களை நனைத்தது.

"நீயும் உன் பாபங்களை தொலைத்துக் கொள், சாலினி!''

"எந்த விதமாகப் போக்கடித்துக்கொள்வது, நாதா?''

"இதோ, இந்த ரிவால்வரின் மூலமாகத்தான்!''

"சரி! நான் தயாரா யிருக்கிறேன்!'' என்று கூறிவிட்டு சாலினி தயாராக நின்ருள். அவள் உயிர் விடத் துணிந்து விட்டாள். அசோக் குமார் தொடர்ச்சியாக மூன்று தரம் சுட்டார். ஆனல் சாலினி அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

"உன்னைப் பரிட்சை செய்வதற்காகத்தான் இதைச் செய்தேன். துப்பாக்கியில் ரவைகளில்லை. வெறும் சப்தம் தான்!" என்று கூறிவிட்டு அவளைத் தன்னுடன் அணைத்துக் கொண்டார்.

"தங்கள் நிழலில் வந்த பிறகுதான் என் மனம் நிம்மதி அடைகிறது. சந்தோஷமும் ஏற்படுகிறது. நான் வழி தவறி மேல் நாட்டு நாகரிகத்தில் மூழ்கி நம் நாட்டு லட்சியங்களை யெல்லாம் மறந்திருந்தேன். பண ஆசை கொண்டு பதிசேவையை மறந்தேன்!" இனிமேல்தான் என் வாழ்க்கையே ஆரம்பமாகப் போகிறது!" என்று கண்ணீர் விட்டவண்ணம் சாலினி கூறிக்கொண்டிருந்தாள்.

"சாலினி! தவறான பாதையில் சென்றுகொண்டிருப்பவர்கள் நேரான பாதைக்கு வருவது லகுவான காரியமல்ல. நான் கூடத்தான் ஒரு சமயம் வழிதவறி விட்டேன். நான் செய்த பிரசங்கத்தில் எத்தனை அநாவசியமான விஷயங்களை சொல்லிவிட்டேன்! உன் காரியங்களுக்கெல்லாம் குற்றவாளி நான்தான்!" என்றார் அசோக் குமார்.

திறந்திருந்த கதவின் வழியாக கோபிநாத் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தான். அவன் அங்கு எப்பொழுது வந்தானோ தெரியாது. ஆனால், அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. ஏன்? அது கோபிநாத்துக்குத்தான் தெரியும்.

அவர்களின் புது வாழ்க்கையை அறிவித்துக் கொண்டே சூரியன் உதயமானான். "சாலினி, சூரிய நமஸ்காரம் செய்வோம், வா! நம் புனர்ஜன்மத்தின் மங்களகரமான காலை நேரம் இது!" என்றார் அசோக் குமார். சாலினி அசோக் குமாரை பின் தொடர்ந்தாள். அவர்களிருவரும் முன் மாடியிலிருந்து நமஸ்காரம் செய்து

கொண்டிருக்கும் போது கோபிநாத்தின் இருமல் சப்தம் கேட்டது. "கோபி......!" என்று அசோக் குமார் ஏதோ சொல்ல வாயெடுத்தார். அதற்குள் கோபிநாத் பேச ஆரம்பித்துவிட்டான். "எனக்கு எல்லாம் தெரியும், எஜமான்! நான் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன், இன்று என் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. நான் டீ தயாரிக்கிறேன். அதற்குள் நீங்கள் ஸ்நானம் செய்து விட்டு வாருங்கள். இன்றுதான் உங்களுக்கு கலியாணம் நடக்கப் போகிறது!" என்று குதித்தான் கோபிநாத்.

"கலியாணப் பெண் யார், கோபி?" என்று புன்முறுவலுடன் சாலினி கேட்டாள்.

"நீங்களிருவரும் என்னுடன் வாருங்கள். நான் எல்லாம் சொல்லிவிடுகிறேன்!" என்றான் கோபிநாத். சாலினி இன்று கோபிநாத்தின் இஷ்டப்படியே தன்னை அலங்கரித்துக்கொண்டாள். மஞ்சள் நிறப்புடவை, அணிந்துகொண்டு, நெற்றியில் குங்குமம் இட்டுக்கொண்டிருந்தாள். சகல சௌபாக்கியவதியாக விளங்கினாள். அசோக் குமாரை கூட கோபிநாத் மாப்பிள்ளையைப் போல் அலங்கரித்திருந்தான். தன்னையும் கொஞ்சம் சீர்ப்படுத்திக் கொண்டிருந்தான். மூவரும் ஒரே காரில் உட்கார்ந்து கொண்டு வித்யாசாலையை நோக்கி சென்றனர்.

# 49

ருஸ்தம்ஜீயும், கோபிநாத்தும் வித்யாசாலையின் எல்லா இடங்களையும் அசோக் குமாருக்கும், சாலினிக்கும் காண்பித்தார்கள். ஓரிடத்தில் பெண்கள் சமயல் செய்யக் கற்றுக்கொண்டிருந்தனர். இன்னேரிடத்தில் வீட்டு வைத்தியம் கற்பிக்கப்பட்டு வந்தது. திறமையுடன் குடும்பத்தை நிர்வாகம் செய்யும் முறையையும், குழந்தை வளர்ப்பைப் பற்றியும் ஆசிரியைகள் சொற்பொழிவு நடத்திக்கொண்டிருந்தனர். தருமங்கள், சாஸ்திரங்கள் இவைகளைப்பற்றி விஞ்ஞான முறையில் பாடங்கள் நடந்து கொண்டிருந்தன. ஓர் அறையில் நிசா குடும்பத் தத்துவங்களைப்பற்றி கற்பித்துக் கொண்டிருந்தாள். சாலினியைக் கண்டதும் ஓடோடி வந்தாள். "இங்கு வழி தவறி வந்துவிட்டீர்களா, சாலினி தேவி?" என்று கூறிக் கொண்டு வந்தவள், அசோக் குமாரைப் பார்த்ததும் சங்கோஜத்துடன் ஒதுங்கிக்கொண்டாள்.

"சாலினி உன்னுடைய சிஷ்யையாயிருப்பதற்காக வந்திருக்கிருள், நிசா!" என்ருர் அசோக் குமார் சிரித்த வண்ணம்.

நிசா ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் தாரக்நாத் வந்துவிட்டார்.

"பாபு வருகிறார்!" என்றான் கோபிநாத்.

வெட்கத்தினால் தாரக்நாத்தை பார்க்கக்கூட சாலினியால் முடியவில்லை. அசோக் குமாரின் பின் புறமாக மறைந்து கொண்டு நின்றாள். அவர்களருகில் தாரக்நாத் வந்ததும் கோபிநாத், "நீங்கள் இன்று சிறிது நேரத்திற்கு சாஸ்திரிகளாயிருக்கிறீர்களா?" என்றான். தாரக்நாத் சாலினியையும், அசோக் குமாரையும் பார்த்தார். சாலினி தலையைக் குனிந்து கொண்டிருந்ததால் அவரால் அவளை நன்றாகப் பார்க்க முடியவில்லை. "ஏன், கோபி! எதற்காக என்னை சாஸ்திரிகளாகச் சொல்கிறாய்? நான் சாஸ்திரிகளாக இப்பொழுது என்ன அவசியம் ஏற்பட்டிருக்கிறது?" என்றார் தாரக்நாத்.

"ஓர் அவசியம் ஏற்பட்டிருக்கிறது, பாபு! ஒரு கலியாணத்தை நீங்கள் நடத்திவைக்க வேண்டும்!"

"யாருடைய கலியாணத்தை?"

"ஒரு கணவனுக்கும், மனைவிக்கும்!" என்று சிரித்துக் கொண்டே கோபிநாத் கூறினான். அவன் பேச்சைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர்.

"என் எஜமானுக்கும், சாலினிக்கும் கலியாணம் செய்து வைக்கவேண்டும். உங்கள் ஆசீர்வாதத்தை அவர்கள் பெற வேண்டும்!" என்றான். கோபத்தினால் தாரக்நாத் ஏதேனும் கடுமையாகப் பேசுவாரென்று எல்லோரும் எண்ணினர்.

ஆனால், அவர் சாலினியின் அருகில் சென்று அவள் கண்ணீரை துடைத்துக்கொண்டே "சாலினி! வருத்தப் படாதே, அம்மா! யார்தான் தவறு செய்யாதிருக்கிறார்கள்? நீ செய்த தவறுகளுக்கெல்லாம் குற்றவாளி நான் தான்! காரணமும் நான் தான்! நீ இந்த மாதிரி நடந்து கொண்டிராவிட்டால் இந்த வித்யாசாலை ஏற்பட்டிராது.



ERSITY EXTENSION LI

உன்னால் எத்தனையோ பெண்களின் வாழ்க்கை நல்ல முறையில் அமையப் போகிறது. இந்த வித்யாசாலையை நிர்மாணித்த பிறகுதான் என் மனம் சாந்தியடைந்திருக்கிறது. இனி நீ என் எண்ணங்களுடன் கலந்து எனக்கு உதவி புரிந்து கொண்டிரு! இப்பொழுது, நான் இழந்திருந்த என் பெண் ரத்தினமும் எனக்குக் கிடைத்துவிட்டாள்!'' என்று முடித்தார்.

"பண்டிட்ஜீயின் உபந்யாசம் பின்னால் நடக்கும்!'' என்று கோபிநாத் சிரித்துக்கொண்டே கூறினான்.

"கன்யாதானம் யார் செய்து கொடுப்பார்கள்?" என்றார் தாரக்நாத்.

"பெண்ணின் தகப்பனார்தான்!'' என்றார் ருஸ்தம்ஜீ.

"இல்லை, இல்லை! நீங்கள் தான் செய்து கொடுக்க வேண்டும். ஏனென்றால், நான்தான் சாஸ்திரிகள் வேலையை ஒப்புக்கொண்டு விட்டேனே!'' என்று கூறி சிரித்தார் தாரக்நாத்.

எல்லோரும் கலியாண ஹோம மேடைக்குச் சென்றனர். ருஸ்தம்ஜீ சாலினியின் கைகளை அசோக் குமாரின் கைகளில் ஒப்படைத்தார். அவர்களிருவருடைய உள்ளத்திலும் பொங்கி எழுந்த ப்ரேமை வெள்ளமானது நேத்திரங்களின் மூலம் ஆனந்தக் கண்ணீராகப் பெருகியது. அங்கிருந்த ஒருவராவது இதைக் கவனிக்கத் தவறவில்லை.

* * *

இதில் குற்றவாளி யார் என்று அவரால் சொல்லக் கூடுமாவென்று தாரக்நாத் அடிக்கடி யோசித்துப் பார்த்தார். ஆனால், யாரென்று அவரால் நிச்சயம் செய்ய முடியவில்லை.

UNIVERSITY LIB